ஆரம்பக் கல்வி

15 9-10

மலா—சிங்கப்பூர், 1954

T15m211,N40
N54.15-9-101
208971

ஆரம்பக்கல்வி

ELEMENTARY EDUCATION

SEPTEMBER 1954



ஆரம்ப ஆசிரியர், திரு. M. தேவராஜு

ஆரம்பக்கல்வி ஆபீஸ்
94-95, புதுத் தெரு
மண்ணடி, சென்னை-1

481

ASSOCIATION PUBLISHING HOUSE

"ARAMBA KALVI OFFICE"

94/95, New Street, Mannady P. O. Madras-1.

POST BOX NO. 1818

"ஆரம்பக்கல்வி" இனாம்

ஒன்று முதல் ஐந்தாம் வகுப்பு வரையில், எமது "**புதுமுறை சங்க வாசகங்களை**" அல்லது "**வீரபாண்டியன் தமிழ் வாசகங்களை**" பாட புத்தகங்களாக, அல்லது ரூ. 50-க்குக் குறையாமல் இதர பாட புத்தகங்களுக்கு ஆர்டர் கொடுத்து ஆதரிக்கும் எய்டெட், பஞ்சாயத்து, லேபர் ஆரம்பப் பாடசாலைகளுக்கு, "**ஆரம்பக்கல்வி**" மாதப் பத்திரிகையை இனாமாக மாதாமாதம் அனுப்பிவைக்கப்படும்.

புதுமுறை சங்க வாசகங்கள்

	புத்தகத்தின் விலை	கெஜட் பக்கம்	அங்கீகாரமான தேதி
முதல் வகுப்பு	0 4 0	19	19-5-'54
இரண்டாம் வகுப்பு	0 5 0	22	19-5-'54
மூன்றாம் வகுப்பு	0 7 0	23	19-5-'54
நான்காம் வகுப்பு	0 8 0	23	19-5-'54
ஐந்தாம் வகுப்பு	0 9 0	23	19-5-'54

வீரபாண்டியன் தமிழ் வாசகங்கள்

முதல் வகுப்பு	0 4 0	25	19-5-'54
இரண்டாம் வகுப்பு	0 5 0	25	19-5-'54
மூன்றாம் வகுப்பு	0 8 0	25	19-5-'54
நான்காம் வகுப்பு	0 9 0	25	19-5-'54
ஐந்தாம் வகுப்பு	0 10 0	25	19-5-'54

கதைப் புத்தகங்கள்

(S. S. அருணகிரிநாதர்)

பாலர் நல்ல கதைகள் நான்காம் வகுப்பு	0 5 0	28	19-5-'54
பாலர் கதா போதினி ஐந்தாம் வகுப்பு	0 5 0	29	19-5-'54

ஆரம்பக்கல்வி

ஆரம்பாசிரியர்கள், ஆரம்பப் பாடசாலை மானேஜர்களின்
முன்னேற்றத்திற்கு உழைக்கும் இதழ்

ஆசிரியர் : பி. வீரராகவன்

வருட சந்தா ரூ. 3.] [தனிப் பிரதி 4 அணா.

மலர் 15 } செப்டம்பர் 1954 { இதழ் 9

...STRAR OF ... SEP 1954 ... MA...

வேண்டவே வேண்டாம்!
நிச்சயம் வேண்டாம்!

"ஆச்சாரியார் அவர்களால் கொண்டுவரப்பட்ட புதிய கல்வித் திட்டம் ஒத்திவைக்கப்பட்டிருக்கிறதே தவிர, கைவிடப்படவில்லை. மிக விரைவில், இந்தப் பிரச்சினையைப்பற்றி அலசி ஆராய்வதற்காக நிபுணர் குழு ஒன்று நியமிக்கப்படும். அந்தக் குழுவின் அறிக்கை இந்த ஆண்டின் முடிவிற்குள் கிடைத்துவிடும். கிடைத்ததும், அதனைப் பரிசீலனை செய்துவிட்டு, அடுத்த ஆண்டிலிருந்து, ஆச்சாரியாரின் திட்டத்தை, தேவைப்பட்டால் ஏதாவது சில மாற்றங்களுடன், நடைமுறைக்குக் கொண்டு வருவோம்."

இவ்வாறு முழக்கமிட்டிருக்கிறார் கல்வி அமைச்சர் திரு. சுப்பிரமணியம்.

செப்டம்பர் 12ம் நாளன்று, ஈரோடு மகாஜனக் கல்லூரியின் கட்டிடக் கல் நாட்டு விழா வீரப்பன் சத்திரம் என்ற இடத்தில் நடைபெற்றிருக்கிறது.

கல் நாட்டு விழாவைத் தொடங்கி வைத்தவர் கனம் சுப்ரமணியம்,

அந்த விழாவின்போதுதான், அமைச்சர், அற்புதமான இந்த மொழிகளை, அள்ளி வீசியிருக்கிறார்.

எதற்காக அமைச்சர் இந்த ஆபத்தான வாசகங்களை இந்த நேரத்தில் வீசவேண்டும்?

அவருடைய குருநாதர் ஆச்சாரியாரின் உள்ளம் குளிர்ச்சி அடையவேண்டும் என்பதற்காகவா?

ஆச்சாரியாரின் அமைச்சரவையில் இருந்தபோது புதிய திட்டத்தை வானளாவப் புகழ்ந்த கனம் சுப்ரமணியம் இப்போதுமட்டும் ஏன் வாய்மூடி மௌனியாகிவிட்டார் என்று யாராவது கேட்டால் என்ன செய்வது என்பதற்காகவா?

தன்னால் ஆதரிக்கப்பட்ட திட்டம், தன்னாலேயே கைவிடப்பட்டதைக் கண்டு அரசியல் எதிரிகள் கேலி செய்வார்களே என்கிற அச்சத்தின் காரணமாகவா?

இவற்றிலே எந்தக் காரணத்தை முன்னிட்டு கனம் சுப்ரமணிம் இப்படிப் பேசியிருந்தாலும் நமக்குக் கவலையில்லை. அரசியல் ாதிகளின் தந்திரங்களிலே இதுவும் ஒன்று என்று எண்ணி நாம் ாளாயிருந்துவிட முடியும்.

ஆனால் உண்மையிலேயே கனம் சுப்ரமணியம், புதிய திட் ்த்தை மீண்டும் கொண்டுவர வேண்டும் என்கிற உறுதியுடன் பேசி ருப்பாரானால், அதனை நாம் மிக மிக வன்மையாகக் கண்டித்தே தீர ண்டிய கடமை நமக்கு உண்டு.

குழந்தைகளின் எதிர்காலம், சமுதாயத்தின் முன்னேற்றம், ம்பக் கல்வியின் வளர்ச்சி, பொதுமக்களின் எதிர்ப்பு, ஆகிய எந் கண்ணோட்டத்திலிருந்து பார்த்தாலும் சரி, புதிய திட்டம்,

துளியும் பயனற்றது என்பதை நல்லறிவு படைத்த எவரும் மறுத்தல் இயலாது.

மாணவ உலகிற்கு மட்டற்ற தீங்கு பயப்பது இந்தத் திட்டம் என்பதை ஆரம்ப ஆசிரியர்கள் அத்தனை பேரும் எடுத்துச் சொல்லியாகிவிட்டது.

உலகத்திற்குத் தேவையற்ற உதவாக் கரை ஏற்பாடு இது என்பதைத் தென்னாட்டில் உள்ள அரசியல் கட்சிகள் அத்தனையும் எடுத்து விளக்கியாகிவிட்டது.

தொலைந்தே தீரவேண்டும் இந்தத் திட்டம் என்று சென்னை சட்டசபை திட்டவட்டமாக இயம்பியாகிவிட்டது.

கூடாது இந்தத் திட்டம், கூடவே கூடாது என்று கல்வி நிபுணர்கள் அத்தனை பேரும் ஏகமனதுடன் தீர்ப்பளித்தாகிவிட்டது.

எங்கள் பிள்ளைகளுக்கு இந்தத் திட்டம் தீதுபயப்பது என்பதை, லட்சக்கணக்கான பெற்றோர்கள், ஆயிரக்கணக்கான பொதுக் கூட்டங்களின் மூலம் தீர்மானம் செய்து காட்டியாகிவிட்டது.

திராவிடர் கழகம், திராவிட முன்னேற்றக் கழகம் ஆகிய இக்கங்கள் தொடங்கிய அறப்போரில் ஈடுபட்டு, ஏறத்தாழ 5000 பே இந்தத் திட்டத்தை எதிர்த்துச் சிறை புகுவதன் மூலம், திட்டத்தி தீமை எத்துணை அதிகம் என்பதைத் தெள்ளத் தெளிய விளக்கியா விட்டது.

ஹிந்து, குமுதம், பேரிகை, இமயம், விடுதலை, ஜனசக்தி, தி விட நாடு, திராவிடன், தீப்பொறி, தீச்சுடர், தம்பி, கிளர்ச்சி, பே வாள் முதலிய எண்ணற்ற ஏடுகள், திட்டத்தின் தவறுகளை விளக் பலமுறை கட்டுரைகள் தீட்டியாகிவிட்டது.

ஆம்! ஆசிரியர் உலகம், நிபுணர்கள் உலகம், அரசியல் உல எழுத்தாளர் உலகம், பத்திரிகை உலகம், சட்டமன்றம், ம உலகம் ஆகிய அத்தனை வகையினராலும் ஒத்த மனத்தே எதிர்த்து ஒழிக்கப்பட்ட ஒரு திட்டம், ஆச்சாரியாரின் திட்டம்.

இந்தத் திட்டத்திற்கு இந்த நாட்டில் ஏற்பட்ட மாபெரும் எதிர்ப்பு, இது வரையில் வேறு எந்தத் திட்டத்திற் ஏற்பட்டது கிடையாது.

திருவாளர்கள் காமராஜர், ஓமந்தூரார், கோசல்ராம், ஆர். வி. சாமிநாதன், டாக்டர் வரதராசலு நாயுடு, எஸ். எஸ் மாரிசாமி, டி. எஸ். சொக்கலிங்கம் போன்ற தீவிர காங்கிரஸ்வாதிகளால்கூட, திட்டம் கடுமையாகத் தாக்கப்பட்டது.

காமராஜர் இந்தத் திட்டத்தைத் தவிடுபொடியாக்கிவிட்டார் என்ற சேதி கேட்டதும், தமிழ்நாடு துள்ளிக் குதித்தது. வெற்றி விழா கொண்டாடிற்று. கொடுமை ஒன்று ஒழிந்தது என்று இன்பப் பண் பாடிற்று.

எந்தத் திட்டம் இவ்வாறு எல்லா மக்களாலும் வெறுக்கப்படுகிறதோ, எந்தத் திட்டத்தை எதிர்த்து நாட்டிலே மாபெரும் புயல் மூண்டதோ, எந்தத் திட்டம் கொண்டு வரப்பட்டதன் காரணமாக சென்ற ஓராண்டுக் காலம் நாட்டிலே அமைதி குறைந்து கொந்தளிப்பு மிகுந்து குழப்பமும் பூசலும் நடமாடலாயினவோ, எந்தத் திட்டத்தைக் கொண்டு வந்ததன் காரணமாக, ஆச்சாரியார், பதவியை விட்டே விரட்டப்பட வேண்டிய நெருக்கடி உண்டாயிற்றோ, எந்தத் திட்டம் தொடர்ந்து அமுலில் இருந்தால், குழந்தைகளின் எதிர்காலம் இருண்டுவிடுமோ, அந்தத் திட்டத்தை, அந்த ஆபத்தான ஏற்பாட்டை, அந்த அர்த்தமும் அவசியமுமற்ற விசித்திர விபரீதத்தை ஏன் மீண்டும் கொண்டுவர வேண்டும் என்று ஆசைப்படுகிறார் கனம் சுப்ரமணியம்?

மாணவர்கள், ஆசிரியர்கள், கல்வி நிபுணர்கள், பொது மக்கள் அத்தனை பேராலும் வெறுக்கப்படுகிற ஒரு திட்டத்தின்மீது கல்வி அமைச்சருக்கு மட்டும் ஏன் இவ்வளவு காதல்?

இந்தத் திட்டத்தால் இன்ன நன்மை உண்டு என்று, எடுத்துச் சொல்ல முடிந்ததா இதுவரை யாராலாவது?

இந்தத் திட்டத்தை ஆதரித்து எழுப்பப்பட்ட வாதங்களில், அறிவுக்குப் பொருத்தமானது ஒன்றாவது இருக்கிறதா?

இந்தத் திட்டத்தை ஆதரிக்கிறார்கள் பொது மக்கள் என்று கூறுவதற்குத் துளியளவாவது ஆதாரம் கனம் சுப்ரமணியத்தால் கூற முடியுமா?

"பொது மக்களிடம் இந்தத் திட்டத்திற்கு ஆதரவில்லை. ஆகவேதான் திட்டத்தைக் கைவிடுகிறோம்" என்று, இதே கல்வி அமைச்சர், திட்டத்தைக் கைவிட்ட நேரத்தில், சட்டசபையில் பேசவில்லையா?

" ஆதரவில்லை; ஆகவே கைவிடுகிறோம் என்று, மூன்று மாதங்களுக்கு முன்னால் பேசியவர், இப்போது, மீண்டும் திட்டத்தைக் கொண்டு வர இருக்கிறோம் என்று ஏன் பேசுகிறார்? அன்றைய தினம் இல்லாத ஆதரவு, இன்றைய தினம் மட்டும் கிடைத்துவிட்டதா? இந்த மூன்று மாத காலத்திற்குள், மக்களுடைய மனப்போக்கில் பெரியதோர் மாறுதல் ஏற்பட்டு, இனிமேல் புதிய திட்டத்தை ஆதரிக்க அவர்கள் முடிவு கட்டி விட்டார்களா? நாமறிந்த வரையில் அப்படி ஒன்றும் காணோமே! எனவே, ஆச்சாரியாரின் திட்டத்தை மீண்டும் கொண்டுவருவதற்கு, வறட்டுப் பிடிவாதம் ஒன்றைத் தவிர, வேறு ஆதாரம் எதுவும் இருப்பதாக நமக்குத் தெரியவில்லை.

ஆரம்பக் கல்வித் திட்டங்களைப் பற்றி அலசி ஆராய்ந்து ஒரு முடிவுகூற ஒரு நிபுணர் குழு நியமிக்கப்படும் என்கிறார் அமைச்சர். நியமிக்கட்டும் தாராளமாக. வரவேற்கிறோம் மனமார. ஆனால் நிபுணர் குழு நியமிக்க இருக்கிறோம் என்கிற பேச்சோடு பேச்சாக, அந்தக் குழுவின் முடிவுகள் தெரிந்தவுடனே ஆச்சாரியாரின் திட்டத்தை மீண்டும் கொண்டு வருவோம் என்றும் பேசியிருக்கிறாரே அன்புள்ள அமைச்சர், அது எப்படி நியாயமாகும்? ஒரு பிரச்சினையை ஆராய்ந்து முடிவுகூற ஒரு நிபுணர் குழு அமைப்பதாக இருந்தால், அந்தக் குழுவின் அறிக்கை வெளியாகிற வரையில், அந்தப் பிரச்சினையைப்பற்றி அமைச்சர்கள் ஏதும் கூறாமல் இருக்க வேண்டும். அதுதான் முறை. அப்படியின்றி, ஒரு குழுவையும் அமைப்பதாகச் சொல்லிவிட்டு, அந்தக் குழுவின் முடிவு எப்படி இருந்தாலும் சரி, மீண்டும் ஆச்சாரியாரின் திட்டத்தையே கொண்டு வருவோம் என்று பேசுவது எந்த வகையில் ஒழுங்கு? ஆச்சாரியாரின் திட்டத்தையே கொண்டு வருவது என்பது கனம் சுப்ரமணியத்தின் நோக்கமாயிருந்தால், அதற்கு ஒரு குழு எதற்காக? ஒரு குழுவையும் நியமித்துவிட்டு, அந்தக் குழுவின் அறிக்கை வெளியாவதற்கு முன்னரே, ஆச்சாரியாரின் திட்டத்தை ஆதரிப்பதுதான் எங்களுடைய முடிவு என்றும் தெரிவித்துவிட்டால், அந்தக் குழுவின் அறிக்கை அரசாங்கத்தின் சார்பானதாகத்தானே இருக்க முடியும்! அத்தகு நிலையில் வெளியாகும் குழுவின் அறிக்கையை, நடுநின்று வரையப்பட்ட ஒன்று என்று எவர்தான் ஏற்றுக்கொள்ள இயலும்?

அமைச்சர் அவர்களின் சொற்பொழிவை ஆராய்ந்து பார்க்கப் பார்க்கக் குழப்பம்தான் கூடுதலாகிறதே தவிர தெளிவு ஏதும் பிறக்கக் காணோம். அவசர அவசரமாகப் பேசியிருக்கிறார் அன்பு

கல்வி அமைச்சர் என்பதுதான் அவருடைய பேச்சிலிருந்து புலனாகிறதே தவிர, ஆய்ந்தோய்ந்து பார்த்து எடுத்துக்கூறிய கருத்துரையாக அது நமக்குத் தெரியவில்லை.

எது எப்படியிருந்தாலும் சரி, ஆச்சாரியாரின் கல்வித் திட்டத்தை மட்டும், மீண்டும் நாட்டிலே நடமாடவிடக்கூடாது காமராஜர் ஆட்சி.

புதிய திட்டத்தை எடுத்துவிட்ட காரணத்தால்தான், குடியாத்தம் தேர்தலில், காமராஜருக்கு மட்டற்ற ஆதரவு கிடைத்தது.

புதிய திட்டம் தொலைந்துவிட்ட காரணத்தால்தான், சென்னை மாநிலத்தில் இதுபோது அமைதி நிலவுகிறது.

புதிய திட்டம் ஒழிந்துவிட்டது என்கிற சேதிதான் பொது மக்களுக்கு, தேனாக, தென்றலாக, தெவிட்டாத தீஞ்சுவை அமுதாக இனிக்கிறது.

இன்றைய மந்திரிசபைக்கு நாட்டிலே பிரமாண்டமான எதிர்ப்பு எதுவும் இல்லை என்றால், அதற்குரிய முக்கிய காரணம், புதிய கல்வித் திட்டத்தை எடுத்துவிட்டது இந்த மந்திரி சபை என்பதேதான்.

இவ்வாறாக, நாட்டிலே இதுபோது நிலவுகிற இந்த அமைதியை, இனிமையான சூழ்நிலையை, பொதுமக்களின் திருப்தியைப் பாழாக்கும் விதத்தில் பணிபுரியக்கூடாது கனம் சுப்ரமண்யம்.

ஆச்சாரியாரின் திட்டம் அமுலில் இல்லையே என்று வருந்துபவர்கள் யாருமே கிடையாது — "கல்கி" ஆசிரியர் ஒருவரைத் தவிர.

ஆனால் அந்தத் திட்டம் தொலைந்தது கண்டு மகிழ்பவர்களோ ஏராளம், ஏராளம். மிகமிக ஏராளம். நாட்டு மக்கள் அனைவருமே என்றுகூட இயம்பிவிடலாம்.

இத்தகு நிலையில் ஆச்சாரியாரின் திட்டத்தை மீண்டும் கொண்டு வருவது, பொறுமையுடன் இருக்கும் பொது மக்களின் உள்ளத்தைச் சிங்க ஏறுபோலச் சீறியெழ வைக்கும் சிந்தனையற்ற செயலே தவிர வேறில்லை.

வேண்டாம் அந்தத் திட்டம். வேண்டவே வேண்டாம்.

நிச்சயம் வேண்டாம்.

அட்டைப்பட விளக்கம்

★

ஆரம்ப ஆசிரியரின் புலிவேட்டை

★

தோழர் தேவராஜுவின் அரிய சேவை

கோவை ஜில்லா, கோபி செட்டி பாளையம் தாலூக்காவைச் சேர்ந்த காட்டூர், ஊத்தூர், வீர சின்னூர் என்னும் மூன்று சிறிய கிராமங்களின் மத்தியில் வெள்ளைக் காடு என்ற குன்றில் கடந்த ஒரு வருட காலமாய் ஒரு புலி அடிக்கடி தோன்றி ஆடுமாடுகளை வேட்டையாடி ஏழை உழவர்களை உபத்திரவப்படுத்தி வந்தது. சுமார் கடந்த ஆறுமாதத்திற்கு முன்பு கம்மங்காட்டிற்குச் சென்ற ஒரு சிறுமியையும் காயப்படுத்திக் கொன்றது. அதுமுதல் மக்கள் தனித்துக் காட்டிற்குச் செல்ல பயந்தனர்.

3–8–54—ல் பகல் சுமார் ஒரு மணிக்கு ஷை காட்டின் சாரலில் மேய்ந்து கொண்டிருந்த ஆட்டு மந்தையின் கும்பலில் திடீரென்று பாய்ந்து ஓர் ஆட்டைப் பிடித்தது. புலிகாடுகளில் வேலை செய்து கொண்டிருந்த உழவர்கள் பெரும் சப்தம் செய்ய ஷை புலி வெள்ளைக் காட்டின் உச்சியில் இருக்கும் குகைக்குத் தாவிப்பாய்ந்து பதுங்கியது. தடி, குத்தீட்டி கொண்டு அதனை அடிக்க அஞ்சினர். உடனே சிலர் பெரிய கொடி வேரியில் உபாத்தியாயர் குடும்பத்தைச் சேர்ந்த **திரு M. தேவராஜுவினிடம்** ஓடித் தகவல் கொடுக்க மலைச்சாரலுக்குத் துரிதமுடன் சென்று துஷ்டப் புலியை தன்னுடைய இரட்டைக் குழல் துப்பாக்கியால் இருவேட்டுகள் செய்து சுட்டுக்கொன்றார். பயம் இனியில்லையென்று உழவர் மகிழ்ந்து **திரு M. தேவராஜுவை** வாழ்த்தினர். இவருடைய குடும்பத்தில் ஆரம்ப ஆசிரியர் முதல் உயர்தரப் பாடசாலை தலைமை ஆசிரியர் வரை சகோதர, சகோதரிகளும் சேவை செய்வது போற்றத்தக்கது. உத்தமமான தொழில் உபாத்திமைத் தொழில் என்பது இவருடைய குடும்பத்தினரின் முழு நம்பிக்கை.

இப்படத்தில் புலியைக் கொன்றதாகப் புகைப்படமிருக்கிறதே இவரா ஆரம்ப ஆசிரியர் என்ற கேள்வி வருகிறதா? இவர் ஓர் ஆரம்ப ஆசிரியர்தான். உடை மிலிடெரி சிப்பாய் போல் காணப்படுகிறதே ?! ஆம் சந்தேகம் வேண்டாம் இவர் ஓர் ஆரம்ப ஆசிரியர்தான்.

1950-ம் வருடம் மாடல் மோட்டார் சைகிள் அருகில் இருக்கிறதே! ஆம் அதுவும் இந்த ஆரம்ப ஆசிரியருடையதுதான். ஓர் ஆரம்பப் பாடசாலை ஆரம்ப ஆசிரியர்—துப்பாக்கி வைத்திருக்கிறார். துரைபோல்தான் மோட்டார் சைகளில் துரிதமுடன் செல்கிறார். உழவருடன் சேர்ந்து வயல் சேற்றில் சேவையும் செய்கிறார். அதன் காரணமாய் சேமித்துமிருக்கிறார். என்றால் இவருடைய கடும் உழைப்பை நாம் கட்டாயம் போற்றத்தான் வேண்டும்.

அறிஞரின் தேன் துளிகள்

(எழில் வேலன், கல்லாவி)

நிறையப்படி. இல்லையேல் படிக்காமலே இருந்துவிடு. அரை குறையாக மட்டும் படித்து நின்றுவிடாதே. மிகவும் ஆபத்தான செயல்.

— அலெக்சாண்டர் போப்.

நூறு புரோகிதர்களால் நாட்டுக்கு உண்டாகும் நன்மையை விட ஒரே ஒரு ஆரம்ப ஆசிரியரால் உண்டாகும் நன்மை பல மடங்கு அதிகம்.

— தாமஸ் பெயின்

இல்லாமை என்னும் கொடுமை காரணமாகத் தத்தளித்துக் கிடக்கும் மக்களிடம் சென்று கடவுளைப்பற்றிப் பேசிப் பயனில்லை. உணவு, உடை, வீடு இவைதான் அவர்களுக்குத் தேவையான கடவுள். அந்தக் கடவுளை அவர்களுக்குக் கொடுங்கள்.

— காந்தியடிகள்.

நாடு நலம்பெற வேண்டுமா? ஆம் எனில் சாதிச் சண்டை, சமயச்சண்டை, பிற மூடச்சண்டைகள் அனைத்தையும் கட்டிச் சுருட்டி வங்காளக்குடாக்கடலில் எறிதல் வேண்டும்.

— திரு. வி. க.

மூக்குக் கண்ணாடி

டாக்டர். G. வெங்கடசாமி, B.A.M.B.B.S.D.O.

★

எங்கள் கிராமத்தில் சுமார் 150 வீடுகள் உண்டு. அதில் மூன்று வீடுகளில் மட்டுமே மூக்குக் கண்ணாடிகள் இருந்தன. ஒன்று கணக்குப் பிள்ளை வீடு. அவர் வயதானவர். அடிக்கடி எழுதவும் படிக்கவும் வேண்டியிருந்ததால் அவர் எப்பொழுதும் ஒரு கண்ணாடி வைத்திருக்கிறார். எங்கள் வீட்டில் ஒரு கண்ணாடி உண்டு. ஊரில் வயதானவர்கள் யாருக்காவது ஏதாவது படிக்கவோ, கையெழுத்துப் போடவோ அவசியமேற்பட்டால் இக்கண்ணாடியைச் சிறிது நேரத்திற்கு இரவலாக வாங்கிச் செல்வார்கள். இதற்கு 'வெள்ளெழுத்துக் கண்ணாடி' அல்லது 'சாலேஸ்வரக் கண்ணாடி' என்று சொல்வார்கள். மூன்றாவது கண்ணாடி மற்றொருவர் வீட்டிலிருந்தது. இதுவும் சாலேஸ்வரக் கண்ணாடிதான். பெரும்பாலும் கிராமவாசிகளுக்கு முக்கிய வேலை விவசாயமே. அபூர்வமாகத்தான் விவசாயிகள் படிப்பார்கள். படிப்பதற்கு அத்தியாவசியம் இல்லாததால் கண்ணாடி உபயோகமும் அபூர்வமாகவே இருந்து வருகிறது. எங்களூர்க்காரர் ஒருவர் சென்னைக்கு வந்தபோது அங்குப் பலரை மூக்குக் கண்ணாடியுடன் பார்த்ததும் ஆச்சரியப்பட்டார். அவருடைய மனதில் நாகரிக நகர் வாழ்க்கையால் அவர்களுக்குக் கண் கெட்டுவிட்டதெனத் தோன்றிற்று. உண்மையில் நகர வாழ்க்கையினாலாவது, அல்லது அதிகம் படிப்பதனாலாவது கண்கள் கெட்டுவிடுமாவென்பதை ஆராய வேண்டும்.

மூக்குக் கண்ணாடியின் முக்கிய உபயோகம் பார்வை மங்கலாக இருந்தால் அதைத் தெளிவாக்க உதவும். பார்வை மங்குவதற்குப் பல காரணங்கள் உண்டு. சிலருக்குத் தூரப் பார்வை சரியாகத் தெரிவதில்லை. சிறு வயதிலேயே இவர்கள் புத்தகத்தை வெகு அருகில் வைத்துப் படிப்பார்கள். சிலருக்குக் கிட்டப் பார்வை (Shortsight) என்று பெயர். தூரத்திலுள்ள பொருள்கள் சரியாகத் தெளிவாகத் தெரியாது. உதாரணமாக ஒரு புளியமரம் காணப்படலாம். ஆனால், அதிலுள்ள இலைகள், தனித்தனியாகத் தெரிவதில்லை. இக்குறைபாடு பின் சந்ததிகளுக்கும் வரும். சிலருக்கு வயது ஆக ஆகக் கண்ணாடிப் பருமனும் அதிகரித்துக்கொண்டே போகும். இவர்கள் உபயோகிக்கும் கண்ணாடியைத் தொட்டுப் பார்த்தால் இரு பக்கமும் குழிவிழுந்து காணப்படும். (Concave

glasses) இக் கண்ணாடியின் உதவியால் இவர்களுக்குத் தூரப் பார்வை தெளிவாகிறது. இக்குறையுள்ளவர்களில் பலருக்குக் கண்கள் பெரிதாகக் காணப்படும்.

கண்களைப் 'போட்டோ' எடுக்கும் காமிராவுக்கு ஒப்பிடுவதுண்டு. கண்ணின் பின்னால் ரெட்டினா (Retina) என்ற திரை இருக்கிறது. வெளிப் பொருள்களின் உருவங்கள் இத்திரையில் விழும் பொழுது, அவை நரம்புகள் வழியாக மூளைக்கு அறிவிக்கப்படுகின்றன. 'காமிரா'வை வைத்துத் தூரத்திலிருக்கும் பொருள்களையும் அருகிலிருப்பவைகளையும் படம் பிடிக்கலாம். அவ்வாறு செய்வதற்கு காமிராவிலிருக்கும் ஒளிப் பில்லையை முன்னே பின்னே நகர்த்த வேண்டும். கண்ணிலும் வெகு தூரத்துக்கப்பாலிருக்கும் நட்சத்திரங்களையும், அருகிலிருக்கும் புத்தகத்திலுள்ள எழுத்துக்களையும் பார்க்க முடிகிறது. இவ்வாறு செய்வதற்கு ஏற்ப கண்ணினுள் இருக்கும் பில்லை (Lens) அமைந்திருக்கிறது. இந்த பில்லையின் வடிவம் மாறுவதாலேயே நாம் தூரத்திலிருக்கும் பொருள்களையும், அருகிலிருப்பவற்றையும் தெளிவாகப் பார்க்க முடிகிறது. வயதாகும்பொழுது உடலின் எல்லாப் பகுதிகளிலுமே ஒரு கடினத் தன்மை உண்டாகிறது. இவ்வில்லையிலும் இந்தக் கடினத்தன்மை உண்டாவதால், தூரப் பார்வை சரியாக இருந்தாலும் கிட்டப் பார்வை குறைகின்றது. நாற்பது வயது வரும் பொழுது பெரும்பாலோருக்குச் சிறு எழுத்துக்களை முக்கியமாக மாலை நேரங்களில் படிப்பதில் சிரமம் உண்டாகும். இதற்குச் சாலேஸ்வரம் ஏற்படுகிறதென்றும், வெள்ளெழுத்து வந்துவிட்டது என்றும் சொல்வார்கள். இதை நிவர்த்திப்பதற்குக் குவி கண்ணாடிகள் (Convex Lens) அணியவேண்டும். படிப்பு அல்லது எழுத்து வேலை அதிகம் உள்ளவர்கள் ஒரு கண்ணாடியில் இரண்டு வில்லைகளைப் போட்டிருப்பதை அடிக்கடிக் காணலாம். மேலிருக்கும் வில்லை தூரப் பார்வைக்கும், கீழிருக்கும் வில்லை கிட்டப் பார்வைக்குமாக உபயோகப்படுகின்றன.

கண்ணின் அமைப்பும் இதர அவயவங்களின் அமைப்புக்களைப் போல் மாறுபடும். உதாரணமாக ஒருவர் மூக்கைப் போல் மற்றொருவருடைய மூக்கு இருப்பதில்லை. கண்கள் யாவருக்கும் ஒரே மாதிரி உருண்டையாக இருப்பதில்லை. உருண்டை வடிவத்தில் சிறிது மாறுபாடு இருந்தாலும் வெளியுலகத்திலிருக்கும் பொருள்களின் நிழல்கள் கண்ணில் தெளிவாக விழுவதில்லை. இந்நிலையில் கண்ணாடி அணிவதால், தெளிவான பார்வை ஏற்படும். கண்ணாடி அணியாமல் இவர்கள் படித்தால், கண்ணில் சோர்வு உண்டாகும். அதிக நேரம் படித்தால் அசதி; சிறு தலைவலி முதலியன ஏற்படும். சாதாரணமாக ஜனங்களிடையே

கண்ணாடி போட்டுக்கொண்டால் எத்தகைய தலைவலியும் நிவர்த்தியாகிவிடும் என்ற அபிப்பிராயம் இருக்கிறது. டாக்டர்களில் பலரும் இம்மாதிரி நினைக்கின்றனர். அதனாலேயே தலைவலி என்றவுடன் 'கண் ஆஸ்பத்திரிக்குப் போங்கள்' என்று சொல்லி அனுப்பிவிடுகின்றனர். பொறுக்க முடியாத தலைவலி, அல்லது சாதாரணவேலை செய்யமுடியாதவாறு உண்டாகும் தலைவலி கண்ணாடியால் தீர்வது அன்று. கண்களைப் பரிசோதித்துப் பார்த்தால் இத்தலைவலிக்கு வேறு காரணங்கள் இருக்கின்றனவென்று அறியலாம். ஆனால், கண் ஆஸ்பத்திரிக்கு வருவோரில் சிலர் 'தலைவலிக் கண்ணாடி வேண்டும்' என்று கேட்பது சகஜமாக இருக்கிறது. பெரும்பாலான தலைவலிகள் கண்ணாடியால் தீரா என்பதை அறிய வேண்டும். அதுவும் படிக்கவோ, அல்லது வேறு நுணுக்கமான வேலையோ இல்லாதவர்களுக்குத் தலைவலி இருந்தால், அதற்குக் கண்ணாடி அவசியமில்லையென்றே சொல்லலாம். கிராமத்தில் விவசாய வேலை செய்பவருக்குச் சிறு பொருள்களை அடிக்கடி கவனித்துப் பார்க்க வேண்டிய கட்டாயமில்லை. ஆதலால், கண்ணாடிக்கு அவ்வளவாக அவசியமில்லை. ஆனால், வைர வேலை செய்யும் ஆசாரி அல்லது, கடிகாரரிப்பேர் செய்யும் ஒருவருக்குக் கண்ணாடி அவசியம் அதிகமாக இருக்கும்.

சிலருக்கு நாற்பது வயதில் சிறிது எழுத்துக்களைப் படிப்பதற்கும் சிரமம் ஏற்படும். அதற்காகக் கண்ணாடி அணிவார்கள். பின்னர் 50 அல்லது 60–வது வயதில் கண்ணாடியில்லாமலே எழுத்துக்கள் நன்றாகத் தெரியலாம். இதற்குச் சாலேஸ்வரம் மாறிவிட்டதெனக் கூறுவார்கள். பெரும்பாலும் கண்ணில் புரை (CATARACT) உண்டாவதனாலேயே இவ்வாறு ஏற்படும். புரை உண்டாகும் பொழுது தூரப் பார்வை மட்டுப்படும். இதற்கும் கண்ணாடி அணிவதால் பார்வை சற்றுத் தெளிவாகலாம்.

இதுவரை பார்வை தெளிவாவதற்கு உபயோகப்படும் கண்ணாடிகளைப்பற்றிப் பார்த்தோம். சிலர் வெயிலுக்காகக் கறுப்புக் கண்ணாடி அணிகிறார்கள். நம் நாட்டில் இது அவசியமா என்று பலர் கேட்கிறார்கள். அநேகமாக அவசியமில்லையென்றே சொல்லவேண்டும். சில வேலைகளில் கண்களுக்கு ஆபத்து ஏற்படலாம். தொழிற்சாலைகளில், சாணை வைக்கும் இடங்களில் தெறிக்கும் பொடி கண்ணில் விழாதவாறு கண்களைப் பாதுகாக்கக் கண்ணாடி அவசியம். எலக்ட்ரிக் வெல்டிங் செய்யுமிடங்களில் கண்களைப் பாதுகாக்கக் கண்ணாடிகள் அணிவது தேவையாகிறது.

முக்கியமாக அறிந்துகொள்ள வேண்டியவை (1) பெரும்பாலான தலைவலிகளுக்குக் கண்

ணாடி போட்டுக்கொள்வதால், குணம் ஏற்படுவதில்லை. (2) தூரப் பார்வை தெளிவாக இல்லாத இளம் வயதினருக்கு (Short Sight) கண்ணாடி போடுவது அவசியமாகலாம். கண்ணாடியில்லாமல் இதர முயற்சிகளால் தெளிவான பார்வை ஏற்படுவதில்லை. (3) கூடுமானவரை கண் டாக்டரிடம் சரியாகப் பரீட்சை செய்து கண்ணாடி அணிவது நல்லது. கண் நரம்பு, ரெட்டினா (Retina) இவைகளில் உண்டாகும், வியாதிகளால் பார்வை குறையலாம். இவற்றிற்குத் தகுந்த முறையில் பரீட்சை செய்து வைத்தியம் செய்து கொள்ள வேண்டும்.

நகர வாழ்க்கையாலோ அல்லது அதிகப் படிப்பினாலோ கண்ணாடி போடுபவர்களின் தொகை அதிகரித்து விட்டதென்று சொல்ல முடியாது. கிராம விவசாயிக்குக் கண்ணாடி அதிக அவசியமில்லை. ஆனால், படிப்பதோ அல்லது எழுதுவதோ தொழிலாக உள்ளவர்களுக்குக் கண்ணாடி வாழ்க்கையில் அவசியம் என்றே சொல்ல வேண்டும்.

—(" சௌபாக்கியம் ")

"ஆரம்பக்கல்வி" ஆபீஸ்

94-94, புதுத் தெரு, மண்ணடி சென்னை-1.

★

மாதாந்திரக் கணக்கு அனுப்பும் பாரங்கள் (ஆம்கிலம்) 100 ரூ. 2-8
ரிகார்ட் ஷீட்டுகள் (ஆம்கிலம்) 100 ரூ. 2-0
பிராவிடண்ட் பண்டு கட்டும் பாரங்கள் (ஆம்கிலம்) 100 ரூ. 2-0
பள்ளியில் பிள்ளைகளைச் சேர்க்கும் விண்ணப்பத்தாள்கள் (ஆம்கிலம்) 100 ரூ. 1-0
வருடாந்திர பிராவிடண்ட் பண்டு (சரிபார்த்தனுப்பும் பாரங்கள்) (ஆம்கிலம்) 100 ரூ. 2-8

(தபால் செலவு உட்பட)

ஒவ்வொன்றிலும் 25 பாரங்களுக்குக் குறையாமல் முன்பணத்துடன் ஆர்டர் அனுப்பவும்.

உடற் பாதுகாப்பு

[சகரன்]

★

மிதமாக உண்பதால் ஆயுள் 10-லிருந்து 40 வருடங்கள் வரைக்கும் அதிகரிக்கும் என்று உடல் வல்லுநர்கள் கூறுகின்றனர்.

உண்ணும்போது வேகம் கூடாது. இருவேளை உணவு போதும். சாப்பாடு முடிந்தால் எப்பேர்ப்பட்ட நண்பனுக்காகவும் எவ்வளவு ருசியான பொருளுக்காகவும் இரைப்பையைக்காட்டிக் கெடுத்துவிடக் கூடாது. உண்பதிலும் உறங்குவதிலும் சட்டம் சட்டந்தான்.

இயற்கை தாட்சண்யமற்றது. நகைக்கும், பகைக்கும், பயந்து கொண்டு இருக்கக் கூடாது. சோம்பலை ஒழித்து அதிகாலை ஐந்து மணிக்கே எழுந்துவிட வேண்டும்.

நித்திரைக்கும் ஜீரணத்திற்கும் நெருங்கிய சம்பந்தம் உண்டு. நித்திரை கெட்டால் ஜீரணம் கெடும்; ஜீரணம் கெட்டால் நித்திரை கெடும். இரவு 10-மணிக்குமேல் உண்பதே கூடாது. அகாலமாகி விட்டால் பட்டினியாய் இருப்பது நல்லது. சாப்பிட்டு 1-மணி நேரம் ஆன பின்னர்தான் உறங்கவேண்டும்.

வெங்காயம் தினசரி எந்தத் திணுசிலாவது சேர்த்தால் உடல் நலமடையும். வெங்காயம் சாப்பிடுவதால், இரைப்பை, குடல், பித்தகோளம், மூளை இவைகளுக்கு நல்லது. மூலக் கடுப்பு, ரத்த சுத்திக்கு மிகவும் நல்லது. வெங்காயத்தை சமைக்காமல் இளசானதைத் தின்பது நலம். வெங்காயத்தை நறுக்கி வேக வைத்து நீரைக் கழிக்காமல் சாப்பிட்டால் உடலுக்குச் சாந்தியும் நிம்மதியான நித்திரையும் ஏற்படும்.

உடல் உழைப்பு இல்லாதவர்கள், ஆசிரியர்கள், குமஸ்தாக்கள், மாணவர்கள், பணக்கார வீட்டுப் பாவையர்கள், அவரவர்கள் சக்தி நிலைக்குத் தக்கவாறு 15 நாட்களுக்கு ஒரு முறையோ அல்லது மாதத்திற்கு ஒருமுறையோ 24 மணி நேரமும் முற்றிலும் உணவை உண்ணாமல் இருப்பது நல்லது. இதைப் படித்தவர்கள் இதன்படிச் செய்ய முயல வேண்டும். இதற்காகக இதை மட்டும் ஒரு சிறு துண்டுக் காகிதத்தில் அழகாக எழுதி கண்ணாடியின் ஒரு பகுதியில் ஒட்டிவைக்க வேண்டும். தினசரி இதைப் படித்துக்கொண்டே வந்தால் தானாகவே பழக்கம் வந்துவிடும். அப்புறம் நீங்கள் விட்டாலும் உங்களை அந்தப் பழக்கம் விடவே விடாது.

இரவு வேளைகளில் அதிக உணவே உண்ணக் கூடாது. $\frac{1}{8}$ படி பாலும், பழங்களில் ஏதே னும் 2-ம் சாப்பிட்டு வருவதினால் ஜீரணக் கருவிகள் ஓய்வு எடுத்துக்கொள்ள முடியும்.

மனிதன் குணமும் உணவால் தாக்கப்படுகிறது. ஒருவன் தன் குணத்திற்குத் தக்கவாறே உணவை உட்கொள்கிறான். எரிப்பதைத் தின்றால் உயிர், சுகம், குணமெல்லாம் எரிந்துதான் போகும்.

கசப்பு, புளிப்பு, உப்பு, அதிக உஷ்ணம், உவர்ப்பு, காய்ந்த எரிக்கும் உணவுகளை வெறுத்துவிட வேண்டும். உடல் ஆரோக்கியமாய் இருக்க வேண்டுமானால் பற்கள் சுத்தமாக இருக்கவேண்டும். சிலர் பல்விளக்க செங்கல் பொடி, மணல் முதலிய கடின வஸ்துக்களைக் கொண்டு தேய்க்கின்றனர். நம் பற்கள் என்ன இரும்பா தேயாமல் இருக்க (இரும்பும் தேய்ந்துபோகும்). ஒரு விஷயம் கெடுதல் என்று தெரிந்தும் அதைத்தான் மீண்டும் மீண்டும் செய்து வருகிறார்கள். புகைப் பிடித்தல் கூடாது. அது காற்றுக் குழாய்க்கும், நுரையீரல்களுக்கும் கேடு செய்யும் என்று தெரிந்தும் அதை விட்டு விடுகிறார்களா? அதுதான் இல்லை. சிலர் கௌரவத்திற்காகவே புகைப் பிடிக்கிறார்கள். வறட்டுக் கௌரவத்தால் தங்கள் வாழ்க்கையைப் பலியாக்கிக் கொள்கிறார்கள். இவர்கள் சற்றுச் சிந்தித்துப் பார்த்தால் நாம் கடைப் பிடிக்கும் பழக்கம் தவறு என்பதை உணர்வர்.

பல் விளக்குவதற்குச் சோடா உப்பு 1 பங்கும், வீட்டுப்பு 2 பங்கும் சேர்த்துப் பல்தேய்த்து வந்தால் நல்லது. வீட்டு உப்பை நன்கு மாப்போல பொடி செய்து கலந்துகொள்ள வேண்டும். இதனால் பற்கள் உறுதி பெறுவதுடன் வாய் நாற்றம் போகிறது. ஈறு வீக்கம் ஏற்படாது. பல் வலி ஏற்படாது. பல்லில் இரத்தம் கசியாது. பல்லில் எப்படி இரத்தம் வரும் என்று கேட்கலாம். பல் வலி என்றால் பல்லா வலிக்கிறது. பல் சம்பந்தப்பட்ட பாகங்கள் அனைத்துமேதான் வலிக்கிறது. ஈறில் இரத்தம் வடிவதைத்தான் பல்லில் இரத்தம் வடிகிறது என்கிறோம்.

அளவுக்கு அதிகமாகக்கலவியலில் ஈடு படுவதினாலும் உடல் ஆரோக்கியம் கெடுகிறது.

அநேகர் தினசரி கலவியலில் ஈடுபட்டுத் தங்களைக் கெடுத்துக் கொள்வதோடு தங்களின் மனைவிமார்களையும் துன்புறுத்துகின்றனர். மேலும் பல வேசியர்களிடம் பிரவேசித்துவிட்டு அவளிடமுள்ள வியாதிகளைக் கிரகித்துத் தன் மனைவியிடம் புகுத்தித் தான் கெடுவதுடன் தன் மனைவியையும் கெடுத்து, பிறக்கும் குழந்தைகளையும் கெடுத்துத் துன்பத்திற்காளாக்கி விடுகின்றனர். என்னே!. அறிவீனம்!!

(16-ம் பக்கம் பார்க்க)

கிராமப் பிரதேசங்களில் 1270 பள்ளிக்கூடங்கள்

—★—

சர்க்கார் அறிக்கை

★

படித்துவிட்டு வேலையில்லாதிருப்போருக்கு வேலை கொடுப்பதற்கான இந்திய சர்க்காரின் திட்டத்தின்கீழ், இந்த ராஜ்யத்தில் பள்ளிக்கூடங்களில்லாத 1270 கிராமங்களில் ஒரே உபாத்தியாயரால் நடத்தப்படும் 1270 பள்ளிக்கூடங்களை ஆரம்பிக்கும்படி சென்னை சர்க்கார் உத்தரவிட்டிருக்கின்றனர். இந்த 1270 பள்ளிக்கூடங்களில் 881 பள்ளிக்கூடங்கள் 1000மும் அதற்கு மேற்பட்ட ஜனத்தொகையுள்ள கிராமங்களில் நிறுவப்படும். பாக்கி 389 பள்ளிக்கூடங்கள் 500-க்கும் 1000க்கும் உட்பட்ட ஜனத்தொகையுள்ள கிராமங்களில் ஆரம்பிக்கப்படும். இந்தத் திட்டத்தின்படி ஒவ்வொரு ஜில்லாவிலும் ஸ்தாபிக்கப்படப் போகும் பள்ளிக்கூடங்களின் எண்ணிக்கை வருமாறு:—

செங்கற்பட்டு 49, தஞ்சாவூர் 78, ராமநாதபுரம் 54, வட ஆற்காடு 114, திருச்சிராப்பள்ளி 168, நீலகிரி 5, தென் கன்னடம் 76, தென் ஆற்காடு 89, மதுரை 69, திருநெல்வேலி 47, சேலம் 334, கோயம்புத்தூர் 97, மலையாளம் 90, ஆக மொத்தம் 1270.

மேற்படி பள்ளிக்கூடங்கள் தவிர ஏற்கனவேயுள்ள பள்ளிக்கூடங்கள் 200-ல் உயர்தர ஆரம்ப வகுப்புகள் ஆரம்பிக்கப்படும். இப்பள்ளிக்கூடங்கள் கல்வி இலாகாவின் கூட்டுறவுடன் ஜில்லா போர்டுகளால் ஆரம்பிக்கப்பட்டு ஜில்லா போர்டு பள்ளிக்கூடங்களாகவே நடந்து வரும். சர்க்கார் ஒரு பள்ளிக்கூடத்துக்கு ஒரு வருஷத்துக்கு ரூபாய் 1000-க்கு அதிகப்படாது உதவி நிதி அளிப்பார்கள். இது ஒரு வருஷத்துக்கு உபாத்தியாயரின் சம்பளம், படி, மற்றும் பள்ளிக்கூடத்துக்குத் தேவையான சாமான்களின் விலைக்கான தொகையாகும். அந்தந்த ஊராரின் சுய முயற்சிகளினால் பள்ளிக்கூடம் நடத்துவதற்காக இலவசக் கட்டிடம் கிடைக்காத இடங்களில் ஒரு சிறு ஷெட் போட்டுக் கொள்வதற்காக ஒவ்வொரு பள்ளிக்கூடத்துக்கும் ரூ. 500 அனுமதிக்கப்படும். ஆனால் ஸ்தல மக்கள் கூடிய விரைவில் பள்ளிக்கூடம் நடத்துவதற்காக இலவசக் கட்டிடத்துக்கு வழி செய்யவேண்டுமென்று சர்க்கார் விரும்புகிறார்கள்.

செகண்டரி க்ரேட் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள், பயிற்சி பெறாத பட்டதாரிகள், பட்டம் பெறாத கல்லூரிப் படிப்புப் பெற்றவர்கள், மெட்ரிகுலேஷன், எஸ். எஸ். எல். ஸி. பாஸ் செய்தவர்கள் ஆகியவர்கள் இந்தப் பள்ளிக்கூடங்களில் ஆசிரியர்களாக நியமிக்கப்பட அருகதை உடையவர்களாவர். இந்த உபாத்தியாயர்களுக்குக் கீழ்க்கண்ட விகிதாசாரப்படி சம்பளம் கொடுக்கப்படும் :—

பயிற்சி பெறாத மெட்ரிகுலேஷன், எஸ். எஸ். எல். ஸி. பாஸ் செய்தவர்கள், பட்டம் பெறாத கல்லூரிப் படிப்பு பெற்றவர்கள் சம்பளம் ரூ. 40—ம், கிராக்கிப்படியும், செகண்டரி கிரேடு பயிற்சி பெற்றவர்கள் அந்தந்த ஜில்லாவில் தற்போது கொடுக்கப்பட்டு வரும் சம்பளமும், கிராக்கிப்படியும், பயிற்சி பெறாத பட்டதாரிகளுக்கு சம்பளம் ரூ. 50—ம் கிராக்கிப்படியும்.

மேற்படி யோக்கியாதாம்சங்களிருந்து வேலையில்லாமலிருப்பவர்கள் மேற்படி உபாத்தியாயர் வேலையை அபேட்சிப்பார்களேயானால், அவர்கள் தங்கள் பெயர்களை வேலையளிப்பு ஸ்தாபனங்களில் (எம்ப்ளாய்மென்ட் எக்ஸ்சேஞ்சுகளில்) பதிவு செய்து கொண்டு ஜில்லா போர்டுகளின் விசேஷ அதிகாரிகளுக்கும் மனுச் செய்து கொள்ளவேண்டும்.

இன்னின்ன ஜில்லா வாசிகள் இத்தனை இத்தனை பேர்கள் நியமிக்கப்படவேண்டும் என்று ஒரு வித நிர்ணயமில்லாதலால் எவரும் எந்த ஜில்லாவில் நியமிக்கப்படுவதற்காகவும் மனுப். போடலாம். இந்த வேலைக்காகத் தனி மனுப் பாரம் ஏதும் கிடையாது: மனுச் செய்து கொள்வதற்குஒரு விதக் கட்டணமும் கிடையாது. வேலைக்குத் தேர்ந்தெடுக்கப்படுபவர்களுக்கு ஒரு மாதம் குறுகிய காலப்பயிற்சி அளிக்கப்படும். இவர்களுக்கு பயிற்சி நடக்கும் இடத்துக்குப் போய் வருவதற்கான பிரயாணப் படியும், பயிற்சி காலத்துக்காக சம்பளமும் நிர்ணயிக்கப்பட்டுள்ள விகிதாசாரங்களின்படி கொடுக்கப்படும்.

(14-ம் பக்கத் தொடர்ச்சி)

பாமரர் முதல் படித்த அறிஞர்களும்தான் இச் செயலில் ஈடுபட்டுத் தங்கள் அன்புகரமான வாழ்வைத் துன்பகரமாகச் செய்து கொள்கின்றனர். இந்த ஒரு விஷயத்தில் மட்டும் மனக் கட்டுப்பாடும் வைராக்கியமும் அவசியம் வேண்டும்.

இக்கட்டுரையைப்படித்த ஒவ்வொருவரும் கடைப்பிடித்து நடப்பதுடன் மற்றவர்களுக்கும் எடுத்துக் கூறி அவர்களையும் நல்வழிக்குக் கொண்டு வருமாறு கேட்டுக்கொண்டு முடித்துக் கொள்கிறேன். வணக்கம் !

— “ சௌபாக்கியம் ”

செய்திச் சுருள்

★

பல்கலைக் கழகம் மலைமீது !

செப்டம்பர் 2-ம் தேதியன்று, திருப்பதியில், வேங்கடேஸ்வரா பல் கலைக் கழகம் தொடங்கப்பட்டது. ஆந்திர மாநில முதலமைச்சர் தோழர் பிரகாசம் பல் கலைக் கழகத்தைத் தொடங்கி வைத்தார். கடப்பை, சித்தூர், கர்னூல், அநந்தபூர், நெல்லூர் ஆகிய மாவட்டங்களில் உள்ள கல்லூரிகள், இந்தப் பல் கலைக் கழகத்துடன் இணைக்கப்படும். இது, ஆந்திர மாநிலத்தின் இரண்டாவது பல்கலைக் கழகமாகும். ஏற்கனவே, அங்கே, ஆந்திரா பல் கலைக் கழகம் பல ஆண்டுகளாக இருந்துவருகிறது. இந்தியாவில் உள்ள ஏனைய பல் கலைக் கழகங்களின் வேந்தர்கள் (Chancellors) அந்தந்தப் பகுதிகளின் கவர்னர்களாகும். ஆனால் திருப்பதியில் தொடங்கப்பட்டுள்ள பல் கலைக்கழகத்தின் வேந்தர், ஆந்திர உயர் நீதி மன்றத்தின் தலைமை நீதிபதியாகும்.

வெள்ளத்தால் வந்த வினை !

வடநாட்டில் உள்ள பீகார் மாகாணத்தில், சென்ற ஆறுமாத காலங்களில் மட்டும், வெள்ளப் பெருக்கின் காரணமாக 50கோடி ரூபாய் நஷ்டமேற்பட்டிருக்கிறது. சென்ற மூன்று ஆண்டுகளில் வெள்ளப் பெருக்கால் ஏற்பட்ட மொத்த நஷ்டம், ஏறத்தாழ 170 கோடி ரூபாய் இருக்கும். பீகார் மாநிலத்தின் மொத்த நிலப் பரப்பு 21,453 சதுர மைல்கள். இவற்றில் 9608 சதுர மைல்கள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டிருக்கின்றன. பீகார் மாநிலத்தில் மொத்தம் 21,107 கிராமங்கள் உள்ளன. இவற்றில் 8119 கிராமங்கள் வெள்ளத்தால் பாதிக்கப் பட்டிருக்கின்றன. இந்தத் தகவல்களைத் தந்திருப்பவர் டாக்டர் ஸ்ரீ கிருஷ்ண சின்ஹா—பீகார் மாநில முதலமைச்சர் !

புதிய தலைவர்—காங்கிரசுக்கு !

தமிழ் நாடு காங்கிரஸ் தலைவர் திருவாளர் காமராசர் முதலமைச்சராகிவிட்ட காரணத்தால், அவர் தன் தலைவர் பதவியை ராஜினமா செய்துவிட்டார். அவருக்குப் பதிலாக, இப்போது, திருவாளர் சட்டநாதக் கரையாளர், தமிழ் நாடு காங்கிரஸ் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்.

மழையோ மழை !

பம்பாய நகரத்தில், இந்த ஆண்டில், இதற்குள்ளாகவே, 115 அங்குல மழை பெய்திருக்கிறது. 1849-ம் ஆண்டில் தான் பம்பாயில், 115 அங்குல மழை பெய்ததாம் அதற்குப் பிறகு, இந்த நூற்றாண்டுக் காலத்தில், இப்போதுதான் அவ்வளவு அதிக மழை அங்கே பொழிந்திருக்கிறது.

கல்லூரிக் கல்வியில் மாறுதல்கள்

1956-ம் ஆண்டு ஜூன் மாதம் முதல், சென்னை மாநிலக் கல்லூரிகளில், இண்டர்மீடியட் என்கிற வகுப்பு இருக்காது. பி. ஏ. பி. எஸ்ஸி, பி.ஓ. எல் முதலாகிய டிகிரி வகுப்புகள் மட்டும்தான் இருக்கும்.

உயர்நிலைக் கல்வியை முடித்துவிட்டு, கல்லூரிகளில் சேரும் தகுதியுடையவர்கள் என்று அறிவிக்கப்பட்டவர்கள், நேரடியாக, இந்த 'டிகிரி' வகுப்புகளில் சேரும் தகுதியுடையவர்கள் ஆவர்.

இந்த டிகிரி வகுப்புகளின் காலம், 1956 முதல் 3 ஆண்டுகள் கொண்டதாக இருக்கும்.

அதுபோலவே, ஹானர்ஸ் வகுப்புகளின் காலம் இப்போதைய மூன்றாண்டுகளிலிருந்து நான்காண்டுகளாக உயர்த்தப்படும்.

செகண்டரிக் கல்விக் குழுவினர், உயர் நிலைப்பள்ளிப் படிப்பு, முதல் படிவம் முதல் ஆறும் படிவம் வரை ஆறு ஆண்டுகளாக இருப்பதை, இனி, ஏழாண்டுகள் கொண்டதாக மாற்ற வேண்டும் என்று சிபார்சு செய்திருக்கிறார்கள் அல்லவா—அந்தவிதமாக, உயர் நிலைக் கல்வியின் காலத்தில் ஓராண்டு அதிகப்படுவதால், கல்லூரிக் கல்வியின் காலத்தை ஓராண்டு குறைப்பது அவசியம் என்று கருதப்படுகிறது.

எனவேதான் சென்னைப் பல்கலைக் கழகத்தின் அகடமிக் கவுன்சில், அதனுடைய செப்டம்பர் 3-ம் தேதியின் கூட்டத்தில் மேற்கண்ட முடிவுகளைச் செய்திருக்கிறது.

உயர் நிலைப் பள்ளிகளில் ஏழாவது படிவம் (Seventh Form) தொடங்கப்படுகிற வரையில் எஸ். எஸ். எல். சி மட்டும் படித்துத் தேர்ச்சி பெற்று வருகிற மாணவர்களுக்கு, பல்கலைக் கழக நுழைவு வகுப்பு என்கிற பெயரால், ஓராண்டுக் காலம், கல்லூரிகளில் பயிற்சி அளிக்கவேண்டும் என்றும், மேற்படி 'அகடமிக் கவுன்சில்' முடிவு செய்திருக்கிறது.

சைனாவில், நேரு !

இந்த ஆண்டின் முடிவிற்குள், இந்திய முதல்வர் நேரு, சீன நாட்டிற்குச் சென்றுவர இருக்கிறார். அநேகமாக அக்டோபர் மாதத்தில் இந்தப் பயணம் அமையக் கூடும்.

திரு. வி. க. நினைவு நாள்

தொழிலாளர் தலைவர்—செந்தமிழ்த் தென்றல்—பகுத்தறிவாளர்தம் நண்பர்—பேரறிஞர் திரு. வி. க. அவர்கள் சென்ற ஆண்டு செப்டம்பர் 17-ம் நாளன்று இறந்துபட்டாரல்லவா, அவருடைய நினைவு நாள், இந்த ஆண்டு செப்டம்பர் 17-ம் நாளன்று, தமிழ் நாடெங்கும், எல்லாக் கட்சியினராலும் சிறப்புடன் கொண்டாடப்பட்டது.

தடை விலகிற்று !

கடந்த மாதம் 28-ம் நாள் சென்னையில் நடைபெறவிருந்த நடிகவேள் ராதா அவர்களின் வால்மீகி இராமாயணம் என்கிற நாடகத்தின் மீது தடைவிதித்திருந்தது அரசாங்கம். அந்தத் தடை இப்போது விலகிவிட்டது. நாடகத்தைத் தொடர்ந்து நடத்தலாம் என்று அரசாங்கம் அறிவித்துவிட்டது.

திருமண வயது

பதிவுத் திருமணம் (Registered-Marriage) செய்து கொள்பவர்களின், குறைந்தபட்ச வயது ஆண்களுக்கு 21-ம் பெண்களுக்கு 18-ம் என்று, இந்தியப் பாராளு மன்ற கீழ்சபை முடிவு செய்திருக்கிறது.

விலகினர்—வெளியேறினர்.

பாங்கி சிப்பந்திகளின் (Bank-Employees) சம்பள விகிதங்களைப் பற்றி தொழில் கோர்ட் அளித்த தீர்ப்பை, மத்திய அரசாங்கம் மாற்றிவிட்டது. இப்படி மாற்றுவது, தொழிலாளர்களின் உரிமையைப் பறிப்பதாகும் என்று கூறி, மத்திய அரசாங்கத் தொழிலமைச்சர் தோழர் வி. வி. கிரி, பதவியைத் துறந்து வெளியேறிவிட்டார். அவருக்குப் பதிலாக, இந்திய தேசியத் தொழிற்சங்கக் காங்கிரசின் முன்னாள் தலைவராகிய தோழர் கந்துபாய் தேசாய் இப்போது, தொழில் அமைச்சராகப் பொறுப் பேற்றிருக்கிறார்.

பிச்சைக்காரர்களுக்கும் வரி உண்டு !

பாகிஸ்தானில் உள்ள பகல்வால் என்னும் நகரத்தில், இப்போது, அநேகமாக, பிச்சைக்காரர்களே காணப்படவில்லை. இதற்குக் காரணம், அந்த நகரத்தில் உள்ள எல்லா மக்களின் மீதும், ஆளுக்கு மாதம் ஒன்றுக்கு இரண்டணா என்று விதிக்கப்பட்ட ஒரு வரியை, பிச்சைக்காரர்களிடமிருந்தும் வசூலிக்க அந்த நகர ஆட்சி மன்றம் முடிவு செய்ததுதான். அந்த வரி விதிப்பின் காரணமாக அந்த ஊர்ப் பிச்சைக்காரர்களில் மிகப் பலர் ஊரைவிட்டே வெளியேறிவிட்டனராம். ஆனால் ஒரு சிலர் மட்டும் இன்னமும் அங்கே இருக்கிறார்கள் என்பது நன்றாகத் தெரிகிறது. ஏனெனில், இதுவரை, பிச்சைக்காரர்களிடமிருந்து இந்த வரியின் மூலமாக, ரூபாய் இருபது வசூலிக்கப்பட்டிருக்கிறது.

அங்கே, ஆலோசனை !

குறுக் கெழுத்துப் போட்டிகள் நாட்டிலே மிக விரைவாக வளர்ந்து வருகின்றன அல்லவா! இவற்றால் அளவற்ற தீமை விளைந்துவருவதும் கண் கூடு. இவற்றின் தீய விளைவுகளை எப்படித் தடுப்பது என்பதுபற்றித் தங்கள் கருத்துக்களைத் தெரிவிக்கும்படி, மாகாண அரசுகளுக்கு மத்திய அரசு, அண்மையில் ஒரு வேண்டுகோள் விடுத்திருந்தது. அந்த வேண்டுகோளின்படி, மாநில அரசுகள் தங்கள் கருத்தை

அறிவித்துவிட்டன என்றும், விரைவில் இதுபற்றி சட்டம் ஒன்று கொண்டுவரப்படும் என்றும், குறுக்கெழுத்துப் போட்டிகளை முற்றிலும் தடைசெய்வதா அல்லது ஏதாவது ஒரு வகையில் அவற்றைக் கட்டுப்படுத்துவதா என்பதைப்பற்றி ஆலோசித்து வருவதாகவும், மத்திய அரசாங்க உதவி உள் நாட்டமைச்சர் தோழர் பி. என். தாதார், செப்டம்பர் 20-ம் நாளன்று, பாராளு மன்றத்தில் அறிவித்திருக்கிறார்.

உங்களுக்குத் தெரியுமா ?

1950-ம் ஆண்டின் கணக்குப் படி, உலகத்தில் உள்ள மக்களின் மொத்த தொகை 245 கோடி.

உலகத்தின் மக்கள் தொகை, நாளொன்றுக்கு சராசரி 85000 பேர்வீதம் அதிகமாகிக் கொண்டு வருகிறது.

இந்தியாவின் மக்கள் தொகை, ஆண்டு ஒன்றுக்கு சராசரி 36 லட்சம் வீதம் அதிகமாகி வருகிறது.

இந்தியாவின் மக்கள் தொகை, இதுபோது கிட்டத்தட்ட 36 கோடி. உலக மக்கள்தொகையில், இது, ஏறத்தாழ ஏழில் ஒரு பகுதி ஆகும்.

அறிஞரின் தேன் துளிகள் !

(எழில் வேலன், கல்லாவி)

1. நீ முட்டாள் போலக் காட்சி அளிக்கவேண்டும். ஆனால் உண்மையில் அறிவாளியாக இருக்கவேண்டும். இந்த இரண்டும் இருந்தால்தான் நீ உலகத்தில் வெற்றிபெற முடியும்.

— மான்டெஸ்கோ

2. அறிவாளியின் கையில் உள்ள எழுதுகோல் மையின் கறை போர் வீரனின் கையில் உள்ள இரத்தக் கறையைவிடப் புனிதமானது.

— முகம்மது நபி

3. மேகங்கள் எவ்வளவு தான் பெரியனவாக இருந்த போதிலும் அவற்றால் சூரியனை அடியோடு மறைத்துவிட முடியாது. அது போலவேதான் சுயவர்கள் எத்தனைதான் முயன்றாலும் சிறந்த மனிதர்களின் முன்னேற்றத்தைத் தடுத்துவிட முடியாது.

— தாகூர்

4. முட்டாள்களையும் பொய்யர்களையும் கடவுள்கள் என்று கூறுவதைவிட கடவுளின் சிம்மாசனத்தைக் காலியாக வைத்திருப்பது நல்லது.

— பெர்னாட்ஷா

சூயஸ் கால்வாய்

★

இயற்கை வளம் பதிந்துகிடந்த இந்தியா, இலங்கை, பர்மா, மலேயா முதலிய ஆசிய நாடுகளுடன், ஐரோப்பா பன்னெடுங் காலமாகவே வணிகத் தொடர்பு கொண்டிருந்தது. கி. பி. 1453-ல் துருக்கிய மன்னரால் போக்கு வரத்து வழிகள் தடுக்கப்பட்டாலும், 1498-ல் மார்க்க போலோ என்பவர் ஆப்ரிக்காவைச் சுற்றி நன்னம்பிக்கை முனை வழியாக இந்தியா வந்தடையும் கடல் வழி யொன்றைப் புதிதாகக் கண்டு பிடித்தார். இதன் பின் ஆசியா—ஐரோப்பா வாணிபம் செழித்து வளர வழி ஏற்பட்டது.

இந்தியா, பர்மா, மலேயா முதலிய நாடுகளிலிருந்து மூலப் பொருள்களைப் (rawmaterials) பெற்றுக்கொண்டிருந்த ஐரோப்பிய நாடுகள், தொழில் வளர்ச்சியில் முன்னேறத் தொடங்கின. பதினேழு பதினெட்டாம் நூற்றாண்டுகளில் ஐரோப்பா எங்கணும் அரிய பல புதிய கண்டு பிடிப்புகள் கண்டு பிடிக்கப்பட்டதன் பயனாக ஒரு 'தொழிற் புரட்சி' ஏற்பட்டது. இங்கிலாந்து, பிரான்சு, இத்தாலி, ஜெர்மனி முதலிய நாடுகளில் பெரும் தொழிற்சாலைகள் பெருகின. தொழிற்சாலைக்கு வேண்டிய மூலப் பொருள்களை ஆசியாவிலிருந்து ஏற்றிவரவும், தொழிற்சாலையில் செய்யப்பட்ட பொருள்களை ஆசியாவிற்கு ஏற்றிச் செல்லவும், கப்பல்களும் கடல் வழியும் இன்றியமையாதனவாக அமைந்தன.

1765-ல் ஜேம்ஸ் வாட் என்பவர் நீராவியின் சக்தியைக் கண்டு பிடித்த பின் அந்தச் சக்தியை உபயோகித்து விரைந்து செல்லும் நீராவிக் கப்பல் 19-வது நூற்றாண்டின் தொடக்கத்தில் கண்டுபிடிக்கப்பட்டது. இதனால் வணிக உலகம் பெரும்பயனடைந்தது. இங்கிலாந்திலிருந்து கடல் மூலம் இந்தியா வர அப்பொழுது ஆறு மாதங்களுக்கு மேலாயிற்று. ஆனால் நீராவிக் கப்பல் தோன்றியதும் 3 மாதங்களில் இந்தியா சேர முடிந்தது.

என்றாலும், இந்தியா வருவதற்கு ஆப்ரிக்காக் கண்டத்தையே ஒரு சுற்றுச் சுற்றிவர வேண்டியதாயிற்று. இதைவிடக் குறுகிய வழி யொன்றைக் கண்டு பிடிக்கவேண்டிய அவசியம் ஐரோப்பியர் எல்லோருக்கும் ஏற்பட்டது. அந்த முயற்சியின் முடிவாக வெட்டப்பட்டதுதான் **சூயஸ் கால்வாய்.**

சூயஸ் கால்வாய் 1869-ம் ஆண்டு திறக்கப்பட்டது. அது மத்தியதரைக் கடலையும் செங்

கடலையும் இணைத்து, ஐரோப்பாவிற்கும் இந்தியாவிற்கும் குறுகிய கடல் வழியைக் காட்டி நிற்கும் ஒரு செயற்கைக் கால்வாய். பெர்டினண்ட்டி லெசப்ஸ் என்ற பிரெஞ்சுப் பொறியியல் அறிஞர் இதனைக் கட்டி முடித்தார். சூயஸ் கால்வாய் ஆசிய–ஐரோப்பிய வணிகத்துறை செழிக்க உறுதுணையாக இருக்கின்றது. நீராவிக்கப்பல் கடற்பயண காலத்தைக் குறைத்தது போல் சூயஸ் கால்வாயும் கடற்பயண தூரத்தைக் குறைத்தது.

சூயஸ் கால்வாய் சென்ற நூற்றாண்டின் பிற்பகுதியில்தான் வெட்டப்பட்டதென்றாலும், மத்திய தரைக் கடலையும் செங்கடலையும் ஒரு கால்வாய் மூலம் இணைக்கவேண்டும் என்ற திட்டம், இன்றைக்குச் சற்றேறக் குறைய3500 ஆண்டுகளுக்குமுன் சிறந்தோங்கி வாழ்ந்த எகிப்திய மன்னரது திட்டம் என்பது வரலாறு மூலம் அறியக்கிடக்கின்றது.

கி. மு. 19–வது நூற்றாண்டில் நைல் நதி மூலம் சூயஸ் பகுதிக்கு ஒரு கால்வாய் இழுக்கப்பட்டு, செங்கடலும், மத்திய தரைக் கடலும் ஒன்று சேர்க்கப்பட்டது. கி. மு. 1300–ல் ஆண்ட முதலாவது செடி (Sedi I) என்ற மன்னன் காலம் வரை இக்கால்வாய் உபயோகத்தில் இருந்து வந்தது. பின் கி. மு. 1198—1167–ல் ஆட்சி செலுத்திய மூன்றாவது ரமேசஸ் காலத்தில் கால்வாய் அழிந்துபட்டது என்பது தெரிய வருகிறது. நைல் நதியின் வண்டல் படிவுதான், அழிவிற்குக் காரணமாக இருக்கக் கூடுமென கருதுகின்றனர். இன்றும் வாடிதுமிலத் (Wadi Tuwilat) பகுதிகளில் கால்வாய் இருந்ததன் அறிகுறிகள் தென்படுகின்றன. இதன் பிறகு, கி. மு. 600–ல் எகிப்தை ஆட்சி செலுத்தி வந்த நேகோ (Necho) என்ற மன்னன் நைல் நதியையும், செங்கடலையும் இணைக்க ஒரு கால்வாய் வெட்டத் தொடங்கினான். ஆனால் நைல் நதியின் வெள்ளப் பெருக்கும், புயற்காற்றும், கால்வாய் வேலைகளைத் தடுத்ததோடல்லாமல், ஹிராடஸ் (Herodotus) கூற்றுப்படி 1,20,000 பேர் மாண்டனர் என்று தெரிகிறது. 80 ஆண்டுகளுக்குப் பின் வந்த டேரியஸ் (Darius-520 B. C.) என்ற மன்னன் வேலையைத் தொடர்ந்து வெற்றிகண்டானாயினும், கால்வாய் முற்றிலும் செங்கடலுடன் இணைக்கப்படவில்லை. கி. மு. 285–ல் தான் இக்குறை பிலடெல்பஸ் என்ற மன்னனால் தீர்க்கப்பட்டது. கிளியோபாத்ரா (கி. மு. 44—30) காலத்தில் கால்வாயில் வண்டல் படிவு அதிகமாகி ஆழக் குறைவாகப் போனதால் மத்தியதரைக் கடலிலிருந்து கப்பல்கள் வர இயலாமற் போய் விட்டது. ரோமன் ஆட்சிக் காலத்தில் புபாஸ்டிலிருந்து செங்கடல் வரை கால்வாய் பழுதுபார்க்கப் பட்டது. டிராஜன் என்ற மன்

னன் புபாஸ்டிலிருந்து நைல் நதிக்கரையில் இருந்த பாபிலோன் (கெய்ரோ) நகரத்திற்கு ஒரு கால்வாய் வெட்டினான். ஆனால் பிற்பட்டு வந்த முஸ்லீம் ஆதிக்கத்தின்போது துருக்கி மன்னன் கி. பி. 770–ல் எதிரி நாடான அரேபியாவிற்கு போக்குவரத்தைத் தடுக்கக் கால்வாயை மூடிவிட உத்தரவிட்டான். கி. பி. 1000–ல் ஹக்கிம் என்ற மன்னன் கால்வாயைப் புதுப்பித்தாலும், ஆண்டுதோறும் நைல் நதியின் வெள்ளப் பெருக்கால் வண்டல் படிந்து கால்வாய் மூடப்பட்டு வந்தது.

நைல் நதியின் தொடர்பில்லாமல் செங்கடலையும், மத்திய தரைக் கடலையும் ஒரே நேரான கால்வாய் மூலம் இணைக்கவேண்டும் என்ற திட்டம் கி. பி. எட்டாம் நூற்றாண்டில்தான் வகுக்கப்பட்டது. ஆனால் அரசியல் சூழ்நிலை காரணமாக முயற்சி கைவிடப்பட்டது. மார்க்கோ போலோ பதினைந்தாம் நூற்றாண்டில் இந்தியாவிற்கு நன்னம்பிக்கை முனை வழியாக ஒரு கடல் வழியைக் கண்ட பிறகு, வெனிஸ்காரர்கள் நேரான ஒரு கால்வாயை வெட்ட எகிப்தியரைத் தூண்டினர். ஆனால் துருக்கியரின் ஆதரவு கிடைக்காததால் திட்டம் நிறைவேறவில்லை. நெப்போலியன் கி. பி. 1798–ல் எகிப்தில் தங்கியிருந்தபோது, கால்வாயை வெட்டத் தகுந்த திட்டத்தை வகுக்கக் கட்டளையிட்டான். லெபயர் என்ற பொறியியல் அறிஞர் முயற்சியில் ஈடுபட்டு, மத்திய தரைக் கடலுக்கும், செங்கடலுக்கும் நீர்மட்டத்தில் 29 அடி ஏற்றத்தாழ்வு இருப்பதாக வெளியிட்டார். இதனால் திட்டம் கைவிடப்பட்டது. ஆனால் 1846-ல் ஆரம்பிக்கப்பட்ட சூயஸ் கால்வாய் ஆராய்ச்சிக் கழகம் லெபயரின் கூற்றை மறுத்து தவறென நிரூபித்துக் காட்டியது. பிறகு 1854 வரை எவ்வித முயற்சியும் காணப்படவில்லை.

1854–ல் பெர்டினனட் டிலெசப்ஸ் (Ferdinand de Lesseps) என்ற பிரெஞ்சுப் பொறியியல் அறிஞர் ஒரு திட்டம் வகுத்து கால்வாயை வெட்ட முன்வந்தார். மூவாயிரம் ஆண்டுகளாக, மன்னர் பலரால் அவ்வப்போது முயற்சி செய்யப்பட்டுக் கைவிடப்பட்ட கால்வாய்த் திட்டத்தை, டிலெசப்ஸ் மேற்கொண்டு, அல்லல் பல ஏற்று, பத்து ஆண்டுக் காலம் உழைத்து, பெரும் பொருள் செலவில் சூயஸ் கால்வாயை வெட்டி, மத்தியதரைக் கடலையும் செங்கடலையும் இணைத்தார்.

1854–ம் ஆண்டு நவம்பர் திங்கள், 30-ம் நாள், டிலெசப்ஸ் எகிப்து வைசிராயாக இருந்த செயிட் பாஷா என்பவரிடமிருந்து கால்வாய் வெட்டுவதற்குரிய சலுகையைப் பெற்றார். அதன்படி **சூயஸ் கப்பற் கால்வாய் உலகப் பொதுமைக் கூட்டுக்குழு** (Compagnie Univer-

selle du canal Maritime de Suez) என்ற அமைப்பு ஏற்படுத்தப் பட்டது. இந்தக் குழுவிற்கு கால்வாயின் கண் உள்ள உரிமைக் காலம், கால்வாய் திறக்கப்பட்ட நாளிலிருந்து 99 ஆண்டுகளென வரையறுக்கப்பட்டது. அதாவது 1968–ம் ஆண்டு சூயஸ்கால்வாயின் முழு உரிமை எகிப்து நாட்டிற்குச் சேர்ந்து விடும். அதற்கு ஈடாகக் கால்வாய் கூட்டுக் குழுவிற்கு ஒரு அளவு தொகை கொடுக்கப்படும். இவ்வாறு எகிப்து வைசிராயால் அளிக்கப்பட்ட சலுகைக்குத் துருக்கிச் சுல்தானின் அனுமதி பெறவேண்டியிருந்தது. அது எளிதில் கிடைத்துவிடவில்லை. கால்வாய்க்கு அனுமதி அளித்தால் அது பிரெஞ்சு ஆதிக்கத்தை வளர்த்து, தமது கடலாணையைக் குறைக்கும் என்று கருதிய இங்கிலாந்தின் தந்திரமான எதிர்ப்பைச் சமாளிக்க வேண்டியிருந்தது.

அனுமதியைப் பெற்ற டிலெசப்ஸ் தமது வேலைகளைத் தொடங்கினார். கால்வாயின் அமைப்பையும் அதன் போக்கையும் வகுத்தார். இதற்கிடையில் எகிப்திய அரசாங்கம் விடுத்த வேண்டுகோளுக்கிணங்க திட்டத்தில் சிறு மாற்றம் ஏற்படுத்தப்பட்டது. அதன்படி நேரான கால்வாய் வெட்டுவதுடன், நைல் நதிக் கரையிலிருக்கும் கெய்ரோவிலிருந்து டிம்சா ஏரிக்கும், அதிலிருந்து மத்தியதரைக் கடலுக்கும், செங்கடலுக்கும் ஆக மூன்று ஆற்று நீர் கால்வாய்களையும் வெட்ட வேண்டும் என்பது சேர்க்கப் பட்டது.

திட்டத்தை நிறைவேற்ற பெருமளவில் பொருள் வசதியும், போதுமான பணியாட்கள் பலமும் தேவைப்பட்டது. 1858–ம் ஆண்டு சூயஸ் கப்பற் கால்வாய் உலகப் பொதுமைக் கூட்டுக்குழுவின் பெயரால், 20,00,00,000 பிராங்குகள் (சுமார் 12 கோடி ரூபாய்) மூலதனத்தைக்கொண்ட 4,00,000 பங்குச் சீட்டுகள் வழங்கப் பட்டன. பங்குச்சீட்டுகள் எல்லா நாடுகளுக்கும் பொதுவாகவே வழங்கப்பட்டிருந்தும், இங்கிலாந்து, ஆஸ்திரியா, அமெரிக்கா ரஷ்யா போன்ற பெரிய நாடுகள், சூயஸ் கால்வாயின் அவசியத்தை உணராததாலும், பிரான்ஸ் நாட்டின் அதிகாரம் வளரும் என்ற எண்ணத்தாலும், பங்குச்சீட்டுகளை வாங்க முன்வரவில்லை. பிரான்சு, எகிப்து, துருக்கி, டென்மார்க் முதலிய நாடுகளில் தான் பங்குச் சீட்டுகள் வாங்கப் பட்டன. பிரெஞ்சு நாட்டில் மட்டும் 2,00,000 சீட்டுகளுக்கு மேல் பணம் கொடுக்கப்பட்டது. துருக்கியில் 96,000 சீட்டுகளுக்கு மேல் வழங்கப்பட்டன

பிரான்சு, துருக்கி, எகிப்து ஆகிய நாடுகளில் கிடைத்த பணத்தைக்கொண்டு கால்வாய் வேலையைத் தொடங்கினார் டிலெசப்ஸ். 1859–ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 25–ம் நாள்,

1859 ஏப்ரல் 25-ம் நாள், மத்தியதரைக் கடலோரமுள்ள செயிட் துறைமுகத்திற்கருகில் கால்வாயின் முதல் வேலை ஆரம்பமாகி மண் எடுக்கப்பட்டது. முதல் நான்கு ஆண்டுக்காலத்திற்குள் ஆற்று நீர் வாய்க்கால்கள் வெட்டி முடிக்கப்பட்டன. கால்வாய் வேலை மிகத் தாமதமாக நடந்தேறி வந்தது. வேலைக்கு ஆட்கள் எகிப்திலேயே கிடைத்தனர். செயிட் பாஷா கொண்டு வந்த கட்டாய வேலை முறையினால் அதிக ஆட்கள் வந்து சேர்ந்தனர். வேலை துரிதமாக்கப் பட்டது. கட்டாய வேலை முறையில் அமர்ந்த பணியாட்களுக்கு, கூலி, உணவு, இடம் ஆகியவை வேண்டிய அளவிற்குக் கொடுக்கப்பட்டிருந்தும், செயிட் பாஷாவிற்குப் பின் வந்த இஸ்மாயில் என்பவர் கட்டாய வேலை முறையை எதிர்த்துத் துருக்கிச் சுல்தானிடம் முறையிட்டார். கால்வாய்க் கூட்டுக் குழுவும் இதற்கிணங்க மறுத்ததால், தகராறைத் தீர்க்க, பிரான்சு மன்னன் மூன்றுவது நெப்போலியனின் உதவி நாடப் பட்டது. பிரான்சு மன்னன் தீர்ப்பின்படிக் கட்டாய வேலை முறை ஒழிக்கப்பட்டது. செயிட் பாஷாவிடமிருந்து கால்வாய்க் கூட்டுக்குழு வாங்கிய சில நிலங்கள் திருப்பித்தரப்பட்டன. இவைகளுக்காகவும் ஆற்று நீர் கால்வாய்கள் வெட்டியதற்காகவும் எகிப்து அரசாங்கம் கால்வாய்க் கூட்டுக்குழுவிற்கு 8 கோடியே 40 லட்சம் பிராங்குகள் 15 ஆண்டுகளில் தரவேண்டும் என்றும் முடிவு செய்யப் பட்டது.

கட்டாய வேலைமுறை ஒழிந்த பின் கால்வாயை வெட்ட இயந்திர சாதனங்கள் உபயோகப்படுத்தப்பட்டதால் வேலையை விரைவாக முடிக்க வழி ஏற்பட்டது.

1865–ம் ஆண்டு, டிலெசப்ஸ், 100–க்கு மேற்பட்ட பல நாட்டு வணிகக் கழகங்களின் பிரதிநிதிகளை அழைத்து ஒரு விருந்தளித்து கால்வாயின் வேலைகளையும் அதன் உபயோகத்தையும் விளக்கினார். கால்வாய் முடிவு பெறுவதற்குள் அடிக்கடி பொருளாதார நெருக்கடிகள் ஏற்பட்டுக் கடன் வாங்கவேண்டிய நிலைமை வந்தது. கால்வாய் வெட்டி முடிப்பதற்குச் செலவிடப்பட்ட தொகை மொத்தம் 43,28,07,882 பிராங்குகளாகும் (சுமார் 26 கோடி ரூபாய்கள்). கால்வாய் 100 மைல்களுக்கு நீண்டு, மத்தியதரைக்கடலில் உள்ள செயிட் துறைமுகத்தில் ஆரம்பமாகி, எல்காண்டரா வழியாக, டிம்சா ஏரி (Lake Timsa), பிட்டர் ஏரி (Lake Bitter) ஆகிய ஏரிகளுடன் கலந்து பின் செங்கடலில் உள்ள சூயஸ் துறைமுகத்திற்குச் செல்கிறது. ஆரம்பத்தில் கால்வாய் 72 அடி அகலத்தையும் 26 அடி ஆழத்தையும் கொண்டதாக விளங்கியது. ஆனால் தற்பொழுது அகலம் 150 அடியாகவும் ஆழம் 33 அடியாகவும் ஆக்கப்பட்டிருக்கிறது.

1869-ம் ஆண்டு நவம்பர் திங்கள் 16-ம் நாள் கால்வாயின் திறப்புவிழா நடைபெற்றது. அன்று 68 கப்பல்கள் செயிட் துறைமுகத்திலிருந்து கால்வாய்க்குள் நுழைந்தன. 1870-ம் ஆண்டில் 500 கப்பல்களுக்கு மேல் கால்வாயைக் கடந்து சென்றன. கால்வாயைக் கடந்து செல்ல ஆரம்பத்தில் 36 மணி நேரம் பிடித்தது. 1887-க்குப் பின் மின்சார வசதிகள் ஏற்பட்டவுடன் இரவிலும் கப்பல்கள் செல்லமுடிந்ததால் கடக்கும் நேரம் பாதியாகக் குறைக்கப்பட்டது. தற்பொழுது 12 மணி நேரத்தில் கப்பல்கள் கால்வாயைக் கடந்துசெல்ல முடிகின்றது.

சூயஸ் கால்வாய் பொதுக் கால்வாயாக அமைக்கப்பட்டு எல்லா நாட்டுக் கப்பல்களுக்கும் தடையேதுமின்றி அனுமதி தரப்பட்டது. கால்வாயைக்கடந்து செல்லும் ஒவ்வொரு கப்பலும், ஏற்றிச் செல்லும் பொருள்களின் எடைக்குத் தகுந்தாற்போல் கால்வாய்க்கூட்டுக் குழுவிற்குக் கட்டணம் செலுத்தியது. ஆரம்பத்தில் ஒரு டன் எடைக்கு 13 பிராங்குகள் வீதம் கட்டணம் பெறப்பட்டது. பின் போக்குவரத்துக்கள் அதிகரிக்கவே கட்டணத் தொகை குறைந்து தற்பொழுது டன் எடைக்கு 7½ பிராங்குகளாக இருக்கின்றன. இதுவே கால்வாய்க் கூட்டுக் குழுவின் வருமானமாகும்.

முதலில் கால்வாய்ப் பங்குச் சீட்டுகளை வாங்க முன்வராத இங்கிலாந்துதான் சூயஸ் கால்வாயின் முழுப்பயனைப் பெற்றது. இந்தியா, பர்மா, மலேயா முதலிய நாடுகள் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தில் அடங்கியிருந்ததால், இங்கிருந்து மூலப் பொருள்கள் இங்கிலாந்துக்கு ஏற்றுமதி செயயப்பட்டன. 1870—80 ஆகிய பத்து ஆண்டுகளில் சூயஸ் போக்குவரத்தின் முக்கால் பாகம் பிரிட்டிஷ் கொடியின் கீழ் நடைபெற்றதாகும். சூயஸ் கால்வாயின் உபயோகத்தைப் பெரிதும் உணர்ந்த பிரிட்டிஷ் அரசாங்கம் 1875-ல் எகிப்தை ஆண்ட இஸ்மாயில் என்பவரிடமிருந்து 1,76,602 பங்குச் சீட்டுகளை சுமார் 40,00,000 பவுன் (சுமார் 6,00,00,000 ரூபாய்) கொடுத்து வாங்கியது. இதனால் கால்வாய்க் கூட்டுக்குழு நிர்வாகத்தில் நல்லதொரு அதிகாரத்தை நிலைநாட்டியது. 19 பிரெஞ்சுக்காரர், 10 ஆங்கிலேயர், இரு எகிப்தியர், ஒரு டச்சுக்காரர் ஆக 32 பேர் நிர்வாகக்குழுவில் அமர்ந்திருந்தனர்.

எகிப்து பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்திற்குட்பட்டிருந்ததால் இங்கிலாந்து சூயஸ் கால்வாயின் பொதுமைக் கொள்கையை ஏற்றுக் கொண்டாலும், அதன் படைபலத்தால் எதையும் செய்யலாம் என்ற நிலைமை ஏற்பட்டது. இது கண்ட பிரான்சு, 1888-ல் கான்ஸ்டாண்டிநோபிலில் ஒரு மாநாட்டைக் கூட்டியது.

மாநாட்டில், இங்கிலாந்து, பிரான்சு, ஜெர்மனி, ஆஸ்திரியா, ஸ்பெயின், இத்தாலி, நெதர்லாந்து, ருஷ்யா, துருக்கி, முதலிய நாடுகள் கலந்துகொண்டன. அதில் சூயஸ் கால்வாய் பற்றிய ஒரு தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. அதன்படி "சூயஸ்கால்வாய், போர்க்காலத்திலும் சரி, சமாதான நேரத்திலும் சரி—எப்பொழுதும், தடையேதுமின்றி திறக்கப்பட்டிருந்து போர்க்கப்பலானாலும், வணிகக்கப்பலானாலும்,—எல்லாக் கப்பல்களுக்கும் நாட்டுப் பாகுபாடு பாராமல்வழிவிடவேண்டும்" என்ற கொள்கைக்கு எல்லா நாடுகளும் உடன்பட்டன. சூயஸ் கால்வாயின் இப் பொதுமைக் கொள்கைக்கு இங்கிலாந்துதான் பாதுகாவலனாக இருந்து வந்தது.

இங்கிலாந்து, அமெரிக்கா, இத்தாலி, ஜெர்மனி, ஹாலந்து, பிரான்சு, டச்சு, ஜப்பான் ஆகிய நாடுகள் சூயஸ் போக்குவரத்தில் பங்கு கொண்டன. இதில் இங்கிலாந்தின் பங்கு பாதிக்கு மேலாகும். மத்திய கிழக்கு நாடுகளாகிய பாரசீகம், ஷாடி அரேபியா, ஈராக், எகிப்து ஆகிய நாடுகளில் எண்ணெய்க் கிணறுகள் கண்டுபிடிக்கப்பட்ட பின் சூயஸ் கால்வாயின் உபயோகம் முன்னிலும் பன்மடங்கு பெருகியது.

கால்வாயின் உபயோகம் அதிகரித்து வரவர, அதன் பொதுமைக் கொள்கையை நன்கு பாதுகாத்து வரவேண்டிய நிலையும் வளர்ந்து வந்தது. எகிப்து பிரிட்டிஷாரின் பார்வைக்குள் இருந்தாலும் அன்னிய ஆதிக்கத்திற்கு எகிப்தியரின் எதிர்ப்பு இருந்துவந்தது. இந்த நிலைமையால் கால்வாயைப் பாதுகாக்க வேண்டி 1936-ல் இங்கிலாந்து எகிப்துடன் ஒரு உடன்படிக்கை செய்துகொண்டது. அதன்படி 10000 வீரர்கொண்ட பிரிட்டிஷ் படை சூயஸ் பகுதிகளில் முகாமிட்டு கால்வாயின் பாதுகாப்புப் பொறுப்பை ஏற்றது. அங்கு ஒரு விமானக் கூடமும் நிறுவப்பட்டது.

இரண்டாவது உலக மகா யுத்தம் வரை சூயஸ் கால்வாயைக் கப்பல்கள் தடையேது மின்றிக் கடந்துவர பிரிட்டிஷ் படை பாதுகாப்பு அளித்து வந்ததால், 1888-ம் ஆண்டு கான்ஸ்டாண்டிநோபில் தீர்மானத்தின் பொதுமைக் கொள்கை உடைபடாமல் இருந்தது. ஆனால் 1949-ல், எகிப்து, இஸ்ரேல்மீது கொண்டிருந்த பகைமையின் காரணமாக, பாரசீக வளைகுடாவிலிருந்து இஸ்ரேலுக்குக்குச் செல்லும் எண்ணெய்க் கப்பல்களுக்குக் கால்வாயில் அனுமதிதர மறுத்தது. அலெக்ஸாந்திரியா, செயிட், சூயஸ் ஆகிய துறைமுகங்களில் கப்பல்கள் சோதனை செய்யப்பட்டு அனுப்பப்பட்டன. இங்கிலாந்து, பிரான்சு, அமெரிக்கா ஆகிய நாடுகள் பாரிசில் கூடி விடுத்த கூட்டு வேண்டுகோளை எகிப்து நிராகரித்தது.

உடன்பாட்டை ஏற்க மறுத்ததோடு 1936-ன் ஆங்கிலேய—எகிப்திய உடன்படிக்கையையும் ஏற்க மறுத்தது. எகிப்தில் கிளர்ச்சி எழுந்தது. பிரிட்டிஷாரின் வெளியேற்றத்தை விரும்பிய எகிப்தியர் சூயஸ் பகுதிகளிலுள்ள ஆங்கிலேய அமைப்புகளைத் தாக்க ஆரம்பித்தனர். பிரிட்டிஷ் படையினரால் துப்பாக்கிப் பிரயோகமும் செய்யப்பட்டது. கனல் சூயஸ் பகுதியில் தணிந்துவிட்டாலும் கெய்ரோவில் கொழுந்துவிட்டெரிந்தது. 1952 ஜனவரி 26-ல் கெய்ரோவிலுள்ள பிரிட்டிஷாரின் காரியாலயங்கள் தீக்கிரையாக்கப்பட்டு 10 ஆங்கிலேயரும் கொல்லப்பட்டனர். கலகத்தை அடக்க இயலாத எகிப்திய சர்க்கார் மறுநாளே கவிழ்ந்தது. ஆட்சிமுறையில் குழப்ப நிலை அதிகரித்தது. ஜூலை மாதத்தில் நாகிப் தலைமையில் இருந்த ராணுவம் அதிகாரத்தைக் கைப்பற்றியது. எகிப்து மன்னன் பரூக் நாட்டைவிட்டு ஓடினார். 1053-ம் ஆண்டு ஜூன் மாதம் 13-ம் நாளன்று எகிப்து குடியரசாக மாறிற்று. ஜெனரல் நாகிப் முதல் குடியரசுத் தலைவரானார்.

எகிப்துக்கும் இங்கிலாந்திற்கும் வளர்ந்த சச்சரவு நின்று சமாதானப் பேச்சு ஆரம்பமாயிற்று. ஒருமுறை முடிவு காணாமல் பேச்சு வார்த்தையில் முறிவு ஏற்பட்டது. ஆனால் மீண்டும் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டன. 1954-ம் ஆண்டு ஜூலைத் திங்கள் 27-ம் நாள் இங்கிலாந்து எகிப்து இரு நாடுகளுக்கும் ஒரு உடன்பாடு ஏற்பட்டு இரு நாடுகளும் கையெழுத்திட்டன. அதன்படி, (1) இன்னும் 20 மாதங்களில் பிரிட்டிஷ் படைகள் வெளியேறிவிட வேண்டும் என்றும், (2) அரபு நாடுகளாவது துருக்கியாவது எந்தச் சமயத்தில் தாக்கப்பட்டாலும் பிரிட்டிஷ் படை மீண்டும் சூயஸ் தளத்தில் இடம்பெறும் என்றும், (3) இந்த உடன்பாடு ஏழு ஆண்டுக் காலம் நிலை பெற்றிருக்கும் என்றும், (4) சூயஸ் தளம் ராணுவமல்லாத ஒரு பிரிட்டிஷ் கூட்டுக் குழுவினால் பாதுகாக்கப்படவேண்டும் என்றும், முடிவுகொள்ளப்பட்டது. 1888-ம் ஆண்டுத் தீர்மானத்தை இரு நாடுகளும் ஏற்றுக்கொண்டன.

சூயஸ் கால்வாய் சச்சரவில் சமாதானம் ஏற்பட்டாலும் எகிப்திற்கும் இஸ்ரேலுக்கும் உள்ள பூசல் தீர்ந்ததாகக் கூற முடியாது. எவ்வித சச்சரவுமின்றி மத்திய கிழக்கு நாடுகளில் அமைதியான நிலை ஏற்பட்டால்தான் சூயஸ் கால்வாயின் பொதுமைக் கொள்கை நிலைநாட்டப்படும். சூயஸ்கால்வாய் உலகில் ஒரு முக்கிய கடல் வழியாக விளங்குவதால், சூயஸ் பகுதியில் ஏற்படும் சமாதான நிலை எல்லா நாடுகளுக்கும் இன்றியமையாததொன்றாக இருக்கிறது.

—"மன்றம்",

மாணவர் மன்றம், சென்னை

(பதிவு செய்யப்பட்டது)

★

23-ஆம் ஆண்டுப் பரிசுப் போட்டிகள்

1954

நடுநிலைப்பள்ளி (Forms I to III வகுப்புக்கள் 6—8)

—★—

சரிதை—கட்டுரை—கையெழுத்துப் போட்டிகள்

★

அன்புடையீர்,

அழகான கையெழுத்து சிறந்த கல்விப் பயிற்சிக்கு ஓர் அடையாளம். கட்டுரை எழுதும் வன்மையும், கதை புனையும் ஆற்றலும், தெளிந்த அறிவுடைமைக்குத் தக்க எடுத்துக் காட்டுகள் என்பது தாங்கள் அறியாததன்று. ஆதலின் மாணவர்களை இத்துறைகளிலும் ஊக்கித் தமிழ் வளர்க்கும் நோக்குடன் மன்றத்தினர் ஆண்டுதோறும் இத்துறைகளில் போட்டிகள் நடத்திப் பரிசளித்து வருகின்றனர். மாணவர்கள் இந்நல்வாய்ப்பைப் பயன்படுத்திக்கொள்ள உதவ வேண்டுகிறோம்.

இப்போட்டிகளில் கலந்துகொள்ளும் மாணவர்கள் தாங்கள் இருந்த இடத்திலிருந்தே போட்டிக்குரிய சரிதை, கட்டுரை, கையெழுத்து முதலியவைகளை அனுப்பி வைக்கவேண்டும்.

பரிசுகள் :	முதல் பரிசு	வெள்ளிக் கோப்பை
	இரண்டாம் பரிசு	வெள்ளிப் பதக்கம்
	மூன்றாம் பரிசு	தமிழ் நூல்

பரிசுகள் ஒவ்வொரு போட்டிக்கும் தனித்தனியே வழங்கப்பெறும்.

போட்டிகள் ஒவ்வொன்றிலும் நூற்றுக்கு அறுபதுக்குக் குறையாத மதிப்பெண் பெறுபவர்களுக்கு முதல்தர நன்மதிப்பிதழும், ஐம்பதுக்குக் குறையாமல் பெருபவர்க்கு இரண்டாந்தர நன்மதிப்பிதழும், நாற்பதுக்குக் குறையாமல் பெறுபவர்க்கு மூன்றாந்தர நன்மதிப்பிதழும் வழங்கப்பெறும்.

கட்டணம் : ஒவ்வொரு போட்டிக்கும் கட்டணம் அணா ஐந்து ஆகும்.

கட்டணத்தை மணியார்டர் மூலமே அனுப்புதல் வேண்டும். தபால் தலைகளாக அனுப்புதல் கூடாது. பலர் ஒன்று சேர்ந்தும் அனுப்பலாம். நேரில் தந்தும் பற்றுச்சீட்டுப் பெற்றுக்கொள்ளலாம்.

விண்ணப்பம் வரைந்தனுப்பும் முறை :

மாணவர் பெயர், பெற்றோர் பெயர், வீட்டு முகவரி, படிக்கும் பள்ளியும் வகுப்பின் பிரிவும், கலந்துகொள்ள விரும்பும் போட்டிகள் ஆகிய விவரங்களும், தலைமை ஆசிரியர் அல்லது தமிழாசிரியர் கையொப்பமும் விண்ணப்பத்தாளில் இருத்தல் வேண்டும்.

கட்டணமும் விண்ணப்பமும் அனுப்பவேண்டிய இறுதி நாள் 24—9—54

போட்டிக் கட்டுரை, சரிதை, கையெழுத்து முதலியவைகளை அனுப்பிவைக்கவேண்டிய இறுதி நாள் 10-10-54.

அனுப்பவேண்டிய முகவரி :—

மயிலை. சிவ முத்து, போட்டிக் குழுத்தலைவர், மாணவர் மன்றம், 17, இரத்தின முதலி தெரு, கொண்டித் தோப்பு, சென்னை—1.

குறிப்பு: போட்டிகளுக்குரிய கையெழுத்து, கட்டுரை, சரிதை முதலியவைகள் அந்த மாணவராலேயே எழுதப்பட்டன என்று தலைமை ஆசிரியரோ, தமிழாசிரியரோ உறுதிமொழி அளிக்க வேண்டும். உறுதிமொழியின்றி வருபவை ஏற்றுக் கொள்ளப்பட மாட்டா.

தெளிவான கையெழுத்தில் விளக்கமாக மையினால் எழுதி அனுப்புதல் வேண்டும். தாளின் இருபுறமும் எழுதுதல் கூடாது. எழுதுவதற்குச் செலவான நேரத்தையும் குறித்தனுப்புக.

போட்டி விவரம்

கட்டுரை : கீழ்வரும் தலைப்புக்களில் ஒன்று குறித்து இரண்டு பக்கங்கட்கு மிகாமல் எழுதி அனுப்புதல் வேண்டும்.

1. ஓர் அழகான பூந்தோட்டம் அல்லது ஆச்சரியப்படும்படியான மாடமாளிகை—உன் கற்பனைசக்தியைக் கொண்டு வர்ணித்து எழுது.

2. நீ கண்டு மகிழ்ந்த திருமண விழா அல்லது கோயில் திருவிழா.

3. கல்வியில் சிறிதும் கருத்தில்லாத உன் நண்பனுக்கு படிப்பில் ஊக்கம் உண்டாகும்படி ஒரு கடிதம்.

கதை அல்லது சரிதை : கீழ்வரும் தலைப்புக்களில் ஒன்று குறித்து இரண்டு பக்கங்கட்கு மிகாமல் எழுதி அனுப்புதல் வேண்டும்.

1. நாயின் நன்றியறிதலைக் காட்டும் வகையில் ஒரு கற்பனைக் கதை.

2. ஔவையார் அல்லது கண்ணகி தன் சரிதத்தைத் தானே கூறுவதுபோல் எழுதுதல்.

3. கூண்டில் வாழ்ந்து வரும் ஒரு கிளி தன் சோகக் கதையை நமக்குக் கூறி வருந்துவதுபோல் எழுதுதல்.

கையெழுத்து :

ஒரு பக்கத்துக்குக் குறையாமல் எப்போதும் எழுதும் முறையில் அழகாக எழுதி அனுப்புதல் வேண்டும். உரைநடையாகவே இருத்தல் வேண்டும். ஒழுங்கு, பத்திப் பிரிவு, இடம் விட்டெழுதல் முதலிய நலன்களெல்லாம் கவனிக்கப்படும். இண்டியன் இங்கியில் எழுதுதல் அல்லது வர்ணம் தீட்டுதல் கூடாது. பென்சிலாலும் எழுதுதல் கூடாது.

நன்றி : நாங்கள் மகிழ்ச்சி கொள்ளும் வகையில் இப்போட்டிகளைச் சென்ற ஆண்டு மிக வெற்றிகரமாக நிறைவேற்றி வைத்த அறிஞர் அனைவருக்கும் எங்கள் பணிவார்ந்த வணக்கமும் நன்றியும் உரியனவாகுக.

குறிப்பு :—மாணவர்கள் தாங்கள் எழுதும் கதை, கட்டுரை, முதலியவைகளுக்குப் படி எடுத்து வைத்துக்கொண்டு அனுப்ப வேண்டுகிறோம். போட்டிக்கென அனுப்பப்பட்டவைகளின் உரிமைகள் முழுவதும் மன்றத்திற்கு உரியனவாகும்.

இங்ஙனம்,

டாக்டர் S. தருமாம்பாள்,
தலைவர்.

கே. வில்வபதி,
தணிகை உலகநாதன்,
அமைச்சர்கள்.

சென்ற இதழ் தொடர்ச்சி :—

பூமியினுள்ளே பிரயாணம்

(ஜி. கோரின்)

இந்த அடுக்கின் மையத்திலே சிலாபவம் (Fossil) ஒன்று கிடைக்கிறது. அந்தக் காலத்தில் நீரில் வசித்த 'டிரிலொபைட்' என்ற ஜந்துவின் உருக்குக் கவசம் போன்ற மேல் ஓடு இது. அப்போதெல்லாம் நம் பிரதேசம் உயிர் வகை இன்றி ஒரு பெரும் பாலைவனம் போன்று இருந்திருக்கவேண்டும். தரையில் அநேகமாய் எவ்வித உயிர் வகையும் இருக்கவில்லை — நீரில் மண்டிக் கிடக்கும் செடி, கொடிகள் போன்ற சில புராதனகாலத் தாவரங்கள் அப்பொழுதுதான் கடற்கரை ஓரங்களிலே தோன்றத் தலைப்பட்டன. ஆனால், கடல்களிலே பல்வேறு வகையான உயிர் ஜந்துக்களும் மலிந்திருந்தன. உருக்கு ஓட்டுடன் கூடிய ஆரம்பகால மீன் வகையைச் சேர்ந்த ஒரு ஜந்து முன்பே நீரில் தோன்றியிருந்தது. கடல்களின் பாதாளத்தில் கடல் அல்லிகள், திரள் திரளான டிரிலொபைடுகள், நட்சத்திர மீன்கள், 'கிரா' மீன்கள் முதலியவை இருந்தன. இரண்டு மீட்டர் நீளமிருந்த 'அம்மொனைட்' (7-வது படம்) இந்த ஜந்துக்களை வேட்டையாடி ஜீவித்தது.

மேலும் 1½ கில்லோமீட்டர் (சுமார் 1640 கஜம்) கீழே சென்றதும் சுண்ணாம்புக்கல் அடுக்கு முடிவுற்றுவிடுகிறது. இப்பொழுது நாம் 40 கோடி வருடங்களுக்கு மேல் பழங்காலத்தினுள்ளே பிரயாணம் செய்திருக்கிறோம். மேலும் கீழே செல்லச் செல்ல நாம் காணும் உயிர் வகைகள் மென்மேலும் புராதனமாகி வருகின்றன. சென்று மறைந்த அந்தப் பழங் காலத்தினுள் நாம் செய்துள்ள பிரயாணம் நம்மை உயிர் வகைகளின் தோற்றுவாய்களுக்கு அருகே அழைத்துக் கொண்டு வந்துள்ளது. பூமியில் முதல் முதல் தோன்றிய உயிர் ஜந்துக்கள் எவை? உயிர் முதன் முதலில் எப்படி உண்டாயிற்று?

ஆனால் பூமியின் அடுக்குகள் இக் கேள்விக்குப் பதில் கொடுக்க மறுக்கின்றன. ஆழம் மிகுந்த அந்த சுண்ணாம்புக் கல் அடுக்கைத் தாண்டி கீழே சென்றதும் உறுதியான படிகப்பாறைகளை வந்தடைகிறோம். மிகவும் பழமையான இப்பாறைகள் அனாதி காலத்தில் களிமண்ணிலிருந்து உருவாகி பூமியின் உந்தியிலே அவை ஒன்றோடொன்று பலமாக அழுந்தப்பட்டு மீண்டும் படிக மயமாகக்கப்பட்டன; ஒரு பகுதி திரும்பவும் உருக்கி எடுக்கப்பட்டது. எனவே உயிர் இனங்களின் மீத மிச்சங்கள் யாவும் இங்கே அடியோடு அழிவுற்றுவிட்டன. கரி கலந்த படிக ஓட்டம் கொஞ்சம் தென்படுகிறது. இக் கரி உயிர்வகைகள் சில இங்கிருந்ததற்கான அறிகுறியாக இருக்கக்கூடும். நீர் செடி கொடிகளின் மிச்ச சொச்சத்தை இக் கரி குறிப்பிடலாம். ஆனால், இவைபற்றி நாம் யூகிக்கலாமேயன்றி நிச்சயமாக எதுவும் கூற முடியாது.

மண், வண்டல், தூசி, சுண்ணாம்பு, சின்னஞ்சிறு கிளிஞ்சல்கள், தாவரங்கள் முதலியவற்றிலிருந்து உதயமாகி, காலப் போக்கிலே உறுதிபெற்று அடுக்குகளாக மாறியுள்ள பல அடுக்குகள் வழியே நாம் இதுவரை பிரயாணம் செய்து வந்தோம். இந்த அடுக்குகள் யாவற்றையும் கடந்து கீழே சென்றதும் மிகவும் கடினமான, படிகம் போன்றதொரு அடித்தட்டிற்கு வந்து சேருகிறோம்.

இந்த அடித்தளம் பூராவும் சலவைக்கல், கருங்கல், கினிஸ் என்றொரு வகைப் பாறை முதலிய பல வகையான பாறைகளால் ஆனது. மேலும் கார் இருளுக்குள்ளே பாறையில் குடைந்துகொண்டு சில தச மைல்கள் சென்ற பின் வெந்தணல் போன்ற பாறையை அணுகுகிறோம்; இன்னமும் ஒரே இருட்டாகத்தான் இருக்கிறது. மேலும் தொடர்ந்து கீழே சென்றால் சுமார் 600 டிகிரி

சென்டி கிரேட் உஷ்ணமுடைய சுடர்விட்டுப்பிரகாசிக்கும் பாறையைக் காணலாம். முதலில் பாறைகள் அவ்வளவு பிரகாசமாயிராது; மங்கிய ஒளிதான் தென்படும். ஆனால் கீழே செல்லச் செல்ல உஷ்ணமும் உயர்ந்து பிரகாசமும் அதிகரிக்கிறது. கீழே போகப்போக இந்தப் பிரகாசம் கருஞ் சிவப்பிலிருந்து இரத்தச் சிவப்பாகி, பின் வெண் சிவப்பாகவும் பொன் நிறமாகவும் மாறி இறுதியில் கண்ணைக் கூசும் வெண் சுடர் ஜோதியாகிவிடுகிறது. இந்த ஜோதி உருகித் தகதகவென்றிருக்கும் இரும்புக் குழம்பைவிட அதிகமான பிரகாசமுடையது. இந்நிலையை வந்தடைவதற்கும் நாம் கருங்கல் அடுக்கைத் தாண்டி நீண்ட தூரம் கீழே குடைந்தாக வேண்டும்.

அதற்கும் கீழே மேக வர்ணப் பாறை (basalts) எனப்படும் உருக்கு போன்ற பாறை அமைந்துள்ளது. பூமியின் சரித்திரத்திலே இப்பாறை பன்முறை கருங்கல் கவசத்தை உடைத்துக்கொண்டு வெடிப்புகள், எரிமலைகள் மூலம் மேல்த் தரை மட்டத்திற்கு வந்துள்ளது. இந்த மேகவர்ணப் பாறைக் குழம்பு சைபீரியாவில் எனிஸி, லீனா நதிகளுக்கிடையிலும் இந்தியாவிலும் ஐஸ்லாண்டிலும் பரந்த பல பிரதேசங்களில் உறைந்து கிடப்பதைக் காணமுடியும்.

மேகவர்ணப் பாறை மண்டலத்திற்குக் கீழே—தரை மட்டத்திலிருந்து சுமார் 70 கில்லோமீட்

டர் (சுமார் 44 மைல்) ஆழத்திலே—பூமியின் இடைத்தட்டு ஆரம்பமாகிறது. இத்தட்டின் கீழ்ப்பகுதியைச் சேர்ந்த பாறை பூமியின் மேல்மட்டத்திற்கு வருவது மிகமிக அரிதாகும். இவ்விதம் இப்பாறை மேல்மட்டத்திற்கு வருவதென்பது பூதத்துவ விஞ்ஞானிகளுக்கு மிகவும் முக்கியத்வமுடையதாகும். ஏனெனில் மதிப்பிடற்கரிய வைரங்களும் பிளாட்டினம் போன்ற அரிய உலோகங்களும் இந்தப் பாறையில்தான் அதிகமுள்ளன.

இதற்கும் கீழே என்ன இருக்கிறதென்பதைக் கண்டு பிடிப்பது எப்படி?

தரை மட்டத்திலிருந்து நூற்றுக்கணக்கான மைலுக்குக் கீழே எந்தத் துளையும் சென்றதில்லை. அந்த ஆழத்திலிருந்து இதுவரை எந்தப் பாறையும் மேல் மட்டத்திற்கு வந்து சேரவுமில்லை. பூமியின் உந்திக்குள்ளே அவ்வளவு ஆழத்திற்குச் சென்று வந்து, விஞ்ஞானத்திற்கு அதைப் பற்றி எடுத்துரைப்பவை பூகம்ப அலைகள் மட்டுமேயாகும். இவ்வலைகள் பூகோளத்தின் உட்பகுதி பூராவிலும் பன்முறை பிரயாணம் செய்துவிட்டு வருகின்றன. பூமியின் அடுக்குகளின் மட்டங்களிலே மோதி அவை சிதறுண்டு போகின்றன, அல்லது திருப்பி அடிக்கப்பட்டு திரும்பிவந்து சேருகின்றன. எனவே இவ்வலைகள் பூமியின் அடுக்குகளின்மேல் எல்லையும் கீழ் எல்லையும் எங்குள்ளன என்பதை எடுத்துரைக்கின்றன.

இந்த எல்லைகளில் சில, திட்டவட்டமாகத் தென்படுகின்றன. பூமியின் இடைத் தட்டிற்கும் 2900 கில்லோ மீட்டர் (1 கில்லோ மீட்டர் = $\frac{5}{8}$ மைல்) ஆழத்திலுள்ள அதன் உட்கருவிற்குமுள்ள எல்லை மிகவும் கூராகப் பிரித்துக் கட்டப்பட்டுள்ளது. இந்த எல்லையைக் கடக்கும்போது பூகம்ப அலைகளின் வேகத்தில் திட்டவட்டமான ஒரு மாறுதல் ஏற்படுகிறது. இங்கு பொருள்களின் கனபரிமாணம் திடீரென அபரிமிதமாக அதிகரித்துவிடுகிறது.

பூகோளத்தின் மத்திய பகுதிகளில் உஷ்ண நிலை அவ்வளவு விரைவாக உயரவில்லை என்று விஞ்ஞானிகள் கருதுகிறார்கள். பூமியினுள்ளே நடு மையத்தில் கூட 3 லிருந்து 5 ஆயிரம் டிகிரி செண்டிகிரேடுக்கு மேல் உஷ்ணமில்லை. ஆனால் அழுத்தம் (pressurc) மட்டும் மிக துரிதமாக உயர்ந்து விடுகிறது. 500, 1000, 1500 கில்லோ மீட்டருக்குக் கீழுள்ள பாறையின் அழுத்தத்தைக் கணக்கிட முடியும். 2900 கில்லோமீட்டர் ஆழத்திலே காற்று மண்டலத்தைப் போன்று 13 லட்சம் மடங்கு அதிகமான அழுத்தத்திலே அணுக்கள் நெருக்கப்பட்டு அவற்றினுள்ளிருக்கும் மின்னிருக்கள் (எலக்டிரான்கள்) இடம் மாற்றப்பட்டு அணுக்களின் அமைப்பும்

மேலும் ஒழுங்குடையதாக்கப்படுவது சாத்தியமே.

நமது பிரயாணம் சரியாக பூமியின் நடு மையத்தில் முடிவடைகிறது. துருவத்திலிருந்து கணக்கிட்டால் பூமியின் மையம் 6,356 கில்லோமீட்டர் (3973 மைல்) ஆழத்திலுள்ளது இவ்விடத்தில் எல்லா பொருளும் கொதிப்பேறி கண்ணால் சகிக்கமுடியாத ஒளியோடு ஜக ஜோதியாகப் பிரகாசித்துக் கொண்டிருக்கின்றன. ஆனால் பொருள்கள் உருகாமல் திடநிலையிலேயே இருக்கின்றன. இங்குள்ள அழுத்தம் காற்று மண்டலத்தின் அழுத்தத்தைப் போல் 35 லட்சம் மடங்கு அதிகமாக இருப்பதால் இவ்வளவு கடுமையான உஷ்ணமிருந்தும் பொருள்கள் உருகிவிடாமல் உள்ளன. இதைப் போன்ற அழுத்தத்தை எந்த ஆராய்ச்சாலையிலும் உண்டாக்குவதென்பது கற்பனைக்கும் எட்டாதது.

இக்கொடிய உஷ்ணத்தையும் அழுத்தத்தையும் நாம் வென்று பூமியின் மையத்தை வந்தடைவதாக வைத்துக் கொள்வோம். அப்பொழுது நாம் எடை, கனம் என்பது அறவே இல்லாதவர்களாகி விடுவோம். பூமியின் மையத்தை நோக்கிதான் எல்லாப் பொருள்கள் இழுக்கப்படுகின்றன; எனவே இந்த மையத்தில் ஆகர்ஷண சக்தி பூஜ்யமாகி விடுகிறது. மேலே உள்ள அடுக்குகளும் கீழே உள்ள அடுக்குகளும் நம்மை எதிரும் புதிருமாக இழுக்கின்றன; ஆனால் இவை ஒன்றுக்கொன்று சமமாக இருத்தலால் இறுதி விளைவு பூஜ்யமாகிவிடுகிறது. நம் உடல் கனமற்றதாகி விடுவதால் கையை சற்று ஆட்டினாலுங்கூட நம் உடல் முழுதுமே திரும்பி விடுகிறது. மேல் பக்கம், கீழ் பக்கம் என்ற வித்தியாசமே மறைந்து விடுகிறது. நம் உடல் எப்பக்கமிருப்பினும்—கால் பக்கத்தில் தலையும் தலைப்பக்கத்தில் காலுமாக மாறினும்—நாம் எப்பொழுதும் போலவே ஒரே நிலையில் இருப்பது போல்தான் தோன்றும்.

பூமியினுள்ளே செல்வதற்கு நாம் தொடங்கிய பிரயாணம் இங்கே முடிவடைகிறது. இங்கிருந்து எந்தப் பாதையில் சென்றாலும் மீண்டும் நாம் பூமியின் மேல் மட்டத்தை வந்தடைந்து விடுவோம்.

—"சோவியத் நாடு"

வார்தா திட்டம்
வருமாம்!

★

ஆச்சாரியாரின் குலதர்மக் கல்வித் திட்டம் ஒழிந்தது என்று குதூகலமடைந்திருக்கிறோம்.

அதை ஒழித்துக் கட்டிய மாவீரர் என்று காமராஜரைப் பாராட்டுகிறோம்.

இப்போது வார்தா கல்வித் திட்டம் புகுத்தப்பட இருக்கிறதாம்!

வார்தா கல்வித் திட்டம் அசல் வர்ணாஸ்ரமத் திட்டம், என்று பெரியார் உட்பட பேரறிஞர்கள் பலரும் கண்டித்துள்ளனர்.

வார்தா கல்வித் திட்டம், புகுத்தப்பட்டால், திராவிடம் சகித்துக்கொண்டிருக்காது என்பதை பெரியார் முன்பு வார்தா திட்டத்தைக் கண்டித்திருந்ததைக் கண்டவர்கள் அறிவர்.

திராவிடம் முழுமூச்சாக எதிர்த்த வார்தா கல்வித் திட்டத்தைக் காங்கிரஸ் மீண்டும் புகுத்தும் துணிவு எப்படி ஏற்படும் என்று நமக்குத் தோன்றவில்லை.

ஒரு சமயம், கழகங்கள் கனிமொழிபேசுகின்றன, காதலால் செயலற்றுப் போய் விட்டன என்று காங்கிரஸ் பெருந் தலைவர்கள் கருதுகிறார்கள்போலும்!

தவரான கணக்கு! ஆபத்தான பரீட்சை!

சிறுபொறி பெரு நெருப்பாகும்!!

வார்தா திட்ட இலட்சண விளக்கத்துக்காக ஒரு சிறு குறிப்பு ஈண்டு தரப்பட்டிருக்கிறது.

* * *

காந்தியார் கல்வித் திட்டம் என்னும் வார்தா திட்டம், முக்கியமாக ஆரம்பக் கல்வியைப் பற்றியதே ஆகும். ஆனால் சகிண்டரி, கலாசாலைப் படிப்பைப் பற்றியும் பேசியிருக்கிறார்கள். அதாவது சிறுவர்களும் சிறுமிகளும் 7 வயது முதல் 14 வயது முடியக் கட்டாயமாகப் படிக்கவேண்டும் என்று காந்தியார் சொல்லுவதால் அது சகிண்டரி கல்வியையும் பொறுத்ததேயாகும். மற்றும் காந்தியார் அந்தக் காலத்துக்குள் அந்தந்த இடத்துக்குத் தகுந்த தொழில் கல்வியைக் கற்றுக் கொள்ளவேண்டும், இன்னும் பலவிதமான விஷயங்களையும் படித்துத்தெரித்து கொள்ள வேண்டும் என்றும் சொல்லியிருக்கிறார்.

தீர்மானங்கள்.

1. *தேச முழுவதும் கட்டாய இலவசக் கல்வி 7 வருஷங்களுக்கு எல்லாக் குழந்தைகளுக்கும் கொடுக்க வேண்டும்.*

2. *எல்லாப் பாடங்களும் தாய் மொழியின் மூலமே கற்றுக் கொடுக்கவேண்டும்.*

3. *தேகத்தினால் செய்யக் கூடிய சாமான்களை உற்பத்தி செய்யக் கூடிய வேலையின் மூலமே கல்வி கற்பித்து, இடத்துக்குத் தக்க கல்வியின் மூலம் குழந்தையின் அறிவை எல்லா வழிகளிலும் வளர்க்க வேண்டும்.*

4. *உபாத்தியாயர்களுக்கு வேண்டிய சம்பளத்தைக் கொஞ்சங் கொஞ்சமாக இந்த முறையில் சம்பாதித்துச் சரிபடுத்திக் கொள்ளலாம் என்று எதிர்பார்க்கப் படுகிறது.* இந்த மேற்கண்ட தீர்மானங்களைக் கொண்டு வந்து முடிவு செய்த போது காந்தியார் வழக்கம்போல் வியாக்கியானம் செய்திருக்கிறார், நாலாவது தீர்மானம் வந்தபோது புரொபஸர் கே. டி. ஷாவும் அவரைப் பின்பற்றி கனம் டாக்டர் சுப்பராயனும் தங்களுக்கு அதில் நம்பிக்கையில்லை என்று தெரிவித்து விட்டார்கள். அதன் பேரில் காந்தியார் அந்தத் தீர்மானத்தில் 'கொஞ்சங் கொஞ்சமாக' (Gradually) என்ற வார்த்தையைச் சேர்த்தார். அந்த வார்த்தையைப் போட்ட கருத்தானது 7 வருஷகாலத்தில் முதல் வருஷத்திலிருந்து மேல் வகுப்புகளுக்குப் போகப் போகச் சாமான்களை உற்பத்தி செய்து, விற்று உபாத்தியாயர்களுக்குச் சம்பளம் கொடுத்து விடலாம் என்றோ அல்லது இந்த 7 வருஷ திட்டப் படியே நாள் செல்லச்செல்ல, காந்திஜீயின் அசல் தீர்மானத்தில் கண்டபடி, 7, 8 வயதுக் குழந்தைகளும் சம்பாதிக்கும் திறமை பெற்று விடுவார்கள் என்றோ அர்த்தம் போலும்.

அதாவது இந்தத்திட்டம் அவசியம் என்பதற்கு காந்தியார் காரணம் காட்டும்போது,

"Most of the boys were lost to the parents and to the occupation to which they were born"

"In this age those born to certain professions had forgotten them, taken to clerical careers, and were lost to the country side"

என்று காரணம் சொல்லி இருக்கிறார்.

("South Indian Teacher" என்கின்ற பத்திரிகை நவம்பர் இதழ்)

"பெரும்பாலான பையன்களைப் பெற்றோர்கள் இழந்தவர்கள் ஆகிவிட்டார்கள்; அந்தப் பையன்கள் தங்கள் ஜாதி தொழிலை விட்டு விட்டார்கள்; எந்தத் தொழிலுக்குப் பிறந்தார்களோ அதாவது எந்தத் தொழில் செய்யும் குடும்பத்தில் பிறந்தவர்களோ அந்தத் தொழிலை விட்டு விட்டு குமாஸ்தாக்களாகப் பலர் போயிருக்கி

றார்கள்" என்று "உலகம் போற்றும் உத்தம மகாத்மா" திருவாய் மலர்ந்தருளி யிருக்கிறார்.

விவசாயம், தச்சு, கொல்லு வேலை, க்ஷவரத் தொழில், வண்ணான் தொழில், செருப்பு தொழில் இன்னும் எத்தனையோ தொழில் செய்பவர்கள் தற்காலப் போக்கை அறிந்து கொண்டு தாங்களும் முன்னேற்றமடைய முயற்சிக்கிருக்களே அதைத் தடுப்பதற்காகவா இந்தக் கொடிய திட்டத்தைக் காந்தியார் கொண்டு வந்திருக்கிறார் என்று கேட்கின்றேன். மேற்கண்ட தொழில்களில் ஒன்றுமே செய்யாமல் உடம்பு நோகாமல் வயிறு வளர்த்துக் கொழுத்துக் கொண்டிருக்கும் பார்ப்பனர்கள் எல்லோரும் எல்லா உத்தியோகங்களிலும் அமர்ந்து இந்திரபோகம் அநுபவித்துக் கொண்டிருப்பதற்காகவா இந்தப் பாழாய்ப் போன திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார் என்று கேட்கிறேன். இது பழைய வருணாச்சிரம தர்மத்துக்கு அடிகோலுவதல்லவா என்று கேட்கின்றேன்.

இந்த உண்மையை உணராத சில கயவர்கள் காந்தி திட்டத்தை ஆதரித்துப் பார்ப்பனரல்லாத மக்களுக்கும் நாட்டுக்கும் பெருங்கேடு சூழப் பார்க்கிறார்கள். இன்னொரு முறை வார்தா தீர்மானத்துக்குத் தகுந்தபடி சில பிரகஸ்பதிகள் சேர்ந்து கொண்டு போட்டிருக்கும் பாடத்திட்டத்தைப்பற்றி ஆராய்கிறேன்.

தற்காலக் கல்வி முறைப்படியார் எந்தத் தொழில் செய்யப் பிறந்திருந்தாலும், எந்த ஜாதியில் பிறந்திருந்தாலும், வேறு துறைகளில் அவருக்குத் தன்னுடைய திறமையைக் காட்ட வசதியிருக்கிறது. ஆங்கில அரசாங்கம் ஏற்பட்ட பிறகே இரட்டை ஆட்சியில் சர்க்கார் அதிகாரிகள் செய்த சட்டங்களால் ஒரு பார்ப்பானும் ஒரு "பறைய"னும் சேர்ந்து படிக்கும்படியான நிலைமை ஏற்பட்டது. பார்ப்பனர்கள் 'தாழ்ந்த ஜாதியாருக்கு' வணங்கி நடக்கும்படியாக ஏற்பட்டிருக்கிறது. வர்ணாச்சிரம அதர்மம் ஏற்பட்டால் தவம் செய்யும் ஒரு தமிழன் கொலையுண்பான், குருபக்தி கொண்ட ஒரு ஏகலைவனுடைய கட்டை விரலை ஒரு கொலை பாதகத் துரோணன் வெட்டி வாங்குவான்.

இன்னும் பிள்ளைகளெல்லாம் சாமான்களை உற்பத்தி செய்வதில் தங்களது நேரத்தைச் செலவழிக்கலாம் என்று சொல்லப்படுகிறது. இந்தக் காலத்திலேயே எத்தனையோ தொழிலாளிகள் தொழில் செய்யமுடியாமல் வேலையில்லாத் திண்டாட்டத்தால் கஷ்டப்படுகிறார்கள். வார்தா முறைப்படி இன்னும் அந்தப் பட்டாளம் பெருகும்படி நேரிடும். மற்றொரு விஷயம், இந்தக் காலத்தில் இயந்திரங்

களைக் கொண்டு ஏராளமான சாமான்களை குறைந்த நேரத்தில் உற்பத்தி செய்து மலிவாகக் கொடுக்கமுடியுமாதலால் மக்கள் கையால் எவ்வளவு நீண்டகாலம் கஷ்டப்பட்டுச் சாமான்களை உற்பத்தி செய்து அதிக விலைக்கு விற்று எப்படி உயிர் வாழ முடியும் என்பதையும் கவனிக்க வேண்டும்.

ஒரு மாணவன் எதைப் பார்த்தாலும் அதைப்பற்றி ஆராய்ச்சி செய்து முழு வரலாற்றையும் தெரிந்துகொள்ள வேண்டுமென்று சொல்லப்படுகிறது. உதாரணமாக ஒரு தக்ளியைப் பார்த்தால் அது என்னவென்றும், எங்கு செய்யப்படுகிறது என்றும் தெரிந்துகொள்ள வேண்டுமாம். பஞ்சை எடுத்துக் கொண்டால் அது எங்கு விளைகிறது, எப்படி விளைகிறது, எப்படிப்பட்ட மண் வேண்டும், என்பன போன்ற கேள்விகளைக் கேட்டுத் தெரிந்துகொள்ளவேண்டும் என்றும் சொல்லப்படுகிறது. ஆனால் தற்கால மாணவன் மோட்டார் கார், ஆகாயவிமானம், சினிமா, ரயில்வே, ரேடியோ, மின்சாரம் இவைகளைப்பார்த்து இவற்றின் வரலாற்றை அறிந்து கொள்ளவும் அனுபவிக்கவும் ஆசைப்படுவானேயொழிய விருப்பமில்லாதவைகளைப்பற்றி ஒன்றும் ஆராய மாட்டான்.

இந்தத் திட்டப்படி கல்வி தன் செலவைச் சரிப்படுத்திக்கொள்ள முடியாவிட்டாலும், சிறந்தகொள்கையென்று சொல்லப்படுகிறது. இந்த யோசனை தற்கால உலகத்துக்கு உதவாக்கரையானது.

முக்கியமான தொழில், தாய் பாஷை, கணக்கு, சமூகப்பாடங்கள், பொது விஞ்ஞான அறிவு, படம் வரைதல், சங்கீதம், ஹிந்துஸ்தானி என்ற பாடங்கள் கற்றுக்கொடுக்கப்படுமாம். ஆனால் ஒவ்வொன்றையும் பற்றி ஆழ்ந்த அறிவு பெருக வேண்டுமென்றும் சொல்லப்படுகிறது. ஒவ்வொரு நாளும் பாடங்களுக்குக் கொடுக்கும் நேரத்தைப் பார்த்தால் எதிர்பார்க்கும் அளவு அசாத்தியம் என்றும் தெரியும். கைத்தொழிலுக்கு மாத்திரம் 3 மணி 20 நிமிஷம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இளைஞர்கள் இவ்வளவு நேரம் உழைப்பதாயிருந்தால் சமூகத்தின் நிலைமை என்னவாகும்? தேகாப்பியாசத்துக்கும் 10 நிமிஷம் உண்டு. இதன்படி எல்லாரும் சாண்டோக்கள் ஆகிவிடுவார்களா? சங்கீதம், படம் வரைதல், கணக்கு இந்த மூன்றுக்கும் 40 நிமிஷம் போதுமா? இந்த நேரத்தில் எவ்வளவு படித்துக் கொள்ள முடியும்?

பழமையை மதித்து அதன் பெருமையைக் காப்பாற்றவேண்டும், அதே சமயத்தில் தற்கால விஞ்ஞான ஆராய்ச்சிகளை அறிந்து கொள்ளவேண்டும் என்று சொல்லப்படுகிறது. இது எப்படி முடியும்? 'எனக்கு மதம் இல்லை' என்று சொல்லிவிட்டுப் பெண்சாதி பெற்றோர் இவர்களின்

எலும்பைக் கங்கையில் போடுவதா? ஆங்கிலம் படித்துப் பல பட்டங்களும்பெற்று ஊரை ஏமாற்றுவதற்காக மேல் நாட்டுக்குப் பிரயாணம் செய்யும்போது களிமண்ணும் கங்கை நீரும் கொண்டு போவதா? வைத்திய சாஸ்திரங்களைக் கரைத்துக் குடித்துவிட்டு அத்துடன் மாட்டு மூத்திரத்தையும் சாணியையும் சேர்த்துக் குடிப்பதா? வான சாஸ்திரம் படித்துவிட்டுக் கிரஹண தினத்தில் 'புண்ணிய தீர்த்தங்கள்' முழுகுவதா? அஹிம்சையின் பேரால் பணக்காரர்களை ஆதரித்து ஏழைகளை வதைத்து 'ரிஷி' பட்டம் பெறுவதா? என்று தெரியவில்லை.

இந்தத் திட்டம் அமுலுக்கு வந்தால் எந்தக் காலத்திலும் நமது தேசம் அந்நியருக்கு அடங்கியிருக்கவேண்டும். ஆனால் பார்ப்பானுக்குப் பஞ்சமில்லை. நிர்வாக உத்தியோகமெல்லாம் அவன் கையிலிருக்கும், கோவில் குளங்களெல்லாம் அவன் சொத்தாயிருக்கும். நம்முடைய வீட்டு அரிசி, உப்பு, புளி, மிளகாய், பருப்பு, காய்கறிகளின் எல்லாம் அவன் வயிற்றிலிருக்கும், நம்முடைய காசில் வாங்கிய ஜவுளி அவன் மானத்தைக் காப்பாற்றும், என்பதைத் தவிர வேறு பலன் இல்லை.

இந்த மோசமான திட்டம் பெண் மக்களை எந்தக் காலத்திலும் அடிமைகளாகவே வைத்திருக்கும். 4-வது, 5-வது வருஷத்தில் பெண்களுக்குச் சிறிது மாறுதலுடனே பாடம் கற்பிக்கப்படும் என்றும், 6-வது 7-வது வருஷங்களில் 'குடித்தனப்பாங்கை'ப் பற்றியே கற்றுக்கொடுக்கப்படும் என்றும் சொல்லப்படுவதால் மறுபடியும் பெண்கள் ஆண்களின் போகத்துக்கும் பிள்ளை பெறவும் கருவிகளாகவே இருப்பார்கள் என்று தெரிகிறது. இதனாலும் நமது தேசத்தின் முன்னேற்றம் பெரிதும் தடைப்படும்.

'திராவிட நாடு'

அறிஞரின் தேன் துளிகள்!

(எழில் வேலன், கல்லாவி)

இராமாயணத்தில் நூறு பாட்டும், பெரிய புராணத்தில் இரு நூறு பாட்டும் படிப்பதைக்காட்டிலும் திருக்குறளில் பத்து பாட்டு படிப்பது எவ்வளவோ மேலானது. சிறந்தது. உயர்ந்தது.

— பெரியார் ஈ. வெ. ரா.

மக்கள் என்று சொல்லாமல் மஹாஜனங்கள் என்று சொல்லுவதால் என்ன குற்றம் ஏதும் வந்துவிடவில்லை. தமிழர்கள் தமிழை மறந்துவிட்டனர் என்ற பழியை பிற்காலம் நம்மீது சுமத்தும் அவ்வளவுதான்.

— அறிஞர் அண்ணா.

Edited, Printed and Published by P. Veeraraghavan at the 'Venkatesan Press' 94/95, New St. Mannady, Madras-1.

இயற்கைப் பாடமும் தோட்ட வேலையும்

(M. விவேகானந்தா, B. Sc., L.T.)

	புத்தகத்தின் விலை	கெஜட் பக்கம்	அங்கீகாரமான தேதி
மூன்றாம் வகுப்பு	0 5 0	...	...
நான்காம் வகுப்பு	0 7 0	18	19-5-'54
ஐந்தாம் வகுப்பு	0 8 0	18	19-5-'54

புதிய தேச ஆட்சி முறை

(D. சிவசங்கரராவ், B.A ,L.T.)

மூன்றாம் வகுப்பு	0 5 0	11	19-5-'54
நான்காம் வகுப்பு	0 7 0	8	19-5-'54
ஐந்தாம் வகுப்பு	0 8 0	8	19-5-'54

புதுமுறை சங்கக் கணிதம்

K. வீராசாமி, B.A.,L.T ,

மூன்றாம் வகுப்பு	0 8 0	14	19-5-'54
நான்காம் வகுப்பு	0 10 0	14	19-5-'54
ஐந்தாம் வகுப்பு	0 12 0	14	19-5-'54

நம் நாட்டு வரலாறு

M. தக்ஷிணாமூர்த்தி, B. A., B. T.
T. S. உமாபதி, M. A., L. T..

மூன்றாம் வகுப்பு	0 5 0	11	19-5-'54
நான்காம் வகுப்பு	0 7 0	8	19-5-'54
ஐந்தாம் வகுப்பு	0 9 0	10	19-5-'54

பாலர் இந்து தேச சரித்திரம்

M. பாலசுப்பிரமணியம், M. A.

ஐந்தாம் வகுப்பு	0 9 0	7	19-5-'54

சிறுவர் பூகோளம் (Tamil)

T. S. உமாபதி, M. A., L. T.

இரண்டாம் வகுப்பு	0 5 0	13	19-5-'54

V K. சேஷாத்திரி, B, A.,L. T.

மூன்றாம் வகுப்பு	0 7 0	12	19-5-'54
நான்காம் வகுப்பு	0 10 0	12	19-5-'54
ஐந்தாம் வகுப்பு	0 12 0	12	19-5-'54

Mother India English Reader Primer - I 0 5 0

బాలుర భూగోళము (Telugu)

ஐந்தாம் வகுப்பு	0 12 0	12	19-5-'54

Regd No. M 1508

உயர்தர ஆரம்பப் பாடசாலைகளுக்கு

(For Higher Ele Schools)

வீரபாண்டியன் தமிழ் வாசகங்கள்

(Vidwan - V. Subramaniam)

ஆறும் வகுப்பு	0	12	0	23	19-5-'54
ஏழாம் வகுப்பு	0	14	9	41	19-5-'54

புதுமுறை சங்கக் கணிதங்கள்

(V. K. Seshadri, B. A; L. T., & V. S. Leela B. A. B T.)

ஆறும் வகுப்பு	1	2	0	15	19-5-'54
ஏழாம் வகுப்பு	1	4	0	15	19-5-'54
எட்டாம் வகுப்பு	1	4	0	16	19-5-'54

சமூக நூல்

(T. S. Umapathy, M. A., L. T.)

ஆறும் வகுப்பு	1	4	0	38	19-5-'54
ஏழாம் வகுப்பு	1	8	0	38	19-5-'54
எட்டாம் வகுப்பு	1	8	0	38	19-5-'54

அநுமான முறை இலக்கணமும் உரை நடை ஆக்கமும்

ஆறும் வகுப்பு	0	12	0	41	19-5-'54
ஏழாம் வகுப்பு	0	12	0	41	19-5-'54
எட்டாம் வகுப்பு	0	12	0	41	19-5-'54

Printed at the Venkatesan Press, Madras—1.

75

ஆரம்பக்கல்வி

ELEMENTARY EDUCATION

OCTOBER 1954



275
4-54.

கவிமணி

சி. தேசிக விநாயகம் பிள்ளை

ஆரம்பக்கல்வி ஆபீஸ்
94-95, புதுத் தெரு
மண்ணடி, சென்னை-1

ASSOCIATION PUBLISHING HOUSE

"ARAMBA KALVI OFFICE"

94/95, New Street, Mannady P. O. Madras-1.

POST BOX NO. 1818

"ஆரம்பக்கல்வி" இனாம்

ஒன்று முதல் ஐந்தாம் வகுப்பு வரையில், எமது **"புதுமுறை சங்க வாசகங்களை"** அல்லது **"வீரபாண்டியன் தமிழ் வாசகங்களை"** பாட புத்தகங்களாக, அல்லது ரூ. 50-க்குக் குறையாமல் இதர பாட புத்தகங்களுக்கு ஆர்டர் கொடுத்து ஆதரிக்கும் எய்டெட், பஞ்சாயத்து, லேபர் ஆரம்பப் பாடசாலைகளுக்கு, **"ஆரம்பக்கல்வி"** மாதப் பத்திரிகையை இனாமாக மாதாமாதம் அனுப்பிவைக்கப்படும்.

புதுமுறை சங்க வாசகங்கள்

	புத்தகத்தின் விலை			கேஜட் பக்கம்	அங்கீகாரமான தேதி
முதல் வகுப்பு	0	4	0	19	19-5-'54
இரண்டாம் வகுப்பு	0	5	0	22	19-5-'54
மூன்றாம் வகுப்பு	0	7	0	23	19-5-'54
நான்காம் வகுப்பு	0	8	0	23	19-5-'54
ஐந்தாம் வகுப்பு	0	9	0	23	19-5-'54

வீரபாண்டியன் தமிழ் வாசகங்கள்

முதல் வகுப்பு	0	4	0	25	19-5-'54
இரண்டாம் வகுப்பு	0	5	0	25	19-5-'54
மூன்றாம் வகுப்பு	0	8	0	25	19-5-'54
நான்காம் வகுப்பு	0	9	0	25	19-5-'54
ஐந்தாம் வகுப்பு	0	10	0	25	19-5-'54

கதைப் புத்தகங்கள்

(S. S. அருணகிரிநாதர்)

பாலர் நல்ல கதைகள் நான்காம் வகுப்பு	0	5	0	28	19-5-'54
பாலர் கதா போதினி ஐந்தாம் வகுப்பு	0	5	0	29	19-5-'54

ஆரம்பக்கல்வி

ஆரம்பாசிரியர்கள், ஆரம்பப் பாடசாலை மானேஜர்கள் முன்னேற்றத்திற்கு உழைக்கும் இதழ்

ஆசிரியர்: பி. வீரராகவன்

வருட சந்தா ரூ. 3.] [தனிப் பிரதி 4 அணா.

மலர் 15 } அக்டோபர் 1954 { இதழ் 10

REGISTRAR OF BOOKS 20 OCT 1954 MADRAS

செந்தமிழ்ச் சோலையின் சிந்தனைக் குயில்!

செந்தமிழ்ச் சோலை, தன் சிந்தனைக் குயிலை இழந்துவிட்டது. கவிதை உலகம், தன் கருத்துக் கருவூலத்தை இழந்துவிட்டது. குழந்தைகளின் உள்ளம் அவற்றிற்கு ஆர்வமும் ஆநந்தமும் ஊட்டி வந்த அருமைத் தோழனை இழந்துவிட்டது. தமிழ்நாட்டு மக்கள், தங்கள் வாழ்க்கைக்கு வழிகாட்டியாக விளங்கிவந்த வீர உள்ளம் ஒன்றை இழந்துவிட்டனர். இருபதாம் நூற்றாண்டு, தன் இணையற்ற கவிஞர்களில் ஒருவரை இழந்துவிட்டது. கவிமணி தேசிக விநாயகம் அவர்கள் நம்மைவிட்டு மறைந்துவிட்டார்.

ஓர் எளிய ஆரம்ப ஆசிரியராக வாழ்க்கையைத் தொடங்கி, படிப்படியாக முன்னேறி, இறுதியில், தமிழ் நாட்டு மக்களின் உள்ளத்தையெல்லாம் கொள்ளை கொள்ளும் உயரிய நிலையை அடைந்தவர்கள், தமிழகத்தில் இருவர்.

ஒருவர், பேரறிஞர் திரு. வி. க. அவர்கள்.

அவர், சென்ற ஆண்டில் மறைந்து விட்டார்.

மற்றொருவர், கவிதைக் குயில் தேசிக விநாயகனார்.

அவர், இந்த ஆண்டில் மறைந்துவிட்டார்.

செப்டம்பர் 28ம் நாள், காலம் என்ற கூர் வாள், அறிவுச் செல்வர் தேசிக விநாயகத்தை நம்மிடமிருந்து துண்டித்துவிட்டது.

இனி நாம் அமைதியே உருவாக அமைந்த அந்த அரிய கலைஞரைப் பார்க்க முடியாது. படிக்கப் படிக்கப் பேரானந்தம் ஊட்டும் பாமணிகளை அவருடைய கரங்கள் இயற்றும் காட்சியை இனி நாம் காண முடியாது. தமிழைப்பற்றியும், தமிழ் மக்களைப் பற்றியும், தமிழ் நாட்டின் முன்னேற்றத்தைப் பற்றியும் ஓயாமல் சிந்தித்து உயரிய பணியாற்றி வந்த அவருடைய உள்ளத்தின் உணர்ச்சிகளை இனி நாம் நேரில் பார்த்து மகிழ முடியாது. அவர் நம்மை விட்டுப் பிரிந்துவிட்டார்.

1876ம் ஆண்டில், நாஞ்சில் நாட்டைச் சேர்ந்த தேரூரில் கவிமணி அவர்கள் தோன்றினார். உள்ளூரிலேயே ஆரம்பக் கல்வியையும், கோட்டாறு ஆங்கிலப் பாடசாலையில் உயர் கல்வியையும் கற்றுத் தேர்ந்து, 1901ம் ஆண்டில் ஆரம்ப ஆசிரியத் தொழிலை மேற்கொண்டார். சில காலத்திற்குப் பிறகு நாகர்கோயில் ஆசிரியப் பயிற்சிப் பள்ளியில் ஆசிரியத் தொழிலை மேற்கொண்டார். பிறகு படிப்படியே, திருவனந்தபுரம் பெண்கள் ஆசிரியப் பயிற்சிப் பள்ளி, திருவனந்தபுரம் மகாராஜா பெண்கள் உயர்நிலைப் பள்ளி, திருவனந்தபுரம் மகாராஜா பெண்கள் கல்லூரி ஆகியவற்றில் ஆசிரியர் தொழில் புரியலானார். மகாராஜா பெண்கள் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராக நெடுங்காலம் பணியாற்றிவிட்டு, 1931ம் ஆண்டில் வேலையினின்று ஓய்வு பெற்றார்.

ஓய்வு பெற்ற அந்த நாள் முதல், சென்ற செப்டம்பர் திங்கள் 28ம் நாள் வரை, மணி மணியான கவிதைகளை நூற்றுக்கணக்கிலும் ஆயிரக் கணக்கிலும் எழுதிக் குவித்து, தமிழ் மக்களின் உள்ளத்திலெல்லாம், மொழிப் பற்றை—இனப் பற்றை—நாட்டுப் பற்றை நன்கினிது வளர்க்கலானார்.

வேலையிலிருந்து ஓய்வு பெற்ற பிறகு மட்டுமல்ல, சின்னஞ்சிறு வயதிலிருந்தே, கவிதை எழுதும் ஆர்வம் அவரிடம் குடிகொண்டிருந்தது. அவருடைய முதல் கவிதை, அவர் தன்னுடைய பத்தொன்பதாவது வயதை முடிக்காமுன்னரே அவரிடமிருந்து பிறந்துவிட்டது. அவர் பல்வேறு பள்ளிகளில் ஆசிரியப் பணி புரிந்துகொண்டிருந்த அதே நேரத்தில், திருவனந்தபுரத்துத் "தமிழன்,"

கேரள சொசைடி பேபர், திராவிடன், மதுரைத் தமிழ்ச் சங்கத்திலிருந்து வெளிவரும் செந்தமிழ் முதலிய பல இதழ்களின்மூலம் தன்னுடைய கவிதைகளைத் தமிழகத்திற்கு அளித்தபடி இருந்தார்.

கவிமணியின் பாடல்கள் ஒவ்வொன்றும் ஒவ்வோர் சிந்தனைச் சித்திரம். அறிவுக்கு விருந்தூட்டும் அற்புதப் படைப்பு. உள்ளத்திற்கு உவகை தரும் உயிரோட்டமுள்ள கீதம்.

அவருடைய கவிதைகளிலே, நகைச்சுவை ததும்பும். தமிழ்ச் சுவை பொலியும். வீரச்சுவை மின்னும். காதலா, இன்பமா, துன்பமா, அமைதியின் நடனமா! அத்தனைச் சுவைகளும் ஒருசேர அமைந்துகிடக்கும்.

குழந்தைகளுக்காகவும், பள்ளிக்கூடத்துச் சிறுவர் சிறுமிகளுக்காகவும் அவர் பாடியுள்ள நூற்றுக்கணக்கான பாடல்கள், தமிழகத்தின் தனிப் பெருஞ் செல்வங்களாகும். சிறுவர் சிறுமிகளுக்காகவும், குழந்தைகளுக்காகவும் என்று, தனியாக, அவர் பாடியிருப்பதைப் போல, நூற்றுக்கணக்கான கவிதைகளை, வேறு எந்தக் கவிஞருமே இதுவரை பாடியதில்லை தமிழகத்தில்.

சிறு சிறு சொற்கள்; எளிய நடை; எவருக்கும் புரியக்கூடிய தமிழ்; என்றாலும் இனிமையும் சுவையும் எழிலும் பயனும் ஏராளம். இதுதான் அவருடைய கவிதையின் பண்பாடு. எனவேதான் அவருடைய பாடல்கள், குழந்தைகளின் உலகத்திற்குத் தேனாகத் தித்திக்கின்றன. தென்றல் போல மகிழ்ச்சியைத் தருகின்றன.

கவலையெல்லாம் நீங்கவே,
 களிப்பெழுந்து பொங்கவே,
பவழவாய் திறந்து நீ
 பாடுவாயோ தத்தம்மா ?

வட்டமாயுன் கழுத்திலே
 வானவில்லை ஆரமாய்
இட்ட மன்னர் யாரம்மா ?
 யான் அறியக் கூறம்மா ?

பையப் பையப் பறந்துவா
 பாடிப் பாடிக் களித்துவா !
கையில் வந்திருக்க வா
 கனியருந்த ஓடிவா !

கிளியைப்பற்றி அவர் பாடியுள்ள குழந்தைப் பாடல் ஒன்றின் ஒரு சிறு பகுதி இது. எளிமையும் இனிமையும் எத்தனை அருமையாக இணைந்து கிடக்கின்றன இந்தப் பாடலிலே !

பந்தம் எரியுதோடீ—கண்களைப்
பார்க்க நடுங்குதடி !
குந்தம் வாள் ஈட்டியெல்லாம்—கூடவே
கொண்டு திரியுதடி !

வாயைப் பிளக்குதடி—கையுறை
வாளும் உருவுதடி !
பேயைப் படைத்தபின்னே—இதனையும்
பிரமன் படைத்தானடி !

வாலை முறக்குது பார்—வால்நுனி
வட்டம் சுழலுது பார் !
சாலப் பதுங்குது பார்—நம் மீது
சாடவும் நோக்குது பார் !

இடித்து முழங்குதடி—தொண்டையும்
இரும்பாலே செய்ததோடி !
அடுத்து நெருங்காதே—அது மிக
ஆங்காரம் கொள்ளுதடி !

கூண்டிற்குள்ளே கிடக்கும் புலியைப் பார்க்கச் செல்லுகின்றனர் அக்காவும் தங்கையுமான இரு சிறுமிகள். அப்போது புலி சீறிச் சீறிப் பாய்கிறதாம். அதைப் பார்த்துவிட்டு மூத்தவள் இளையவளை நோக்கி இப்படியெல்லாம் கூறுகிறாளாம். கவிதை, எவ்வளவு இயற்கையாக அமைந்திருக்கிறது என்பதை எண்ணும் போது, கவிமணியின் அறிவுத்திறனை நாம் பாராட்டாமல் இருக்க முடியுமா? சிறுவர் சிறுமியரின் உதடுகள் தாமாகட்டும், இந்தக் கவிதையைப் பாடிப் பாடிப் பரவசமடையாமல் இருக்கமுடியுமா?

குழந்தைகளுக்கான கற்கண்டுக் கவிதைகளை ஏராளமாகப் பாடியிருக்கிறார் கவிமணி. ஆனால் பெரியவர்களை அதற்காக மறந்துவிடவுமில்லை அவர். அவர்களுக்காகவும் அழகு சொட்டும் கவிதைகளை அடுக்கடுக்காகப் பாடி யிருக்கிறார்.

உலகத்தில் பார்க்கிறோமல்லவா எத்தனையோ பேரை! பக்தி பக்தி என்று பேசுவார்கள். ஓயாமல் புராண ஏடுகளைப் பாராயணம் செய்தபடி இருப்பார்கள். ஆண்டவனின் பெயர் ஆயிரத்தெட்டு முறை ஜெபம் செய்வார்கள். என்றாலும் ஏழை ஒருவன், அய்யா பசியெடுக்கிறது ஒரு வேளை உணவு தாருங்கள் என்று கேட்டாலோ சீறியெழுந்து சிறுத்தையெனப் பாய்வார்கள். ஆண்டவனைப் பாராட்டுவார்கள்—ஆனால் ஆண்டவனின் பிள்ளைகளுக்கு ஒரு வேளை உணவு கொடுக்கவும் மறுத்துவிடுவார்கள்! இப்படிப்பட்ட விபரீத மனிதர்

களைப் பார்க்கிறார் கவிமணி. கடுங்கோபம் பிறக்கிறது அவருக்கு. உடனே கேட்கிறார் :—

தாகம் என்று வருபவர்க்குத்
தண்ணீரை அளியாமல்
ஆகமங்கள் ஓதி நிற்றல்
அழகாமோ ? அறமாமோ ?

மற்றோர் புறம் கவிஞரின் பார்வை திரும்புகிறது. அங்கே ஜாதிச் சண்டை மும்முரமாக நடைபெறுகிறது. என் சாதி உயர்ந்தது, உன் சாதி தாழ்ந்தது என்கிற ஆரவாரப் பேச்சுகள் அடிதடி போல் எழுகின்றன. சாதியாமே சாதி—மனித சாதிக்குள்ளே ஏற்றத் தாழ்வு ஏது என்று குமுறுகிறது கவிஞரின் உள்ளம். கவிதையும் பிறக்கிறது :—

சாதிசாதி என்று நிதம்
சண்டை போட்டு மண்டைகளை
மோதி மோதி உடைப்பதொரு
மூடச் செயல் என்றுணரீரோ ?

பெண்களை அடிமைப் படுத்தும் பெருங் கொடுமையையும் அவர் விட்டு வைக்கவில்லை.

வாட்டும் உலகில் வழுத்தரிய
வாழ்க்கைத் துணையாம் மங்கையரை
ஆட்டும் பொம்மை அடிமைகளாய்
ஆக்கி வைப்ப தழகாமோ ?

என்று அமைதியான முறையில், ஆனால் உறுதியான வகையில் கேட்கத்தான் செய்கிறார்.

கவிஞரை இழந்து விட்டோம்—ஆனால் அவருடைய கவிதைகளை நாம் இழக்கவில்லை. மலரும் மாலையும், ஆசிய ஜோதி, உமர்கய்யாம் பாடல்கள், குழந்தைச் செல்வம், தே. வி. யின் கீர்த்தனங்கள், என்னும் பெயர் படைத்த ஐந்து அரிய புத்தகங்களாக அந்தக் கவிதைகளெல்லாம் அதோ காட்சி அளிக்கின்றன. அந்த கவிதைச் சுவை ஒவ்வொன்றும் ஒவ்வோர் தங்கச் சுரங்கம். உள்ளே மூழ்குவோம். அறிவு எனும் உளி கொண்டு சிந்தனை என்ற பாறையிலிருந்து புதுவாழ்வு எனும் தங்கக் கட்டிகளை வெட்டியெடுத்துக் கொள்வோம்.

கவிஞர் மறைந்து விட்டார். ஆனால் அவர் தம் கவிதை மறையாது. காலம் என்ற கடும்புயலாலும் அழிக்கப்பட முடியாத அற்புத ஓவியம் அது.

(40-ம் பக்கத் தொடர்ச்சி)

யும். அவர்களால் அளிக்கப்படுகிற கல்வியின் தரத்தையும் குறையாமல் பார்த்துக் கொண்டு, விவசாயத் துறையிலும் வெற்றிகரமாக ஈடுபட்டு, இரு துறைகளையும் ஒரே காலத்தில் கவனிப்பதென்பது சிறிதும் இயலாத செயல்.

ஆகவே, ஆசிரியர்களின் பொருளாதார நிலை என்கிற கண்ணோட்டத்திலிருந்து பார்க்கும்போது இந்தத் திட்டத்தால் துளியளவும் பயனிருக்க முடியாது என்பது தெளிவு. அப்படியே இருந்தாலும், பள்ளிப் பிள்ளைகளுக்குப் பயிர்த்தொழிற் பயிற்சி தருவதற்காக மட்டும் இந்த நிலங்களைப் பயன்படுத்தினாலென்ன என்று ஆட்சியாளர்கள் கேட்கக்கூடும். இதுவும் தேவையில்லாத வேலை. 5 வயது முதல் 12 வயது வரையுள்ள பச்சிளங் குழந்தைகளுக்கு விவசாயம் முதலிய கடுந்தொழில்களில் பயிற்சி அளிப்பது கல்வி உலகத்தின் அடிப்படைக் கருத்துகளுக்கே முரணானது. 14 வயதுக்கு உட்பட்ட சிறுவர்களைக் கடின தொழில்களில் ஈடுபடுத்துவது பெருங்குற்றம் என்கிற உண்மையை அகில உலகக் கல்வி நிபுணர்களும் ஒப்புக்கொண்டு நீண்ட காலம் ஆகிவிட்டது. 14 வயதுக்கு உட்பட்ட சிறுவர்களைத் தொழிற்சாலைகளில் வேலைக்கு அமர்த்திக் கொள்வது சட்டப்படி தடுக்கப்பட்டும் இருக்கிறது. அத்தகு சிறுவர்கள், தொழிற்சாலைகளில் தொழில் என்கிறபெயரால், சம்பளத்தோடு வேலை செய்வது மனிதாபிமானத்துக்கு மாறானது என்பதை இந்த அரசாங்கமே ஒப்புக்கொண்டிருக்கிற போது, அதே சிறுவர்களை, பள்ளிக்கூடங்களில், கல்வி என்கிற பெயரால், ஊதியம் இல்லாமல், கடுந்தொழில்களில் ஈடுபடுத்துவது மட்டும் எப்படி நியாயமாகிவிடும்?

எந்தக் கண்ணோட்டத்தின்படி பார்த்தாலும் சரி, இந்தத் திட்டம் தேவையற்றது என்கிற முடிவே நிச்சயமாக ஏற்படும்.

அது அல்ல நாம் கூறுவது!

சின்னஞ் சிறு குழந்தைகளை, ஆரம்பப்பள்ளி மாணவர்களை, எட்டு ஒன்பது பத்து என்பன போன்ற வயதுடையவர்களைக் கடுந் தொழில் புரியும்படி வற்புறுத்தும் பாடதிட்டம் எதுவும் கூடாது என்று நாம் இயம்பியவுடனே, ஒரு சிலர், அப்படியானால், கையால் தொழில் செய்து பிழைப்பதே இழிவு என்று நீங்கள் கருதுகிறீர்களா? இப்படிப்பட்ட கருத்து இந்த நாட்டில் உலவுகிறவரையில் இந்த நாட்டுக்குப் புது வாழ்வு பிறக்க வழியுண்டா? என்றெல்லாம் கேட்கத்தொடங்கிவிடுகின்றனர். கையால் தொழில் செய்து பிழைப்பது இழிவு என்ற நாம் ஒருநாளும் சொல்லவில்லை. அப்படிச் சொல்வதைவிட முட்டாள்தனம் வேறொன்றும் இருக்க முடியாது. மூளையைப் பயன்படுத்தி உழைத்து ஊதியம் பெறுவது எந்த அளவு உயர்ந்ததோ, அதே அளவு உயர்ந்ததுதான்

கைகால்களைப் பயன்படுத்தி உழைத்து ஊதியம் பெறுவதும். மூளை உழைப்பு—உடல் உழைப்பு—இரண்டிற்குமிடையே எத்தகைய அந்தஸ்து வேறுபாட்டையும் நாம் காணவில்லை. காணவும் கூடாது. பார்க்கப் போனால், மூளை என்பதேகூட உடலின் ஒரு பகுதிதான். ஆகவே மூளை உழைப்பு எனப்படுவது உடல் உழைப்பின் பல்வேறு வகைகளில் ஒன்றே தவிர வேறானதல்ல. அவ்வாறு இருக்கும்போது உடல் உழைப்பைக் குற்றமானதென்றோ, அந்தஸ்தில் தாழ்ந்தது என்றோ, இழிவான நிலையுடையதென்றோ எந்தமதியிலிதான் இயம்ப முன்வருவான்?

நாம் தெரிவிப்பதெல்லாம்உடல் உழைப்பே கூடாது என்பதல்ல. சின்னஞ் சிறு மாணவர்களுக்கு அதாவது அன்றலர்ந்த ரோஜாக்களென உள்ள ஆரம்பப் பள்ளிப் பிள்ளைகளுக்குக்கூடாது என்பதுதான். உயர்நிலைப்பள்ளி மாணவர்களுக்கும் கல்லூரி மாணவர்களுக்கும் உடல் உழைப்பையும், அதன் தொடர்பான கல்வி முறைகளையும் தாராளமாக வலியுறுத்தலாம்—வலியுறுத்துவதும் அவசியம்.

அமெரிக்காவில், கென்டகி என்கிறமாநிலத்தில், **பெரியாகல்லூரி** என்கிற பெயருடைய கல்லூரி ஒன்றிருக்கிறது. அந்தக்கல்லூரியில்பயிலும்மாணவர்கள், தங்களுடைய ஓய்வு நேரத்தில், உடலுழைப்புத் தொழில்கள் பலவற்றில் ஈடுபடுகிறார்கள். சிலர், பால் பண்ணைகளுக்குச் சென்று, பால் கறக்கும் தொழில்புரிகிறார்கள். சிலர் கல்லூரி விடுதிக்குச்சென்று சமையல்தொழில் செய்கிறார்கள். கல்லூரியையும் விடுதியையும் பெருக்கித் தூய்மை செய்யும் துப்புரவுத் தொழிலிலும் சிலர் ஈடுபடுகிறார்கள். சிற்றுண்டிச் சாலைகளில் உணவு பரிமாறுபவர்களாகப் பணிபுரியும் மாணவர்களும் அங்கே இருக்கிறார்கள். வீடு கட்டுவது, கால்வாய் தோண்டுவது, மரம் அறுப்பது, கட்டை பிளப்பது, நூல் நிலையங்கள், ஆராய்ச்சிக் கூடங்கள் ஆகியவற்றில் பணியாட்களாகத் தொழில் புரிவது, இரும்புத் தொழிற்சாலை முதலியவற்றில் வேலைசெய்வது, தோட்ட வேலை, பயிர் வேலை முதலிய எண்ணற்ற தொழில்களில் ஈடுபடும் மாணவர்களும் உள்ளனர்.

அந்தக் கல்லூரியில் பயிலும் மாணவிகளும் சும்மா இருப்பதில்லையாம். ஒரு மாணவி, தன் ஓய்வு நேரத்தில், நகரத்திற்குள் சென்று, தேவைப்படுபவர்களின் வீடுகளுக்குச் சுண்ணாம்பு அடிக்கிறாளாம். மற்றொருத்தி, ஜன்னல், கதவு முதலியவற்றிற்கு வர்ணம் தீட்டும் தொழில் புரிகிறாளாம். வேறு சில மாணவிகள், ஒரு குழுவாகச் சேர்ந்து கொண்டு, நகரத்திலிருக்கும்பெற்றோர்கள், சினிமாவுக்கோ நாடகத்திற்கோ செல்லும்போது, அவர்களுடைய குழந்தைகளை வாங்கிவைத்திருந்து, அந்தக் குழந்தைகளை அழாத வண்ணம்

வைத்திருந்து, பெற்றோர்கள் திரும்பிய பிறகு அவர்களிடம் ஒப்படைக்கும் பணியில் ஈடுபடுகிறார்களாம்.

இப்படியெல்லாம் அந்தக் கல்லூரியில் உள்ள மாணவர்களும் மாணவிகளும், தங்கள் ஓய்வு நேரத்தில், தத்தமக்குப் பிடித்தமான உடலுழைப்புத் தொழில்களில் ஈடுபட்டு, கணிசமான அளவு பணம் சம்பாதிக்கின்றனராம். அவர்களிற் பெரும்பாலோர், இவ்வாறு கிடைக்கும் தொகையைக் கொண்டே தங்களுடைய கல்லூரிச் செலவு முழுவதையும் சரிக்கட்டிக் கொள்கின்றனராம். ஒரு சிலர், இப்படிக் கிடைக்கும் தொகையில் ஓரளவு மிச்சப்படுத்தி, அதனைத் தம் பெற்றோர்களின் செலவுக்காக அனுப்பி வைக்கவும் முன் வருகிறார்களாம்.

அமெரிக்க நாட்டுப் பெரிய கல்லூரியில் மாணவ மாணவிகள் மேற்கொண்டுள்ள இந்தச் சிறந்த முறையை நாம் கண்டிக்கவா செய்கிறோம்? கண்டிக்கத்தான் இயலுமா? அதே வகையான மன உறுதியும், உழைத்துப் பாடுபடும் உணர்ச்சியும், இங்கே உள்ள கல்லூரி மாணவர்கட்கு மட்டுமல்ல, உயர்நிலைப் பள்ளி மாணவர்கட்கும் ஏற்பட வேண்டும் என்பதுதான் நம்முடைய ஆசை. ஏற்படுத்தும் வகையிலே பாடதிட்டங்கள் மாற்றி அமைக்கப்படவேண்டும் என்பதுதான் நம்முடைய கோரிக்கை.

கடினமான உடலுழைப்பைத் தாங்கக்கூடிய அத்தகைய பெரிய மாணவர்களுக்கு உடலுழைப்பை வற்புறுத்துவதும், அத்தகு உழைப்பைத் தாங்க முடியாத பிஞ்சு உடலும் இளைய உள்ளமும் படைத்த ஆரம்பப்பள்ளிக் குழந்தைகளுக்கு உடல், உள்ளம் இரண்டிற்கும் சுமை இல்லாத வகையில் எழுத்தறிவை மட்டும் போதிப்பதும்தான் முறை.

இதைத்தான் நாம் கூறுகிறோம்—இதிலென்ன குற்றம்?

அறிஞரின் அறமொழிகள்

(D. E. மாசிலாமணி விருதம்பட்டு)

12. தன்னம்பிக்கை இல்லாதவன் வாழ்க்கை, காலால் நடப்பதற்குப் பதிலாகத் தலையால் நடப்பதைப் போன்றதாகும். —**எமர்சன்.**

13. வெற்றி பெறுவதென்பது பெரும்பாலும் நமது எண்ணத்தையே பொறுத்திருக்கிறது. —**நெப்போலியன்.**

14. என் சகோதர மக்கட்கு நான் காலமெல்லாம் உதவவேண்டும்; நான் தேடுவதெல்லாம் இதுவே. —**விவேகானந்தர்.**

15. துணிந்த காரியத்தை ஒரு தோல்விக்காகக் கை விடாதே.

—**ஷேக்ஸ்பியர்.**

தபாலாபீஸ் வளர்ந்த கதை

★

இன்று இந்தியா நெடுகிலும் தபால் முத்திரை நூற்றாண்டு விழா கொண்டாடப் படுகிறதாயினும், ஆதி காலத்திலே கூட நம் நாட்டில் தபால் போக்குவரத்து வசதி இருந்துதான் வந்திருக்கிறது.

கி. மு. 322 வாக்கில் மௌரியர் ஆட்சிப் பிரதேசத்தில் ஒருவிதத் தபால் போக்குவரத்து இருந்துவந்ததாக கௌடில்யரின் அர்த்தசாஸ்திரம் குறிப்பிடுகிறது. பாரசீகம் முதல் தென்னிந்தியா வரையில் பரவிக் கிடந்த மௌரிய சாம்ராஜ்யத்தை சந்திரகுப்தன் பல மாகாணங்களாகப் பிரித்து, மண்டலாதிபதிகளை நியமித்து, ஆட்சிபுரிந்து வந்தான். சாம்ராஜ்யத் தலைநகரான பாடலீபுரத்துக்கும் மாகாணத் தலை நகர்களுக்குமிடையே புறாக்கள் மூலம் தபால்கள் சென்று வந்தன. கடிதங்களைச் சிறு பேழைகளில் அடைத்து, புறாக்களின் கழுத்தில் கட்டிப் பறக்க விட்டு வந்தார்கள். அப்புறாக்கள் குறிப்பிட்ட இடங்களுக்குப் பறந்து செல்லும்படி பயிற்சி அளிக்கப்பட்டிருந்தன. சந்திரகுப்தனின் பேரனான அசோகர் காலத்திலும் இந்தமுறை நீடித்து வந்தது. இதே போல் உள்நாட்டு நகரங்களுக்குக் கடிதங்களை அனுப்பி வருவதற்காக பண லேவாதேவிக்காரர்கள் ஒரு முறையை உருவாக்கி வந்தனர். அவர்கள் சொந்தத்தில் கூலிக்கு அமர்த்திய தூதுவர்கள் அக்கடிதங்களை எடுத்துச் சென்றனர்.

14–வது நூற்றாண்டில் இந்தியாவில் சுற்றுப் பிரயாணம் செய்த இபன் பட்டுட்டா என்ற பிரபல யாத்திரீகர், டில்லி பாதுஷா மகமத் பின் துக்லக் காலத்தில் அமுலில் இருந்த தபால் ஏற்பாடுபற்றிக்குறிப்பிட்டிருக்கிறார். அக்காலத்தில் குதிரை ஏறிச் செல்லும் தூதர்களும் கால்நடையாகச் செல்லும் அஞ்சலோடிகளும் இருந்தார்கள். பாதுஷாவின் குதிரை வீரர்களில் சிலர்தான் குதிரை ஏறிச் செல்லும் தூதுவர்களாக நியமிக்கப்பட்டார்கள். நான்கு மைலுக்கு ஒருவர் வீதம் அவர்கள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தார்கள். பாதசாரித் தூதர்கள் ஒவ்வொரு மைலுக்கு ஒருவர் வீதம் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தனர். மூன்று மைல் தூரத்துக்கு ஒன்று வீதம் தூதர் ஸ்தானங்கள் இருந்தன. அஞ்சலோடிகள் ஒரு கையில் தபால் பையையும் ஒரு கையில் மணி கட்டிய சவுக்கு ஒன்றையும் எடுத்துச் சென்றார்கள். அடுத்த ஊரை அணுகும் போது சவுக்கின் மணியோசை கேட்டு அந்த ஊரில் இருக்கும் தூதுவர் சாலைக்கு வந்து அவரிட

மிருந்து தபாலை வாங்கிக்கொண்டு பிரயாணத்தைத் தொடங்குவார்.

ஷெர்ஷாவின் திட்டம்

16–ம் நூற்றாண்டின் மத்தியில் ஆட்சி புரிந்த ஷெர்ஷா காலத்தில் குதிரை வீரர்கள் தபால்களை எடுத்துச் சென்றது பற்றி பிரபல சரித்திராசிரியரான பரிஷ்டா விளக்கமாக விவரித்திருக்கிறார். வங்காளம் முதல் பஞ்சாப் வரையில் 2000 மைல் தூரத்துக்குப் பெரிய சாலை அமைத்த முதலாவது மன்னர் ஷெர்ஷாதான். அந்தச் சாலை மார்க்கத்தில் இரண்டு மைல் தூரத்துக்கு ஒருவராக அவர் குதிரை வீரர்களை நிறுத்தி வைத்து, தபால்களைத் துரிதமாக அனுப்ப ஏற்பாடு செய்திருந்தார்.

அக்பரும் அரசாங்கக் கடிதங்களைக் கொண்டு செல்வதற்காக ஒவ்வொரு 10 மைல் தூரத்துக்கும் 2 குதிரை வீரர்களையும் சில பாதசாரிகளையும் சாலைகளில் நிறுத்தி வைத்திருந்தார். அவர்கள் தினசரி சுமார் 100 மைல் தூரம் பிரயாணம் செய்து கடிதங்களைக் கொடுத்து வந்தார்கள்.

பிரிட்டிஷாரின் ஆட்சி இந்தியாவில் ஆரம்பமான காலத்தில் கூட இதே போன்ற முறைதான் இருந்தது. வேறு திட்டமான ஏற்பாடு இல்லை. 1600-ம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்ட கம்பெனிக்கு சீக்கிரமாகவே சென்னை, பம்பாய், கல்கத்தா ஆகிய இடங்களில் வர்த்தக ஸ்தாபனங்கள் ஏற்பட்டு விட்டபடியால், அந்த ஸ்தலங்களுக்கிடையில் கடிதப் போக்குவரத்து அவசியமாய் விட்டது. அதற்கு, ஏற்கெனவே அமுலில் இருந்த தபால் முறையைத்தான் கம்பெனியார் கையாண்டு வந்தனர். 1688–ல் கம்பெனியார் சொந்தத்தில் அஞ்சலோடிகளை நியமித்தார்கள். பம்பாயில் ஒரு தபால் நிலையம் ஏற்படுத்தப்பட்டது. அங்கே எல்லாத் தபால்களும் சேகரிக்கப்பட்டு வினியோகிக்கப்பட்டன.

புதிய முறைகள்

1766–ல் லார்ட் கிளைவ், சர்க்கார் தபால்களை அனுப்புவது சம்பந்தமாக விசேஷ ஏற்பாடு செய்தார். சர்க்கார் தபால்களை வாங்கி அனுப்புவதற்கும், வருகிற தபால்களைப் பெற்று வினியோகிப்பதற்கும் சர்க்கார் மாளிகையில் ஒரு போஸ்ட் மாஸ்டரும் ஓர் உதவியாளரும் நியமிக்கப்பட்டார்கள். அத்தபால்களை எடுத்துச் செல்வதற்காக அந்தந்த பிரதேச ஜமீந்தார்கள் வழிநெடுக அஞ்சலோடிகளை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று பொறுப்புக் கட்டப்பட்டிருந்தது. ஆனால், அந்த ஜமீந்தார்கள் தங்கள் சொந்தத் தபால்களை இத்தூதர்களிடம் கொடுத்தனுப்ப உரிமை கிடையாது. தனியார் தபால்களை இத் தூதர்கள் திருட்டுத்தனமாக எடுத்துச் சென்று வினியோகிப்பார்கள். இந்த மறைமுகமான ஏற்பாடுதான் தற்போதைய

'தபால் சேவை' முறை ஏற்படுவதற்குக் காரணமாயிருந்தது.

அக்காலத்தில் தபால் நிலையங்கள் தபால்களை அனுப்புவதற்கு மாத்திரம்தான் பொறுப்பு வகித்தன என்பதில்லை. ராஜாங்க காரியமாகப் பிரயாணம் செய்பவர்களின் பிரயாண வசதிக்கும் அவை ஏற்பாடு செய்தன. பிரயாணிகள் வழிகளில் தங்குவதற்கான 'டாக் பங்களாக்களை' பராமரித்து வருவது, குதிரைகள், பல்லக்குகள், தபால் வண்டிகள் முதலியவைகளை ஏற்படுத்தித் தருவது முதலிய பொறுப்புகளையும் தபால் நிலையங்கள் கவனித்து வந்தன.

1774–ல் ஏற்பாடு

1774 மார்ச் 31–ந் தேதி வாரன் ஹேஸ்டிங்க்ஸ் உத்திரவின்படி முறையான தபால் ஏற்பாடு அமுலுக்கு வந்தது. போஸ்ட் மாஸ்டர் ஜெனரல் ஒருவர் நியமிக்கப்பட்டார். முதல் தடவையாக தனியார் தபால்களுக்குக் கட்டணம் விதிக்கப்பட்டது. கம்பெனி ஆட்சிப் பிரதேசங்களில்தான் இத் திட்டம் அமுலுக்கு வந்தது. 1837–ல்தான் தபால் கொண்டு செல்லும் ஏற்பாடு சர்க்காரின் ஏகபோக உரிமைக்கு வந்தது. 1789–ல் மசூலிப் பட்டணத்திலிருந்து பம்பாய்க்கும், சென்னைக்கும், கல்கத்தாவுக்கும் வாராந்தரத் தபால் போக்குவரத்து துவங்கியது.

18–வது நூற்றாண்டு இறுதியில் வங்காளத்தில் தபால்களை பாதசாரிகளான அஞ்சலோடிகள் எடுத்துச் சென்றார்கள். அவர்கள் எட்டு மைல் சுற்றளவில் உள்ள ஊர்களுக்கு அந்த தபால்களைக் கொண்டு சென்றார்கள். அவர்களுடன் கூட பறை முழக்குபவர்களும் தீவட்டி பிடிப்பவர்களும் இரண்டு வில்லாளிகளும் சென்றார்கள். இருட்டிலும் காடுகளிலும் வழி தெரிந்து, பாதுகாப்பாகச் செல்வதற்கு அவர்களின் உதவி தேவைப்பட்டது.

சர்க்காரின் தபால் ஏற்பாடு உள்நாட்டு ஊர்களுக்கு வியாபிக்காதபடியால், ஜில்லாக்களில் தனியான தபால் ஏற்பாடு உருவாகி வந்தது. ஜில்லாத் தலைமை ஸ்தாபனங்களுக்கும் ரெவின்யூ, போலீஸ் கிளை ஸ்தாபனங்களுக்கும் இந்த ஏற்பாட்டின் மூலம் தொடர்பு இருந்தது. கடிதங்களுக்கான கட்டணங்கள் ரொக்கமாக வசூலிக்கப்பட்டன.

1837–க்குப் பிறகு

1837–ல் தபால் சட்ட திட்டங்கள் திருத்தப்பட்டு 17–வது சட்டம் இயற்றப்பட்டது. அதன்படி, தபால் போக்குவரத்து சர்க்காரின் ஏகபோக உரிமையாக்கப்பட்டது. தனியார் தபால் முறைகள் தடுக்கப்பட்டன. தபால் நிலையங்களும் தபால் வண்டித் தொடர்களும் ஏற்படுத்தப்பட்டன.

1850-ல் மூன்று அங்கத்தினர்கள் கொண்ட ஒரு கமிஷன் நியமிக்கப்பட்டு தபால் சேவை வசதிகளைச் சீர்திருத்தியமைப்பதற்கான வழி வகைகள் ஆராயப்பட்டன. அக் கமிஷன் சமர்ப்பித்த அறிக்கையும், 1853-ல் முதல் ரயில் பாதை அமைக்கப்பட்டதும், செய்திகளை அவசரமாக அனுப்புவதற்கு டாக்டர் ஓஷக்னஸ்ஸின் மின்சாரத் தந்தி முறை முதல் முதலில் 1853-ல் உபயோகத்துக்கு வந்ததும் இந்தியாவில் தபால் தந்தி இலாகாவின் சரித்திரத்திலே ஒரு புதிய சகாப்தம் ஆரம்பமாவதைக் குறிப்பிடும் நிகழ்ச்சிகளாகும்.

தபால் கட்டணம் செலுத்துவதற்கு 'ஸ்டாம்பு'களை உபயோகிக்கும் ஏற்பாடு இந்தியாவில் முதல் முதலில் 1854 அக்டோபர் முதல் தேதியன்று அமுலுக்கு வந்தது. அதே ஆண்டில், இந்தியாவிலிருந்த எல்லாத் தபால் ஆபீசுகளும் தபால் ஆபீசு டைரெக்டர் ஜெனரல் ஒருவரின் நிர்வாகத்தின் கீழ் கொண்டு வரப்பட்டன.

ரயில்வேக் கம்பெனிகள் தபால்களை எல்லாம் இலவசமாக ஏற்றிச் செல்ல வேண்டுமென்று அப்போது கவர்னர் ஜெனரலாக இருந்த டல்ஹௌஸி பிரபு 1853 செப்டம்பர் 9-ந் தேதி ஒரு உத்திரவு பிறப்பித்தார். தற்போதுள்ள ஆர். எம். எஸ். ஸ்தாபனத்துக்கு அதுவே அஸ்திவாரமாக அமைந்தது. அதே வருஷத்தில், பிரிட்டனுக்கும் இந்தியாவிற்குமிடையே கடல் மார்க்கமாகத் தபால்களை எடுத்துச் செல்வதற்காக, பி. அண்ட். ஓ. ஸ்டீம் நாவிகேஷன் கம்பெனியுடன் சர்க்கார் ஒரு ஒப்பந்தம் செய்து கொண்டனர்.

ரயில்வேயினால் புரட்சி

தபால் போக்குவரத்து ஏற்பாடுகள் சீர்படுத்தியமைக்கப்பட்டு பத்து ஆண்டுகளுக்குள்ளாகவே, நாட்டில் பிரிட்டிஷ் வர்த்தகமும், ராணுவ அலுவல்களும் விஸ்தரித்ததைத் தொடர்ந்து தபால் போக்குவரத்து வசதிகளும் நாட்டின் பிற பகுதிகளுக்கும் விஸ்தரிக்கப்படலாயின. சென்னையிலிருந்து 836 மைல்களுக்கப்பால் இருந்த பம்பாய் நகரத்துக்குத் தபால்கள் 10 அல்லது 12 நாட்களில் கொண்டு போய்ச் சேர்க்கப்பட்டு வந்தன. இந்தப் பாதை முழுவதும் ஒவ்வொன்றும் 11 மைல் தூரம் கொண்ட 72 கட்டங்களாகப் பிரிக்கப்பட்டு தபால்களை ஆட்கள் தலைச்சுமையாக எடுத்துச் செல்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டு வந்தது.

ரயில்வேக்கள் தோன்றிய பிறகு தபால் போக்குவரத்தில் பலமாறுதல்கள் ஏற்பட்டன. இந்தியாவில் முதல் ரயில் பாதை பம்பாய்க்கும் தாணாவுக்குமிடையே சுமார் 30 மைல் தூரத்துக்கு அமைக்கப்பட்டு 1853 ஏப்ரல் 16-ந் தேதியன்று திறக்கப்பட்டது. அதற்குப்

பத்து ஆண்டுகளுக்குப் பிறகு தபால்கள் ரயில் மார்க்கமாக 2473 மைல் தூரத்துக்கும், வண்டிகள், குதிரைகள் மூலமாக 5156 மைல் தூரத்துக்கும், ஆட்கள் மூலமாய் 33,853 மைல் தூரத்துக்கும், கப்பல் மூலமாக 5137 மைல் தூரத்துக்கும் எடுத்துச் செல்லப்பட்டு வந்தன. இதன் பலனாக 1863-ம் ஆண்டில் தபால்கள் ஐந்தே நாட்களுக்குள் சென்னையிலிருந்து பம்பாய்க்குப் போய்ச் சேருவது சாத்தியமாகி விட்டது. 1871-ம் ஆண்டு வாக்கில், நாடு முழுவதிலும் ஜனத்தொகை ஐயாயிரத்துக்கு மேல் இருந்த எல்லா நகரங்களிலும் தபாலாபீசுகள் ஏற்படுத்தப் பட்டுவிட்டன. சிறிய நகரங்களில் எல்லாம் தபால் பெட்டிகள் வைக்கப்பட்டு, அருகாமையிலிருந்த பெரிய நகரத் தபாலாபீசுகளிலிருந்து சிப்பந்திகள் அடிக்கடி அங்கு சென்று தபால்களைச் சேகரித்துக் கொண்டுவர ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

வி. பி., மணியார்டர்

பொருளின் விலை மதிப்பைச் செலுத்தி பார்சலைப் பெற்றுக் கொள்ளும் வி. பி. பி, சர்வீஸ் 1877-ம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்டது. தொலை தூரப் பிரதேசங்களில் வசித்து வந்தவர்கள், நகரங்களிலிருந்து தங்களுக்கு வேண்டிய சாமான்களை அங்கு போகாமலேயே, தபால் மூலம் பெற்றுக் கொள்ள வசதி கிடைத்தது. தபால் பார்சல்களை இன்ஷ்யூர் செய்யும் ஏற்பாடு அந்த ஆண்டிலேயே அமுலுக்கு வந்தது. இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு தபால் எழுதும் சாதனங்கள் குறைந்த விலையில் கிடைக்கும்படி செய்ய வேண்டியதன் அவசியம் உணரப்பட்டு, உள்நாட்டு உபயோகத்துக்கும், வெளிநாட்டு உபயோகத்துக்கும் தபால் கார்டுகள் வெளியிடப்படலாயின.

தபால் இலாகாவின் அபிவிருத்தியிலே குறிப்பிடத்தக்க மற்றொரு முன்னேற்றம் 1880-ம் ஆண்டில் ஏற்பட்டது. அதுவரையில் மணியார்டர்கள் நாட்டின் பல்வேறு இடங்களிலிருந்த 283 சர்க்கார் கஜானாக்களிலேயே ஏற்றுக்கொள்ளப்பட்டு வந்தன. அந்த ஆண்டில், 5,500 தபால் ஆபீசுகள் மணியார்டர்களை ஏற்றுக்கொள்ளவும், பணத்தைப் பெற்றுக்கொள்ள, வேண்டியவர்கள் நேரில் தபாலாபீசுக்கு வர வேண்டிய அவசியமின்றியே மணியாடர் பணத்தைப் பட்டுவாடா செய்யவும் அதிகாரமளிக்கப்பட்டன.

இதன் மத்தியில், தபால் ஆபீசுகள் மூலமாக சில சௌகரியங்களையும் பொதுஜனங்களுக்கு செய்து கொடுப்பதென முடிவு செய்யப்பட்டது. சிறு தொகைகளைச் சேமித்து வைக்கும் பழக்கத்தைப் பொது ஜனங்களிடையே வளர்ப்பதற்காக தபாலாபீசுகளில் சேவிங்ஸ்

பாங்கு கணக்கு வைத்துக்கொள்ளும் வசதி முதல் முதலில் 1882-ம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்டது. 1883-ம் ஆண்டில் தபாலாபீசுகளில் மொத்தம் 39,121 சேவிங்ஸ் பாங்கு கணக்குகள் இருந்தன; அவற்றில் மொத்தம் 27·96 லட்சம் ரூபாய் போடப்பட்டிருந்தது. இன்றோ மொத்தம் 217 கோடி ரூபாய் போடப்பட்டுள்ள 48 லட்சம் ஸேவிங்ஸ் பாங்கு கணக்குகள் இந்த இலாகாவில் உள்ளன.

தந்தி வசதித் துவக்கம்

எல்லாத் தபாலாபீசுகளும் தந்திகளை ஏற்றுக்கொள்ளும்நிலையங்களாகவும் இயங்கும் திட்டம் 1883 டிசம்பர் முதல் தேதியன்று அமுலுக்குக் கொண்டுவரப்பட்டது. அந்த வருஷ இறுதிக்குள் மொத்தம் 55 தபால்–தந்தி கூட்டு அலுவல் நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டன. இருபது ஆண்டுகளுக்குப் பின்னர் இந்த எண்ணிக்கை 2,029 ஆக உயர்ந்துவிட்டது. தபாலாபீஸுகள் செய்து வந்த தந்தி இலாகாவின் அலுவல்கள் பன்மடங்கு பெருகிவிட்டபடியால் 1914 ஏப்ரல் முதல்தேதி யன்று இவ்விரு இலாகாக்களும் ஒன்றாக இணைக்கப்பட்டு, தபால்–தந்தி டைரெக்டர் ஜெனரல் ஒருவரின் நிர்வாகத்தின்கீழ் கொண்டுவரப்பட்டது.

இந்தியாவுக்கும் பிரிட்டனுக்குமிடையே விமானத் தபால் சர்வீஸ் 1929 ஏப்ரல் 26-ந்தேதி யன்று ஆரம்பமாயிற்று. அதற்கு ஆறு மாதங்களுக்குப் பிறகு டில்லிக்கும் கராச்சிக்குமிடையே இந்திய விமானத் தபால் சர்வீஸ் ஏற்படுத்தப் பட்டது. 1936–இந்தியன் போஸ்டல் ஆர்டர் உபயோகத்துக்கு வந்தது. 1937–38-ல் எம்பயர் விமானத் தபால் திட்டம் அமுலுக்கு வந்ததையடுத்து வெளிநாட்டுத் தபால் சர்வீஸ் புதியதொரு அடிப்படையில் மாற்றியமைக்கப்பட்டது.

இரண்டாவது உலக மகா யுத்தத்தின் போது புதிதாக பல இடங்களில் தபாலாபீசுகள் ஏற்படுத்தப்பட்டன.

சுதந்தரமடைந்த பிறகு

இவ்வாறாக, இந்தியா சுதந்திரமடைந்தபோது இந்நாட்டில் மொத்தம் 22,116 தபாலாபீசுகள் இருந்தன. தேசிய சர்க்கார் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்டதும், முதல் வேலையாக நாட்டில் செய்திப் போக்குவரத்துக்கான வசதிகளை விஸ்தரிப்பதில் கவனம் செலுத்தலாயினர். ஆரம்பத்தில் பிரிவினை காரணமாக, இந்தத் திட்டம் ஓரளவு தடைப்பட்டிருந்தது.

எனினும் ஐந்து ஆண்டுகளுக்குள் நாட்டில் தபாலாபீசுகளின் எண்ணிக்கை இரு மடங்காகி விட்டது. இன்று இந்தியாவில் மொத்தம் 45,907 தபாலாபீசுகள் வேலை செய்து வருகின்றன. இவற்றில் 39,728 தபாலாபீசு

கள் கிராமப் பிரதேசங்களில் உள்ளன. தபால் வசதி இல்லாத கிராமம் ஒன்றுகூட இப்போது இந்தியாவில் இல்லை என்று சொல்லிவிடலாம்.

ஜனத்தொகை இரண்டாயிரத்துக்குக் குறைவாக இல்லாத ஒவ்வொரு கிராமத்திலும் தபாலாபீஸ் ஏற்படுத்தப்பட வேண்டுமென்று 1952–53-ல் சர்க்கார் முடிவு செய்தனர். 1951-ம் வருஷ ஜனசங்கியைப்படி, தபாலாபீஸ் ஏற்படுத்தப்பட வேண்டிய அத்தகைய கிராமங்கள் மொத்தம் 5,795 இருந்தன. இரண்டாண்டுகளுக்குள் அத்தகைய 4,838 கிராமங்களில் தபாலாபீசுகள் ஏற்படுத்தப்பட்டுவிட்டன. எந்த ஒரு இடத்தில் வசிப்பவரும் ஒரு தபாலாபீசுக்குப் போவதற்கு ஐந்து மைலுக்கு மேல் நடக்கவேண்டிய அவசியம் ஏற்படாத வகையில் கிராமப் பிரதேசங்களில் புதிய தபாலாபீசுகள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. தாலுகாவின் தலைமைக் காரியாலயங்கள் உள்ள ஒவ்வொரு ஊரிலும், நஷ்டம் ஏற்படுவதாக இருந்தாலுங்கூட அவ்வாறு ஏற்படக்கூடிய நஷ்டம் வருஷத்துக்கு ரூ. 750–க்கு மேல் போகாமல் இருக்கும் பட்சத்தில், தபாலாபீசு ஒன்றை ஏற்படுத்திவிடுவது என்பதும் சர்க்காரின் புதிய கொள்கையின் ஒரு அம்சமாகும். இந்தப் புதிய கொள்கைப்படி, 1956 மார்ச் இறுதிக்குள் மொத்தம் 10,135 தபாலாபீசுகள் ஏற்படுத்தப் பட்டுவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அப்போது கிராமப் பிரதேசங்களில் மொத்தம் 46,639 தபாலாபீசுகள் ஏற்பட்டுவிடும்.

விமானத் தபால்

நாடு சுதந்திரமடைந்த பிறகு தபால் போக்குவரத்தில் ஏற்பட்ட மிக முக்கியமான முன்னேற்றம், 1949–ல் எல்லாத் தபால்களையும் விமான மூலம் அனுப்பும் ஏற்பாடு அமுலுக்கு வந்ததாகும். பிரத்தியேகக் கட்டணம் எதுவும் இல்லாமலே எல்லா முதல்தரத் தபால்களும் இப்போது நாட்டின் எல்லா பகுதிகளுக்கும் விமான மூலம் எடுத்துச் செல்லப்படுகின்றன. இந்தத் திட்டம் அமுலுக்கு வருவதற்கு முன்னால் சென்னையில் போடப்பட்ட கடிதம் டில்லி போய்ச் சேருவதற்கு மூன்று நாட்கள் பிடித்தது. இப்போதோ மாலையில் சென்னையில் போடப்படும் கடிதம் மறுநாள் காலையில் டில்லி போய்ச் சேர்ந்துவிடுகிறது.

நூறு ஆண்டுகளில் இந்தியத் தபால் ஆபீஸின் எண்ணிக்கை 700–லிருந்து 45,900 ஆக வளர்ந்து விட்டது; நூறு ஆண்டுகளுக்கு முன்னால் இந்தியத் தபாலாபீசுகள் ஆண்டுதோறும் சுமார் 28,000 தபால்களைக் கையாண்டு வந்தன. இப்போதோ 36 பாஷைகளில் விலாசங்கள் எழுதப்பட்ட சுமார் 70 லட்சம் தபால்கள் தினமும் தபாலில்

போடப்பட்டு பட்டுவாடா செய்யப்பட்டு வருகின்றன. உலகத்திலுள்ள இத்தகைய மிகப் பெரிய ஸ்தாபனங்களுள் இந்தியத் தபால் இலாகாவும் ஒன்றெனக் கருதப்படுகிறது; தரை மார்க்கமாக 1,86,961 மைல் தூரத்துக்கும், விமான மார்க்கமாக 20,486 மைல் தூரத்துக்கும் தபால்கள் எடுத்துச் செல்லப்பட்டு வருகின்றன. இந்த இலாகாவில் தற்போது மொத்தம் சுமார் 2,34,000 சிப்பந்திகள் உள்ளனர். நாட்டில் கல்வி அறிவு மேலும் பரவும்போது, உலகத்திலேயே மிகப் பெரிய பொதுஜன சேவை ஸ்தாபனமாக தபால் இலாகா ஆகிவிடும் என்பதில் ஐயமேயில்லை.

(சுதேசமித்திரன்)

—✶—

"ஆரம்பக்கல்வி" ஆபீஸ்

94-94, புதுத் தெரு, மண்ணடி, சென்னை-1.

★

மாதாந்திரக் கணக்கு அனுப்பும் பாரங்கள் (ஆங்கிலம்) 100 ரூ. 2-8

ரிகார்ட் ஷீட்டுகள் (ஆங்கிலம்) 100 ரூ. 2-0

பிராவிடண்ட் பண்ட்கட்டும் பாரங்கள் (ஆங்கிலம்) 100 ரூ. 2-0

பள்ளியில் பிள்ளைகளைச் சேர்க்கும் விண்ணப்பத்தாள்கள் (ஆங்கிலம்) 100 ரூ. 1-0

வருடாந்திர பிராவிடண்ட் பண்ட் (சரிபார்த்தனுப்பும் பாரங்கள்) (ஆங்கிலம்) 100 ரூ. 2-8

(தபால் செலவு உட்பட)

ஒவ்வொன்றிலும் 25 பாரங்களுக்குக் குறையாமல் முன்பணத்துடன் ஆர்டர் அனுப்பவும்.

ஆசிரியரும் கிராமமும்

(G. சின்னப்பன், லேபர் பாடசாலை, பெருங்காஞ்சி)

★

'நாட்டின் முன்னேற்றத்திற்கு அடிப்படையானவர்கள் ஆசிரியர்களே. ஆசிரியர்கள் கிராமந்தோறும் நற்றொண்டு புரிவதால் அறிவு வளர்ச்சிக்கு இவர்களே ஆதாரமாவர். இவர்கள் இல்லையானால் அறிவுலகம் இருளடைந்துபோம்' என்பது திண்ணம். "எழுத்தறிவித்தவன் இறைவனாகும்" என ஆசிரியனைக் கடவுளாகவே பாராட்டியுள்ளது தமிழுலகம். காரணமென்ன? கடவுள் அறிவே யுருவாயுள்ளவன்; உயிர்களுக்குள் நின்று அனைத்தையும் அறிவிக்கின்றவன். அவ்விறைவனைப் போலவே ஆசிரியனும் அறிவு நிரம்பப் பெற்று மக்களுக்குப் புறத்தே நின்று அனைத்தையும் அறிவிக்கின்றவன்; என்ற கருத்தாலே தான். இத்தகைய ஆசிரியர்களைப் பொருத்துத் தான் மக்களின் நல்வாழ்வும் திகழ்கிறது. "பால்மணம் மாறாப் பச்சிளங் குழவியர்க்கு நூல் மணம் தன்னை நுண்ணிதில் உணர்த்தும் ஆரம்பாசிரியர் பணியே மற்றெல்லாப் பணிகட்கும் பதவிகட்கும் தலையாயது. எனவே ஆசிரியர் பணியில் எல்லாத் துறைகளும் அடங்கியிருக்கின்றன வெனலாம். ஆசிரியர்கள் நிலை எவ்வளவுக்கெவ்வளவு உயர்கின்றதோ அவ்வளவுக் கவ்வளவு நாடு உயர்ந்தும், ஆசிரியர்கள் நிலை எவ்வளவுக்கெவ்வளவு தாழ்கின்றதோ அவ்வளவுக் கவ்வளவு நாடு தாழ்ந்தும் காணப்படும். முற்காலத்திய ஆசிரியர்களின் நிலை மிகவும் உயர்ந்திருந்தது. பண்டைய குருகுலமே இதற்குச் சான்று.

ஒரு மனிதன் உயர்வதற்கும் தாழ்வதற்கும் அடிப்படையானது ஒழுக்கம் அல்லது நேர்மை. நேர்மையைத் தவறுபவன் தாழ்கின்றான். தாழ்கின்றானென்பது கீழ்நிலையடைகின்றானென்பதை யொக்கும். இது நாளடைவில் சோம்பல் சோர்வு மயக்கம் தயக்கம் அஞ்ஞானம் அறியாமை ஐயம் திரிபு முதலியவற்றைத் தோன்றச் செய்யும். பின் பொய் களவு கொலை வன்னெஞ்சம் முதலியவற்றால் கட்டுண்டு போரை விளைவிக்கும். இவ்வித வாழ்க்கையில் நல்ல அமைதி காண்பதரிது. வறுமை, பிணி முதலிய துன்பங்கள் என்றும் இடைவிடாது சூழ்ந்திருக்கும். கொடிய மனம் தீயசொல் கெட்ட நடத்தை வெகு லேசாகப் பரவி விடும்.

நேர்மையைக் கடைப் பிடிப்பவன் உயர்கின்றான். உயர்கின்றானென்பது மேன் மக்களின் சிறப்பிற்குப் பாத்திரனாகின்றானென்பதை யொக்கும். நேர்மையானது; முயற்சி தாளாண்மை அஞ்சாமை அறிவு

அறம் அன்பு அருள் முதலிய சீரிய பண்புகளை உள்ளத்திற் கனிவிக்கும். இக்கனிகளால் அறிவு இனபச் சுவைகளை மேன்மேலும் பெற்றுச் சுவைக்கலாம். இவ்விடத்தே மனிதன் எந்த இலட்சியத்தின் பொருட்டு மண்ணுலகில் உயிரெடுத்து வந்தானே அவ்வின்ப லட்சியத்தை இறுதியாயடையப் பெறுகின்றான். ஆகவே இவ்விதக் கல்வி ஒழுக்கத்தைப் போதிப்பவர் ஆசிரியராகின்றார். வருங்கால உலகின் வரவையறிந்து ஒப்படைக்கப்பட்ட குழந்தையைத் தக்க சான்றோனுக்கும் பெருந்தொண்டு ஆசிரியர்களுடையதே.

கள்ளங்கபடமற்ற குழந்தைகள், பற்றோ பகையோ அரும்பாத குழந்தைகள் இவ்விதக் கல்யாண குணங்களையுடைய குழந்தைகள் அன்புருவங்கள். அன்பு ஆண்டவன் உருவம், ஆதலின் குழந்தைகள் தெய்வங்களாகும். இவ்விதத் தெய்வக் குழந்தைகள் குழுமும் மன்றமே பள்ளி. பள்ளியே பரமன் கோயில். அறிவை வளர்க்கும் ஆலயம் எனல் மிகையாகாது. இவ்விடத்தே தொண்டு செய்து குழந்தைகளின் எண்ணம் சொல் செயல், நடையுடை பாவனைகள், அழகு ஆர்வம் வீரம் நயம் இனிமை கருணை முதலிய நற்குணக் காட்சிகளைக் காண்டலே பேரின்பம், இப்பேரின்ப நுகர்ச்சியை ஆசிரியர் பணியால் அன்றி மற்றெவ்விதப் பணியாலும் அடையப் பெறுதென்பது திண்ணம். எனவே ஆசிரியர் தொண்டு மாசற்று விளங்கும் ஓர் ஒப்பற்ற தெய்வத்தொண்டு. வாழ்க ஆசிரியர் தொண்டு! வாழ்க தெய்வக் குழந்தைகள்!!

ஒரு நாடு சிறப்பதற்கு ஆதாரமானவை கல்வி, நாகரிகம், விவசாயம், வியாபாரம், கைத்தொழில், பொருளாதாரம், போக்குவரவு சாதனங்கள் முதலியவைகளாகும். இவைகள் அந்நாட்டின் முக்கிய நகரங்களிற் பிரகாசிக்கின்றன. அந்நகரங்களுக்காதாரம் சுற்றியுள்ள கிராமங்களே யென்பது நான்கு விளங்கும். கிராமங்கள் இல்லையானால் நகரங்களில் என்ன உண்டு? எனவே நாட்டின் மூலதனங்கள் கிராமங்களேயாகும். இவ்வித கிராமங்கள் பலவிதத் துறைகளில் ஓங்கிச் சீர்மை பெறுதல் வேண்டும். இவ்விதக் கிராம முன்னேற்றத்திற் காதாரமானவற்றின் பெருங்கட்டத்தைத் தாங்கி நிற்பவர்களுள் முன்மையானவர் ஆரம்ப ஆசிரியரேதான். ஆசிரியர்கள் தன்னலங்கருதாது பிறர் நலம் கருதும் தன்மையுடையவராயும், எல்லாவுயிரை ஒன்றெனக் காணும் இயல்புடையவராயும் இருத்தல் வேண்டும். சன்மார்க்க வொழுக்கங்களில் ஆசிரியர்கள் தலை சிறந்த நீதிமான்களாய் நிற்பார்களானால், அவர்களுடன் நெருங்கிப் பழகும்பயிற்சியினால் குழந்தைகளும் அக்குழந்தைகளின் பெற்றோரும் நல்லொழுக்கங்களில் சீர்திருந்தி விடுவர். இதனால் நாடும் சமா

தானமடையும். இவ்வண்ணம் கிராம மக்கள் கல்வியறிவு நல்லொழுக்கங்களில் சிறந்து விடுவார்களானால் எங்கும் நீதி நிலவி தங்களைத் திருத்திக் கொண்டு தங்களின் தேவையைப் பிறர் கையில் எதிர்பாராது தாமே பூர்த்தி செய்து கொள்ளும் தன்மையும் உணர்வும் பெறுவார்கள்.

"இந்தியாவின் சீவன் அதன் ஏழு லட்சம். கிராமங்களில்தானிருக்கிறது. என்றைக்கு இந்த கிராமங்கள் அனைத்தும் பிறர் கையினை எதிர்பாராமல் தம்முடைய தேவையைத் தாமே பூர்த்தி செய்து கொள்ளும் சக்தியும் தகுதியும் பெறுகின்றனவோ அன்றுதான் இந்நாடு பூரணசுதந்தரம் பெற்ற நாடாக முடியும்"......மகாத்மா காந்தி.

குழந்தைகள் வதியும் சூழ்நிலையானது பெற்றோர்கள் இடமாகும். பெற்றோர்கள் நல்லொழுக்கமுள்ளவராயிருந்தால் குழந்தைகளும் அங்ஙனமேயிருப்பர். தீயவொழுக்கங்களையுடைய பெற்றோரின் சூழ்நிலையால், குழந்தைகளின் இயற்கையறிவும், விலைமதிப்பற்ற போதனையும் பாழ்பட்டுப் போய் விடுகின்றன. இத்தீய சூழ்நிலையை வேரோடு களைய அடிக்கடி பெற்றோர் சங்கம், பள்ளி விழா, மாணவர் சங்கம், விளையாட்டுப் பந்தயம், முதியோர் கல்வி, கிராம சேவை முதலுதவி, மாணவர் ஆட்சி மன்றம்,சிறு நாடகங்கள் முதலியவற்றை ஏற்படுத்திக் குழந்தைகளின் கல்வித் திறன் பேச்சுத் திறன் செயற்றிறன் முதலியவற்றைக் காண்பித்து பெற்றோர் மனம் கவரும்படி கண்டு களிக்கச் செய்தல் வேண்டும்.

அறிஞரின் அறமொழிகள்

(D. E. மாசிலாமணி, விருதம்பட்டு)

1. சிந்திக்கத் தெரியாதவன் அறிவிலி; தன் சிந்தனையை எடுத்துக் கூற பயப்படுகிறவன் கோழை; தன் சிந்தனையை மாற்றிக் கூறுகிறவன் துரோகி.

—சாக்ரடீஸ்

2. ஒரு சொட்டுத் தேன் பல ஈக்களை இழுப்பதுபோல் உனது அரிய பேச்சுத் திறமையால் பிறர் மனதை இழுத்து நல் வழிப்படுத்தக் கற்றுக்கொள்.

—லிங்கன்.

3. வாழ்க்கையில் ஏற்படும் பிரச்சினைகளை சமாளிக்கும் திறமையே கல்வியாகும்.

—ராபின்

சாக்ரடிஸ்

(டி. பி. மாசிலாமணி, ஆசிரியர்)

[சாக்ரடிஸ் கிரேக்க நாட்டுக் கிராமங்களில் புரட்சியும், மறுமலர்ச்சியும் ஊட்டிய ஒப்பற்ற சீர்திருத்த வாதி. கிராம மக்களுடன் நெருங்கிப் பழகினதுடன் அவர்கள் *அநாகரீகத்தையும், குறைபாடுகளையும் வேடிக்கையாகப் பேசிக் கண்டித்து உயர்ந்த மாறுதல்களைக் கொண்டு வந்தார். அவரிடம் காணப்பட்ட ஆழ்ந்த அறிவு; குற்றம் கண்டு பிடிக்கும் திறமை; ஹாஸ்யஞானம்; சொல் அழகு ஆகியவற்றைக் கீழ்க்கண்ட சம்பவங்கள் மூலம் அறியலாம்.]

கொடிய ஜந்துக்கள்

(ஒரு நாள் சாக்ரடிஸ் தமது நண்பர் ஒருவருடன் நடந்து செல்கையில் தூரத்தில் ஒரு வாலிபன் நடந்து வருவதைக் கண்டார். அந்த வாலிபனுடைய நடையில் சுறுசுறுப்பும் அவன் பாவனையில் எந்தக்காரியத்தையும் சாதிக்கும் ஆற்றல்உள்ளவன் என்பதை வெளிப்படுத்தும் அம்சங்களும் காணப்பட்டன. சாக்ரடிஸ் அந்த வாலிபனைக் கண்டு பேச விரும்பி, "அத்தகைய வாலிபனே எனது சேவைக்குத் தேவை" என்று சொல்லிக்கொண்டு அவனை மிகச் சப்தமிட்டு வரும்படி அழைத்தார்.)

சிநேகிதர் :—ஐயா! சிறிது பொறுங்கள். இவ்வளவு தொலைவிலிருந்து கூப்பிட்டால் அவனுக்குக் கேட்பது அரிது; அவன் மேலும் அருகினில் வருவதற்குள் ஏன் அவசரப்படுகிறீர்? மேலும், தெருவில் இப்படி உரக்கக் கூவினால் பலர் உம்மைப் பைத்தியக்காரன் என்றுகூட எண்ணுவார்கள்!

சாக்ரடிஸ் :—"நண்பரே! நீர் அதற்காகக் கவலைப்பட வேண்டாம்; சிலர் என்னைப் பற்றி முன்பே அப்படித்தான் எண்ணிக் கொண்டிருக்கிறார்கள்.

(காக்கி வர்ணம் கொண்ட ஆடைகள் அணிந்துகொண்டு கையில் கோலுடனும், ஆடையில் பலவித பதக்கம், சாரண அடையாளங்கள் அணிந்து கொண்டும் கம்பீரமாக வந்த அந்த வாலிபன் சாக்ரடிசை சந்தித்தான்.)

வாலிபன் :—பெரியாரே; காலை வந்தனம்.

சாக்ரடிஸ் :—ஐயா! காலை வந்தனம். நான் உம்மைப் பற்றி சிறிது அறிய ஆவல் கொள்கிறேன்; அதற்காக மன்னிக்கவும். நீர் ஏன் இத்தகைய ஆடம்பரமான அணிகலன்களை அணிந்திருக்கிறீர் என்றும், நீர் யார் என்றும் நான் அறியலாமா? நான் சாக்ரடிஸ் என்ற சீர்திருத்த வாதி; ஆகவே நான் எண்ணற்ற பல கேள்விகளையும்; கீழ்த்தரமான வினாக்களையும் கூட வினவ உரிமை எடுத்துக் கொள்ளுவது வழக்கம்.

சாரணவாலிபன் :—சாக்ரடிஸ் பெரியாரே! நான் ரோவர் சாரணப் படையைச் சேர்ந்தவன்.

சாக்ரடிஸ் :—அப்படி என்றால் என்ன?

சாரணன் :—ரோவர் சாரணப் படைவீரர்கள் முற்காலத்தில் புகழ் பெற்ற சேவை] புரிந்த (Knight Errant) மகா வீரர்களின் சந்ததியார் ஆவார்கள். நாங்கள் சிறந்த காரியங்களை சாதிக்கவும் உதவிகள் பல புரியவும் எப்போதும் ஆயத்தமாகவே இருப்போம்.

சாக்ரடிஸ் :—"அந்த வட்ட மேஜை" மஹா வீரர்களைப்பற்றி எனக்குத் தெரியும். அவர்கள் ஆடம்பரமும், அறிவும், ஆண்மையும் அமையப் பெற்றவர்கள். அழகிய மார் கவசமும் பளபளக்கும் வாளும், ஈட்டியும் தாங்கி உயர்ந்த பரிகள் மேல் ஏறி நெருப்பைக் கக்கும் கொடிய வன ஜந்துக்களுடனும், கொடிய விலங்குகளுடனும் போராடிக் கொல்வதற்கும், சிறைப்பட்டிருக்கும் இள மங்கைகளை விடுவிப்பதற்குமே அவர்கள் செல்வார்கள்.

சாரணன் :—ஆம்! ஐயா நீர் சொல்லுகின்ற அந்த மகா வீரர்களின் சந்ததியார்கள்தான் நாங்கள் அனைவரும்.

சாக்ரடிஸ் :—அவசியமில்லாத ஆடம்பர சின்னங்களையும், போர் ஆயுதங்களையும் தரித்துக்கொண்டு; காலி பெட்ரோல் டப்பாக்கள் இடும் ஓசையைப்போல் சப்தித்துக் கொண்டு சென்ற அந்த மஹா வீரர்கள் சிலரைச் சில குதிரைகள் பயத்தினால் கீழேகூட தள்ளி இருக்கக்கூடும்.

சாரணன் :—வீண் ஆடம்பரத்தைப் பற்றிக் குறைகூறக் காரணம் இருப்பினும் அந்த மகா வீரர்கள் ஒப்பற்ற திறமையும், எல்லையில்லா விடா முயற்சியும் கொண்டவர்களாகவே இருந்திருக்க வேண்டும்; ஏனெனில் இக்காலத்தில், பழங்காலத்தில் மலிந்து கிடந்த கொடிய ஜந்துக்களை காண்பது இல்லாததாகவே இருக்கிறது. அஞ்சா நெஞ்சம் கொண்ட அந்த வீரக்குழுவினர்

மக்களுக்குத் தீங்கு விளைவித்த சகல கொடிய ஜந்துக்களையும் விலங்குகளையும் ஒருங்கே மடியச் செய்து தங்கள் புகழை நாட்டினர். அதனால்தான் நான் இப்போது ஒரு சேவையும் செய்ய முடியாமல் சோம்பலாகவே இருக்கிறேன்.

சாக்ரடிஸ் :—என்ன ! கொடிய ஜந்துக்கள் அனைத்தும் மடிந்து விட்டன என்று சொல்லுகின்றாய்? ஒன்றுகூட இன்னும் சாகவில்லை; முற்காலத்தில் காணப்பட்ட கொடிய ஜந்துக்களைக் காட்டிலும் இப்போது தீமையைக் கக்கும் கொடிய ஜந்துக்கள் அதிகம் காணப்படுகின்றன; தேசம் முழுவதிலும் முக்கியமாக ரோவர் சாரணர் படை உலாவும் பட்டணங்களிலும் அவை மலிந்து கிடக்கின்றன.

சாரணன் :—சாக்ரடிஸ் பெரியார் சிறிது புத்தி மாறாட்டம் உள்ளவர் என்று சிலர் சொல்லுவதைக் கேட்டிருக்கிறேன் ! அவர்கள் சொல்வது சரியாகத்தான் இருக்கவேண்டும்.

உமது கற்பனையில் மாத்திரம் தோன்றிய கொடிய தீமைக் கக்கும் ஜந்துக்கள் இக்காலத்தில் எங்கு நிலவுகின்றன?

சாக்ரடிஸ் :—வாலிபனே ! ஆம். இது என் மனதில் உதித்த கற்பனைதான். உனது கண்களை நன்றாகத் திறந்து பார் ! நமது அரும் பெரும் தேசம் ஜாதித் துவேஷம், சண்டை சச்சரவால் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளது. சந்தேகம், ஒற்றுமையின்மை, வறுமை, கோழைத்தனம், எங்கும் மலிந்து கிடக்கின்றன. ஒரு மதத்தினர் மற்றொரு மதத்தினரை இழிவு படுத்துகின்றனர். மேற்கூறியவை உலகத்தில் வாழ்ந்த கொடிய ஜந்துக்களைக்காட்டிலும் பயங்கரமானதல்லவா? அவை தீமைக் கக்கி நமது அருமைத் தேசத்தை நசித்துப் பொசுக்கவில்லையா? இந்த நாட்டின் வருங்கால முன்னேற்றம் அனைத்தும் இதனால் பாழ்படுத்தப்பட வில்லையா?

வாலிபன் :—சபாஷ் ! பெரியாரே நீர் சொல்லுவது அனைத்தும் முழு உண்மை. ஆனால், இத்தகைய. கொடிய ஜந்துக்களுடன் போராட ஏற்ற போர் ஆயுதங்கள் எங்களுக்கு இல்லையே?

சாக்ரடி :—நிச்சயமாக அதற்கேற்ற போர்க்கருவிகள் உண்டு. ஒருவர் தமது மதத்தின் மேல் வைக்கும் சிறந்த நம்பிக்கையே அவருடைய க்ஷேமமும் மார்க்கவசமும் ஆகும். உனது மதத்துடன் பிறர் மதங்களையும், மதித்துப்போற்றி அதன்படி நடக்க உறுதி கொள்ளுவதே உனக்கு ஏற்ற பட்டயம். சாரணர் விதிகளே நீ போராடப்பயன்படுத்தக்கூடிய பொன் மொழிகள்.

இவ்விதமாக ரோவர் சாரணப்படையைச் சேர்ந்த நீங்கள் அனைவரும் ஏற்ற ஆயத்தத்துடன்; பாதுகாப்புகளுடன் சென்று சிறந்தவைகளுக்காகப் போராடுங்கள்; நான் கூறிய வறுமை, பிரிவினை, ஜாதித்துவேஷம், இவைகளைக் கண்ட இடத்தில் எல்லாம் எதிர்த்து அதை நிவர்த்தி செய்யப் பாடு படுங்கள். நாட்டிலும், கிராமத்திலும் உள்ள ஒற்றுமையின்மை, பிணி, வறுமை, பிரிவினைகள் அனைத்தும் நீங்கும் வரை உங்களுக்கு சோம்பலாக இருக்க நேரமே இல்லை !

சாரணன் :—சாக்ரடிஸ் பெரியாரே; இறைவன் உதவியால் நான் உமது ஆலோசனையின்படி எனது பட்டினத்திலும், தேசத்திலும் சமாதானம், சந்தோஷம், ஒற்றுமை, பரவும்படி தினமும் விடா முயற்சியுடன் சேவை செய்ய முயற்சிப்பேன். ஆனால், தற்காலத்தில் அடிமைப்படுத்தப்பட்டுள்ள இளமங்கைகள் இருக்கமாட்டார்கள் என்றுதான் எண்ணுகிறேன். அதைக் குறித்து நீர் என்ன சொல்லுகிறீர்?

சாக்ரடி :—அதைப் பற்றியும் உனக்குச் சொல்ல விரும்புகிறேன். இக் காலத்தில் துர்ப்பாக்கியம் நிறைந்த அடிமைப் பெண்கள் பலர் தேனீக்களை யொத்த எண்ணிக்கையுடையவர்களாக அலைகின்றனர்.

சாரணன் :—எங்கே அவர்கள்? நான் அவர்களைக் கண்டதேயில்லையே?

சாக்ரடி :—அறியாமை, வறுமை, ஆரோக்கியமின்மை, படிப்பின்மை போன்றவைகள் நிரம்பப் பெற்ற சிறுவர் சிறுமிகளையே நான் அடிமைப் பெண்களுடன் ஒப்பிட்டுப் பேசுகிறேன். நமது கிராமங்களில் உள்ள சிறுமி, சிறுவர்களைக் கவனித்துப் பார். அவர்கள் தினந்தோறும் விளையாடினால்தான் ஆரோக்கியமாக வாழ முடியும். விலங்குகள்கூட விளையாட விரும்புகின்றன. ஆனால், நமது பிள்ளைகள் மாலை நேரத்தில் பல விளையாட்டுகள், சந்தோஷமாக விளையாட முடியாத காரணத்தால் பலவித பிணிகளால் பாதிக்கப்படுகின்றனர்.

அத்தகைய பாக்கியமற்ற சிறுவர் சிறுமிகளையே நீ அடிமைப்பட்ட மங்கையர்களாகக்கொள்ள வேண்டும். கிராமத்தில் சிறுவர்களுக்காகச் சில சிறந்த வெளிகள் ஏற்படுத்தி அங்கு அவர்களுக்கு ஏற்ற பலவித விளையாட்டுகள் நடத்தப்படவேண்டும். பெரிய மாணவர்கள், கிராமத்தின் வெளியே சென்று நீந்துதல், படகு ஓட்டுதல், தண்ணீரில் குதித்தல் போன்ற விளையாட்டுகள் விளையாட கற்றுக்கொடுக்க வேண்டும். படிக்

காத சிறுவர்களைக் கல்வி கற்க வைத்து விளையாடாத பிள்ளைகளுக்கு விளையாட்டின் மேல் விருப்பம் ஊட்டி இவ்விதமாக அந்த சிறுவர்களின் வாழ்க்கையைத் திருத்தி அமைக்க முயற்சித்தல் வேண்டும்.

ஒவ்வொரு சாரணப்படை வீரனும் பலவித விளையாட்டுகள் நடத்தும் திறன் பெற்றிருக்கவேண்டும். ஆகவே, வாலிபனே, நீயும் சென்று கிராமங்களிலும், ஊர்களிலும் அறியாமையால் அடிமைப்பட்டுள்ள அந்த சிறுவர் சிறுமிகளுக்கு விளையாட்டுகள், பந்தயங்கள் கற்றுக் கொடு. நீயும் உனது சிறந்த குழுவினரும் செய்வதற்கு மிகப் பெரிய காரியங்கள் இருக்கின்றன. நீ செய்யப் போகும் புது சேவையில் உனக்கு ஏற்படும் கஷ்டங்களை எனக்கு உரைத்தால் நான் அதற்கு ஏற்ற ஆலோசனை கூறுவேன். ஆகவே, சாரணச் சங்க வீரனே; ரோவர்படை தீரனே; இப்போதே புறப்பட்டுச் சென்று தீமைக் கக்கும் கொடிய ஜந்துக்களையும், அவதிப்படும் அடிமை மாக்களையும் மேற்கொள்ளச் செல். மேலும், நேரத்தை வீண் போக்க உனக்கு அவகாசம் இல்லை! துரிதில் சென்று நான் சொன்னதை நிறைவேற்று.

அறிஞரின் அறமொழிகள்

(D. E. மாசிலாமணி விருதம்பட்டு)

4. கல்வியின் சிறந்த லட்சியம் செயலாற்றும் சக்தியே அன்றி அறிவு பெறுவது மட்டுமல்ல.

—ஆண்ரு.

5. நூறு செல்வந்தரைவிட தியாக சிந்தையுள்ள ஒரே ஏழைத் தேச பக்தனால் நாட்டுக்கு அதிக நன்மை உண்டாகின்றது.

—அருணிமஸ்.

6. உண்மையான முன்னேற்றம் என்று சொன்னால் சன்மார்க்கத்திலே, அதாவது அன்பு நெறியிலே முன்னேறிச் செல்வதுதான். மற்ற முன்னேற்றங்களெல்லாம் இரண்டாம் பட்சமான முன்னேற்றங்களே.

—காந்திஜி.

7. அரிய புஸ்தகங்கள் இனிய கலாசாலை; அரிய நூல் நிலையம் இனிய அநில கல்லூரி. அதன் இனிமையை ருசித்தவன் புதிய சக்தியைப் பெறுகிறான்.

—அன்ரேன்.

ஒளியின் காவலன்

[பகவதி ஜயராமன்]

★

அமெரிக்கக் கூட்டு நாடுகளின் தென்மேற்குப் பாகத்திலுள்ள ஒரு பெரு மலையின் உச்சியில் நவீன விஞ்ஞானத்தின் மேன்மைக்கு அறிகுறியாய் ஒரு பெரிய சின்னம் நின்று நிலவுகிறது. அதுவே, பலோமர் மலையின் மாபெருந் தொலைநோக்கியாகும். இதிலேயுள்ள இருநூறு அங்குல விட்டமுள்ள கண்ணாடியின் உதவிகொண்டு, நம் உலகத்துக்கு அப்பால் எத்தனையோ கற்கள் தொலைவிலுள்ள விண்மீன்களையெல்லாம் வானியலார் படம் பிடிக்கின்றனர். இவ்விண்மீன்களிலிருந்து வரும் ஒளி நம் கோளத்தை வந்தடைய நூறாயிரக் கணக்கான ஆண்டுகள் ஆகின்றனவாம். என்றாலுங்கூட இந்த ஒளியையும் நம் கண்கள் மிகக் கூர்மையாகக் கண்டுபிடித்து விடுகின்றன. மனிதனிடத்திலுள்ள பொறிகள் யாவற்றுள்ளும் மிகுந்த கூருணர்ச்சியுள்ளவை கண்களேயாகும். எவ்வளவு நுட்பமான ஒளியாயிருந்தாலும் அதனையும் அளவு உணர்ந்து பதிவு செய்துவிடுகின்றன.

ஒரு நல்ல இரவில் மனிதனுடைய கண்கள் பதினாறு கற்கள் தொலைவிலுள்ள ஒரு மெழுகுவத்திச் சுடரைத் தெளிவாகக் காண முடியுமாம்; ஒரு விமானி தன் விமானத்தில் இருந்துகொண்டு தனக்குப் பத்துக் கற்கள் கீழே எரியும் ஒரு நெருப்புக்குச்சியின் ஒளியை அறியமுடியுமாம். இப்படி ஒரு பெரிய விஞ்ஞானி சொல்லுகிறார்.

ஆதிகால மனிதன் காடுகளில் நடமாடும்போது, அவன் பெரிதும் தன் 'இரவுக் கண்களையே' நம்பியிருந்தான். இரவில் கண் தெரியாவிட்டால் அவன் வாழ்வே பாழ்பட்டுப் போய்விடும். ஆனால், இரவில் கண் தெரியும் இந்தத் தன்மை நேற்று வரை விஞ்ஞானத்திற்கு ஒரு புதிராகவே இருந்து வந்தது. ஆனால், இன்று இதைப்பற்றி விஞ்ஞானிகள் நன்கு அறிந்து கொண்டனர். நாலாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு எகிப்து தேசத்தில் மங்கிய வெளிச்சத்தில் பார்க்க முடியாதவர்களுக்கு மீன் ஈரலை உணவாகக் கொடுத்துப் பார்வையைப் பெறச் செய்தார்களாம். இரவுப் பார்வைக்கு உடலை வளர்க்கும் ஓர் ஊட்டக் கூறுதான் (Nutritional Element) காரணமாக இருக்கிறது.

அதனை இந்த இருபதாம் நூற்றாண்டில்தான் விஞ்ஞானிகள் கண்டு பிடித்தார்கள். 'அதற்கு ஏ. உயிர்ச்சத்து (Vitamin-A) என்று பெயர்.

உயிர்ச்சத்து வகைகள் பலவற்றுள்ளும் இதுதான் முதல் முதல் கண்டு பிடிக்கப்பட்டது. இது இயற்கைப் பொருள்களில் நிறைந்து கிடக்கிறது. விலங்குகளின் ஈரல்களில் மட்டுமன்றி, காரட்டுக் கிழங்கு, இனிப்புக் தக்காளி போன்ற மஞ்சள் நிறக் காய்கறிகளிலும், இன்னும் மற்ற உணவுப் பொருள்களிலும் இது மிகுந்து விளங்குகிறது. இவ்வளவு இருந்தும், உலகத்திலுள்ள மக்களில் பேரளவினர் ஏ-உயிர்ச்சத்துக் குறைவால் இரவுக் கண் பார்வை கெட்டு வருந்துகின்றனர். இந்த ஏ-உயிர்ச்சத்துக் குறைவால் வேறு பல விபரீதமான கோளாறுகளும் ஏற்படுமாம். இதனால் வறட்சிக் கண் (Dry Eye) என்ற ஒரு நோயும் உண்டாகிறதாம். நம் கண் கோளத்தில் ஒளியை ஏற்கும் ஒரு மெல்லிய தோல் இருக்கிறது. மேற்சொன்ன நோய் வந்தவர்களின் கண்ணில் இத்தோல் பாதிக்கப் பட்டு விடும். இந்நிலை கவனிக்கப்படா விட்டால், கண் பார்வைப் பழுதோ அல்லது முழுக் கண்பார்வை இழப்போ ஏற்பட்டு விடுமாம். இதைக் குணப்படுத்த உடனே ஏ-உயிர்ச்சத்து நிறைந்த மருந்துகளை அளிக்க வேண்டும்.

பொதுவாகவே உயிர்ச்சத்து உணவில் குறைந்தால் உடல் வளர்ச்சி தடைப்படுவதன்றி, தோல் இழைமூலங்கள் முதலியவற்றிற்கு ஊறும் நேரிடும்; இது தொத்து நோய்களுக்கும் எளிதில் இடமளிக்கும். போர்க்கால அநுபவமும், நவீனகால ஆராய்ச்சியும், இரவுக் குருட்டையும், மற்ற உயிர்ச்சத்துக் குறைபாடுகளையும் போக்க ஆற்றல் வாய்ந்த சாதனங்களை வழங்கியுள்ளன. இப்போது விஞ்ஞானிகள் ஒரு புதிய மருந்தைக் கண்டு பிடித்திருக்கிறார்கள். அதனை நாம் உணவோடு கலந்து உண்ணலாம். அதற்குப் பிணிநீக்கும் உயிர்ச்சத்து (Vittera Therapeutic) என்று பெயர். இம் மருந்தின் ஒரு வேளை அளவில் (One Dose) ஒரு மனிதனுக்கு அன்றாடம் தேவைப்படுகிற உயிர்ச் சத்தைவிட ஐந்து மடங்கு அதிக உயிர்ச் சத்து அடங்கியிருக்கிறது; இது அல்லாமல் பதினேழு வேறு முக்கிய ஊட்டப் பொருள்களும் இதில் நிறைந்திருக்கின்றன. இத்தகைய புதிய புதிய கண்டுபிடிப்புகளினால் விஞ்ஞானம் மனிதனுடைய இரவுப் பார்வை என்ற ஓர் அரிய சக்தியைப் பாதுகாத்து வருகிறது. இத்தகு பேருதவிகள் பல புரிந்துவரும் விஞ்ஞானத்திற்கு நாம் என்ன கைம்மாறு செய்யப் போகிறோம்!

—✶—

கவியரசன் புஷ்கின்

[தில்லை—மறைமுதல்வன்]

உலக இலக்கியங்களில் மிகமிகப் பிற்பட்டுத் தோன்றியவையே ஐரோப்பிய இலக்கியங்கள். இவைகளில் மிகவும் பிற்பட்டுத் தோன்றிய இலக்கியம் ரஷ்ய இலக்கியம். ரஷ்ய இலக்கியம் உருவாகி ஒன்றிரண்டு தலைமுறைகளே ஆகியிருக்கின்றன. 18-ம் நூற்றாண்டின் இறுதியில் தான் ரஷ்ய இலக்கியம் பிறந்தது. ஆனால் 19-ம் நூற்றாண்டிலேயே முழு வளர்ச்சி பெற்று விட்டது. இவ்வளவு குறுகிய காலத்திலேயே, அது உலக இலக்கியங்களின் முன் வரிசையில் தனக்கென்று ஒரு அழகான இடத்தைத் தேடிக் கொண்டது. இலக்கியத்தின் பல துறைகளிலும் — சிறப்பாக, புதிய துறையாகிய, புனைகதை, சிறு கதைகளில்—அது உலகுக்கே வழி காட்டியாகக் கருதப் பட்டது. ஐரோப்பிய இலக்கியச் செல்வர்கள் பலர் ரஷ்யாவே தங்களுடைய கலங்கரை விளக்கமாக அமைந்துள்ளது என்பதை ஒப்புக்கொள்கின்றனர்.

ரஷ்ய இலக்கியத்தின் இந்த மகத்தான வெற்றிற்கு ரஷ்ய மொழியின் உள்ளார்ந்தசிறப்பும், ரஷ்யரின் உள்ளத்தின் உயர்வுமே காரணங்களாக அமைந்தன.

"ஐரோபிய மொழிகள் எல்லாவற்றிலும் வளமும் நிறைவும் உடையது ரஷ்ய மொழியே" என்று ரஷ்ய மொழியின் சிறப்பு பற்றி கூறுகிறார் தேவோகு (Devogue) என்ற பிரஞ்சு அறிஞர். உலகிலுள்ள மொழிகள் எல்லாவற்றையும் விட, தன்னுடைய நற் பண்பையும் தூய்மையையும் பிறமொழிக் கலப்பால் சிறிது கூட கெடாமல் பாதுகாத்த மொழி ரஷ்ய மொழியே யாகும். இதன் பயனாக ரஷ்ய மொழிக்கு உலகில் ஒப்புயர்வற்ற—போட்டியற்ற—முதல் இடம் தரப்பட்டது! மேலும் ரஷ்ய மொழியில், உலகில் வேறெம் மொழியிலும் இல்லாத அளவுக்கு, கவிதை; உரை நடை, இலக்கியம் ஆகியவற்றின் மொழி நடை, பேச்சு நடைக்கு மிகமிக அருகாமையிலிருக்கிறது. லாமனசாவ் (Lomono soff) என்ற ரஷ்ய எழுத்தாளர் கூறுவது போல, "ரஷ்ய மொழியில் ஸ்பானிஷ் மொழியின் பெருமிதமும், பிரென்சு மொழியின் நயமும், ஜெர்மன் மொழியின் திண்மையும், இத்தாலிய மொழியின் இனிமையும், கிரேக்க லத்தீன் மொழிகளின் சொல் வளமும், சுருக்கமும், தெளிவும் ஆகிய பலவும் இயல்பாக அமைந்துள்ளன."

அடுத்து ரஷ்ய இலக்கிய வெற்றிக்குக் காரணமாக அமைந்தது அவர்களுடைய உள்ள உணர்வா

கும். உலகில் பிற நாடுகளின் கலை வாழ்வையும் வரலாற்றையும் தனித்தனியாகப் பிரிக்க முடியும். ஆனால் ரஷ்ய வரலாற்றின் வாழ்வும், கலையும் ஒன்றுக் கொன்று பின்னிக் கிடக்கின்றன. அவர்கள் உணர்வு மக்கள் உள்ளத்தின் பிரதிபலிப்பே தவிர வானத்திலிருந்தோ, மேல் உலகங்களிலிருந்தோ பிறந்த மாயப்படைப்பல்ல! அவர்கள் வாழ்வை வாழ்வாகவும், உலகை உலகாகவும் கண்டனர்!

இவ்விரு காரணங்களாலேயே பிந்திப் பிறந்த ரஷ்ய இலக்கியம் உயர்வில் முந்தி இடம் பெற்றது. "சுவையும் பயனும், காலத்தை வெல்லும் தன்மையும், பிறந்த இடத்தில் மட்டு மல்லாது, செல்லுமிட மெங்கும் சிறப்பும் புகழும் பெறுகின்ற தன்மையும், இருக்கவேண்டும் இலக்கியத்துக்கு. ரஷ்ய இலக்கியம் இந்த இலக்கணத்துக்கு முற்றிலும் ஏற்றதாக அமைந்திருக்கிறது. ரஷ்ய இலக்கியம், மாளிகையில் மதோன்மத்தராக இருந்தவர்களுக்கு மாளிகை வாசம் பெற்ற 'பேனாதூக்கி' தந்த களிப்புப் பானம் அல்ல! பசியுடனும், பட்டினியுடனும், பாதகனுடனும், பாதிரிகளுடனும் போராடி செத்துக் கொண்டிருந்தவர்களுக்காக தீட்டப்பட்ட திருவாசகம்!" என்று ரஷ்ய இலக்கிய சிறப்பு பற்றி அறிஞர் அண்ணா குறிப்பிடுவது இங்கு கவனிக்கத் தக்கது.

இவ்வளவு சிறப்புப்பெற்று உலகில் மிக உயர்ந்த இலக்கியமாகப் புகழப்படும் 'ரஷ்ய இலக்கியத்தின் முதல்பக்கத்தைப் பெருமையுடன் அலங்கரிப்பவன் அலெக்சாண்டர் புஷ்கின், ரஷ்யாவின் முதற்கவிஞன். உலகின் ஒப்பற்ற கவிஞன். முதன் முதலாக கரத்திலே பேனாபிடித்து எழுதினான். நீண்டகால உறக்கத்தில் ஆழ்ந்து கிடந்த ரஷ்யாவிழித்தெழுந்தது! ரஷ்ய இலக்கியத்தில் ஒரு பொன் அத்தியாயம் பளிச்சிட்டது! பல நூற்றாண்டுகளாக ரஷ்யாவைக் கவ்வியிருந்த அறியாமையும், இருளும், துயரமும் புஷ்கினின்பேனா வண்ணத்தில் கரைந்தோடின. அறிவுலகின் கண்கள் திறந்தன. ரஷ்யா மறு மலர்ச்சிப் பாதையில் மற்ற நாடுகளை யெல்லாம் பற்றி கூட நினைக்காமல் விடுவிடென்று நடந்தது! அதற்கு வழிகாட்டியானான் புஷ்கின். அவனைத் தொடர்ந்து உலகத்தின் தலை சிறந்த இலக்கியமன்னர்கள்சென்றனர். உலகம் வியப்பால் வாய் பிளக்கும் முறையில் ரஷ்யாவிலிருந்து கிளம்பிய சிந்தனைச் செல்வர்களின் அணிவகுப்பில் முதலிடத்தை வகிப்பவன் புஷ்கின்.

புஷ்கினின் வாழ்க்கைப் பாதையில் அபாயப் பள்ளங்களே நிறைந்திருக்கின்றன. மேலும் அந்தப் பாதைகூட குறுகியதாகவே இருந்தது. 1799-ம் ஆண்டு மே மாதம் 26-ம் நாள் பிறந்தான் புஷ்கின். அவனுடைய பெற்றோர்கள் பிரபுக்களுக்கே உரித்தான தனிப் பழக்க வழக்கங்க

ளில் ஊறிப் போனவர்கள். அக்காலத்து ரஷ்யப் பிரபுக்கள் மதுவுக்கும் மங்கையின் இதழுக்கும் வேற்றுமை தெரியாத மாமிசப் பிண்டங்களாகவே விளங்கினர். சிவப்பு அதர சிங்காரிகளின் சிற்றிடையை வளைத்தபடி நடனம் பயிலுவதே வாழ்வென எண்ணிக் கிடந்தனர். அர்த்த மற்ற வாழ்விலே ஆடம்பரச் செலவுகளிலே அவர்கள் மிதந்தனர். இத்தகு 'உத்தம' குணங்கள் கொண்ட 'திருக் கூட்டத்'திலே தான் புஷ்கினின் பெற்றோர்களும் உலவி வந்தனர். இதனால் சீமான்களின் மதம் பிடித்த கோணல் சேஷ்டைகளை வெறுத்த புஷ்கினின் பாசத்தை அவர்களால் பெற முடியவில்லை. செவிலித்தாயே அவனுடைய அன்பைச் சுமந்து கொண்டாள்.

தன்னுடைய பன்னிரண்டாவது வயதில் புஷ்கின் பீட்டர்ஸ்பர்க்கிலிருந்து உயர்தரப் பள்ளிக்கூடத்தில் சேர்ந்து ஆறு ஆண்டுகள் பயின்றான். இந்தக் காலத்தில் அவன் பெரும்பாலும் தன் நேரத்தையும் நினைப்பையும் நூல் நிலையங்களிலேயே கழித்தான். அவனது இலக்கியப் பற்றுவளர பிரெஞ்சு நாவல்கள் துணை செய்தன. வாழ்வின் அடித்தளம்வரை சென்று மனித இனத்தின் உண்மைகளை—உணர்ச்சி மோதுதல்களை—ஆசாபாசங்களை—அழகாக சுவையூறும் வண்ணம் சித்தரித்த பிரெஞ்சு இலக்கியங்கள் அவனது இலக்கியப் பசிக்கு நல்ல விருந்தாகப் பயன் பட்டன.

பள்ளி வாழ்விலேயே புஷ்கின் ஒரு கவிஞனாகி விட்டான். பீட்டர்ஸ்பர்க்கிலிருந்து வெளிவந்து கொண்டிருந்த "ஐரோப்பியத் தூதுவன்" என்ற செல்வாக்கு மிக்க ஏடு அவனுடைய "என் தோழனான கவிஞனுக்கு" என்ற கவிதையை வெளியிட்டது. அதற்குப் பின் 'விடுதலைக்கு'—'நாட்டுப்புறத்தில்' போன்றகவிதைகள் தொடர்ந்து வெளிவந்தன. விடுதலை வேட்கையும், சீர்திருத்த ஆர்வமும், புரட்சி எண்ணங்களும் அவன் இதயத்தில் நிரம்பி வழிந்தன. எனவே இந்தப் பண்புகளெல்லாம் அவனுடைய கவிதைகளிலும் பிரதிபலித்தன. இதனால் புரட்சி மனப்பான்மை கொண்ட, 'டிசம்பரிஸ்டுகள்' அவனுடைய தொடர்பு கொள்ள ஆரம்பித்தனர்.

மகா பீட்டர் (Peter the Great) (1686--(1725) —ராணி காதரைன் (Catherfne II) (1752-1796)—இவ்விருவரின் ஆட்சியின் கீழிருந்த போதுதான் ரஷ்யாவில் — அறியாமை இருள் மூடிய அறையில் அடைபட்டுக் கிடந்த ரஷ்யாவில்— மறுமலர்ச்சியின் முதல் மொட்டு தன் முனைப் பிடிப்புகளை விலக்கியது. பிரெஞ்சு மண்ணில் மணம் வீசி வந்த 'புரட்சிக் கருத்துக்கள்' ரஷ்யாவிலும் மெல்ல மெல்ல தலை நீட்டின. வால்டேர், ரூசோ போன்றவர்கள் ரஷ்ய வாலிபர்களின் இதய வீரர்களானார்கள். ஐரோப்பாவிலிருப்பது போல "மக்கள் மன்றங்"களை நிறுவி,

மக்களின் நலன்களைக் காப்பாற்ற வேண்டுமென்ற ஜன நாயக மனப்பான்மை செழித்து வளர்ந்தது. மக்களின் நலனைக் கவனிக்கும் நல்வழி எது என்று சிந்தித்த அவர்கள் "மக்கள் நலனைக் கவனிக்கும் சங்கம்" என்று ஒரு அமைப்பை உருவாக்கினர். இந்தச் சங்கம் ரஷ்யாவில் கொடுமையின் சின்னமாக விளங்கி வந்த நிலச்சுவாந்தார் முறையில் சீர்திருத்தம் செய்வதற்கான வழி வகைகளைச் சிந்தித்த வண்ணமிருந்தது.

புஷ்கின் இந்தச் சங்கத்துடன் தொடர்பு கொண்டான். இந்த இயக்கத் தொண்டுகளில் ஈடுபடுவதன் மூலம் புஷ்கின் தீவிரமான புரட்சி வாதியாக மாறிக் கொண்டிருந்தான். புரட்சிக்காரர்களுக்கு புஷ்கினின் கவிதைகள் நல்லதொரு கேடயமாக அமைந்தன. அவனுடைய கவிதைகளை ஆயிரக்கணக்கில் கையினால் எழுதி பல இடங்களுக்கு அனுப்பினர். "நாங்கள் விடுதலைக்காக ஏங்கித் திரிகிறோம். வாலிபன் தன் இன்பக் கனவுகளை நிறைவேற்ற எப்படி எதிர் பார்ப்பானோ, அப்படி எங்களுக்கு விடுதலை தேட நாங்கள் எழுச்சியுற்றிருக்கிறோம். தோழர்களே! இந்த ரஷ்ய மண்ணில் அழிந்துபடப் போகும் ஆதிக்க வர்க்கத்தின் கல்லறை மீது நம்பெயர் பொறிக்கப்படும்." என்ற அவனுடைய உணர்ச்சி மிக்கவரிகள் எங்கும் எதிரொலித்தன. மிகக் குறுகிய காலத்திலேயே தனக்கென்று பெரும் புகழைத் தேடிக் கொண்டான் புஷ்கின்.

மக்களின் இதயத்தில் இடம் பெற்ற அதே நேரத்தில் ஆட்சியாளரின் கண்ணோட்டத்துக்கும் ஆளாகி விட்டான் புஷ்கின். அப்போது அவன் அரசாங்கத்தின் வெளி நாட்டிலாகாவில் வேலை பார்த்துவந்தான். அரசாங்க வேலையிலிருந்தபடியே தான் அவன் ஆட்சிக் கெதிரான புரட்சி எண்ணங்களைத் தன் கவிதைகளில் பின்னினான். இதைக் கண்ட அரசாங்கம், அவனை நோக்கி அடக்குமுறைக் கரங்களை நீட்டியது. தென் ரஷ்யாவிலுள்ள காகசஸ் மாகாணத்துக்கு மாற்றப்பட்டான் புஷ்கின்.

காகசஸின் குளிர்ந்த சூழ்நிலை புஷ்கினுக்கு உதவியாகவே இருந்தது. "இயற்கையன்னை எழில் பெற்று மிளிர்ந்தாள் அங்கே. பால் நுரைகள் போன்ற நீரைச் சுமந்து வந்த அனேக அருவிகள் ஏரியில் இரண்டறக் கலந்து இன்னிசை முழங்கின. அந்த அழகான ஏரியை வானம் தனது பனிப் பூக்களால் நாள் தோறும் ஆராதனை செய்கிறது. ஏரியின் கண்ணாடி நீரில் தங்கள் மேனியின் அழகைக் கண்டு களிக்கஎண்ணும்மலைகள்ஏரியைச் சுற்றி சூழ்ந்து நின்றன. பச்சைப் பட்டணிந்த இயற்கையன்னை எழில் நடனமிடுகிறாள்..." என்று காகசஸ் பகுதியின் சிறப்பை அழகாகப் பாடுகிறார் மலையாளக் கவிஞர் ஒருவர்.

புஷ்கின் காகசஸ் மலைச்சாரல்களில் சுற்றினான். வெப்பமோ வரட்சியோ இல்லாத சாந்த மயமான சூழ்நிலை, பசுங்குன்றுகளில் தூங்கும் நீலப்பனி—இவை புஷ்கினின் நெஞ்சை அள்ளின. இதனால் அவன் பின்னால் தீட்டிய உயர்ந்த காவியங்களுக்கு வேண்டிய இயற்கையறிவு கிடைத்தது. மேலும் புஷ்கின் தனிமையில் — அழகான சூழ்நிலையில்—வைக்கப்பட்டதால் அவன் தன் முழு நேரத்தையும் எழுத்துப் பணியில் செலவிட முடிந்தது. அவனுடைய சிந்தனை கடல் அலைகளைப் போலத் தாவித் தாவிச் சென்றது. அவனிடமிருந்து சுவையான ஏடுகள் பல வெளிவந்தன.

இலக்கியத்தில் தன்னைப் புதைத்துக் கொண்டிருந்த புஷ்கினின் இதயத்தில் பருவம் இன்ப மயமான எண்ணங்களைத் தூவியது. காவியலைந்த அவனது காதல் உணர்ச்சிகள் நடாலியா என்ற அழகு மயிலாளைத் தழுவின. எழிலின் அமுத ஊற்றாக விளங்கினான் அவன். தனது நெஞ்சில் பூத்த காதல் மலர்களை அவளுடைய வெண்ணிறப் பாதங்களில் வைத்து பூஜித்தான். பிறகே 1831-ல் இருவருக்கும் மணம் நிகழ்ந்தது.

ஆனால் புஷ்கினின் இல்வாழ்வு அவனுக்கு இன்பத்தை ஊட்டவில்லை. அவனுடைய காதலி அழகிதானே தவிர அறிவுள்ளவளல்ல. ஆடம்பரத்தில் மோகங் கொண்டாள். மாளிகையில் பிரபுக்களோடு குடித்துக் கூத்தாடி சரச சல்லாபங்களுடன் நாட்களை நகர்த்துவதில்தான் அவள் இன்பத்தைக் கண்டாள். உள்ளத்தால் ஒட்டாத இந்தத் தம்பதிகள் உடலுறவால் மட்டுமே இணைந்திருந்தனர்!

நடால்யாவின் மீது வெறுப்பு கொண்டவர்கள் அவளுடைய அந்தரங்க வாழ்வை—அழுகிப் போன செய்திகளை—அம்பலத்துக்கு இழுத்துவந்தனர்! விபசாரி! என்றனர். புஷ்கினின் மனம் வேதனையால் வெந்துபோனது. அவனிடமிருந்து அமைதி கழற்றி எறியப்பட்டது. தனது காதலிக்காக — அவளுடைய செலவுகளுக்காக —ஆயிரக்கணக்கில் கடன்பட்டான். "ஒரு எழுத்தாளனுக்கு இருக்க வேண்டிய ஏகாந்தமான அமைதி எனக்கு திருமணமான பிறகு இல்லையே" என்று கதறினான். கடைசியில் இந்தக் காதலே அவனை சமாதிக்கு அனுப்பிவிட்டது! ஆம்! நடால்யாவின் ஒழுக்கத்தில் ஏற்பட்ட தகராறால் 1838-ம் ஆண்டு ஜனவரி 27-ம் நாள் தாந்தே என்பவனால் சுட்டுக் கொல்லப்பட்டான் புஷ்கின். சாவின் உதடுகள் புஷ்கினைக் கடித்து விட்டன! ரஷ்ய இலக்கியத்தின்புகழ்பெற்ற ஒரு பொன்னேடு திருப்பப்பட்டு விட்டது!

புஷ்கினின் வாழ்வு குறுகியதுதான். ஆனால் அந்தக் குறுகிய காலத்தில் அவன் தந்த இலக்கி

யப் பொக்கிஷங்களின் மதிப்பு அளவிடமுடியாதது. ரஷ்யருக்கு உயர்நிலை இலக்கிய ஊற்றுக்களான பற்பல நூல்களை எழுதிக் குவித்துவிட்டான்.

புஷ்கினின் பெரு நூல்களில் சிறந்து விளங்குவது நாடோடிகள் (Gypsies) என்னும் காவியம். சமுதாயத்திலிருந்து ஒதுக்கப்பட்டு, ஊர் ஊராக, குடும்பம் குடும்பமாகத் திரிந்து கொண்டிருக்கும் நாடோடிகளை வைத்துப் பின்னப்பட்டது இந்த கவிதைக் காவியம்.

தவறிப்போய் பிரபு வர்க்கத்தில் பிறந்துவிட்டாலும் தனிமையையும், சுதந்திரத்தையும் விரும்பிய அலிகோ, சமுதாயத்தை விட்டு விலகி, நாடோடி கூட்டமொன்றோடு சேர்ந்து கொள்கிறான். வாழ்க்கை விதிகள் எதுவுமின்றி ஏகாந்தமாகத் திரியும் ஆசைகொண்ட அலிகோ, அந்த ஜிப்சிக்களுடன் ஊர் சுற்றுவதில் தனி இன்பத்தைக் காண்கிறான். நட்சத்திரங்களிடையே நிலவு ஒளி பொழிவது போல, அந்த நாடோடிப் பெண்களிடையே செம்பிரா என்பவள் எழிலின் எடுத்துக்காட்டாக விளங்குகிறாள். அலிகோ அவள்மீது காதல் கொள்கிறான். கனிந்த முகம், இனித்த மொழிகள், சிவந்த இதழ்கள், துவளும் இடை, போதையூட்டும் கண்கள், இனிப்பு கொட்டும் மேனி—இவற்றால் அவள் அவனை மகிழ்விக்கிறாள். அவனுக்காக வீணை நாதம் போன்ற தனது இனிமையான குரலால் பாடினாள்! வசந்த காலத் தென்றலைப் போல ஆடினாள்! திராட்சைக்கனி போன்ற இதழால் முத்தமிட்டாள்! அதே போது தனது முத்தச் சுவைக்காக ஏங்கிய ஒருவனுக்கும் அதை வழங்கினாள்! ஆம்! அவள் ஒரு ஜிப்ஸி! அவளுக்கு வாழ்க்கை நியதி எதுவுங்கிடையாது. அவள் ஒரு சுதந்திரப் பறவை! தன்னிச்சைபோல சுற்றித் திரியும் வானம்பாடி!

இதை அலிகோவால் புரிந்து கொள்ள முடியவில்லை. பொறாமையும், கோபமும் அவன் நெஞ்சில் கொப்பளிக்கின்றன. இதன் விளைவு...? ஜிப்ஸியும், அவள் காதலனும் அலிகோவின் சுயநல வெறித் தீயில் கருகி விடுகின்றனர். இதைக் கண்ட நாடோடிக் கூட்டம் ஆர்ப்பரிக்கிறது. "ஏ! நாகரீகம் மிகுந்த மனிதனே! பொறுமையின் உருவமே! தயவு செய்து எங்களை விட்டுப்போ! எங்களிடையே சட்டமில்லை, ஒழுக்கமில்லை, நாகரீகமில்லை! ஆனால் நாங்கள் உன்னைப்போல கொலை செய்யமாட்டோம். இரத்தத்தில் எங்கள் உள்ளங்களை நனைக்கமாட்டோம்! நாங்கள் கொண்டிருப்பது உன்னைப் போன்ற கல் நெஞ்சல்ல—கனிந்த உள்ளம்! உன்னைப்போல சூழ்ச்சி, பொறாமை, சுயநலம் இவற்றினால் உருவாக்கப்பட்டவர்களல்ல நாங்கள்! உன் குரலை இனியும் எங்கள் கூட்டம் கேட்க விரும்பவில்லை! ஓடிப்போ!"—

நாடோடிகளின் இந்த வார்த்தைகளைக் கேட்டபடி, குனிந்த தலையோடு திரும்புகிறான் அலிகோ—நாடோடி வாழ்வை இப்படி மிக அழகாய்ப் படம் பிடித்திருக்கிறான் புஷ்கின்.

அடுத்து புஷ்கினின் சிகர சிருஷ்டியாக விளங்குவது யூகென் ஆனெகன் (Eugen Oniegen) என்னும் எழுத்தோவியம்.

யூகேன் ஆனெகன்—மாளிகை வாசியின் மரபிலே தோன்றியவன். அவனுக்கு வாழ்க்கை உல்லாசத்தோடு சுழல்கிறது. பணமும், பங்களாவும், பரவசம் தரப் பளிங்கு மேனிப் பாவையரும் இருக்க அவன் ஏன் வாடப் போகிறான்? சோபன வாழ்வின் சுவைத் தோப்புகள் நடுவே அவன் வாழ்வு புதுப் பூச்சோடு சுழன்று கொண்டிருக்கிறது! மாற்றமே இல்லாத சோம்பேறி வாழ்வு!

சந்தர்ப்பம், லென்ஸ்கி என்ற ஜெர்மன் வாலிபனை அவனுக்கு நண்பனாக்குகிறது. இவன் தத்துவ நூல்களில் தனி ஆர்வமுள்ளவன்! இலக்கியச் சுவையில் ஈடுபாடுடையவன். கிராமிய வாழ்வில்தான் இன்பங்கள் நிறைந்து கிடக்கின்றன என்ற கருத்துள்ளவன்.

லென்ஸ்கி, ஒருநாள், லாரின் என்பவரின் குடும்பத்துக்கு ஆனெகனை அறிமுகப்படுத்துகிறான். பின்னால் நிகழவிருக்கும் குழப்பங்களுக்கு இங்கேதான் வித்திடப்படுகிறது. லாரினுக்கு இரு பெண்கள் — டாட்யானா, ஓங்கா என்ற இரண்டுதிராட்சைக் கொத்துகள்! அரும்பு விழாத எழில் மணக்கும் மொக்குகள்! டாட்யானாவின் காதல் பார்வை ஆனெகனை நோக்கித் தாவுகிறது. அவனைப் பார்க்கும் போதெல்லாம் பசுமை உலராத புன்னகையைச் சிந்துகிறாள். தாபம் புரளும் நீலவிழிகள் அவனைக் காணும் போதெல்லாம் களிப்பால் துள்ளுகின்றன! தன் இதயத்தில்கொப்பளிக்கும்உணர்ச்சிக் குமிழிகளைக் கடிதத்தில் கொட்டி அவன் முன் நீட்டுகிறாள். ஆனால்...? உணர்ச்சியற்ற அவனால் அவளுடைய காதலை உணர முடியவில்லை. "இன்பம் எனக்கு எட்டாத பொருள்! துன்பத்தின் காதலன் நான்! ஆம்! நான் வாழ முடியாதவன்!" என்று வேதாந்தம் பேசுகிறான். அவளுடைய மென்மையான இதயத்தில் பூத்த காதல் மலரைக் கசக்கிவிடுகிறான். டாட்யானாவின் உள்ளம் குமுறுகிறது! துயரத்தின் கரங்கள் அவளை வளைத்துக்கொள்கின்றன. அவளுடைய சோகக் குரலைக் கேட்காமல் ஆனெகன் எங்கோ திரிந்து கொண்டிருக்கிறான்.

காலம் சுழல்கிறது. பல் ஆண்டுகளுக்குப் பின் ஆனெகன் டாட்யானாவை விருந்தொன்றில் சந்திக்கிறான்.. அவள் இப்போது ஒரு பிரபுவின் மனைவி. வாலிபம் அவளிடமிருந்து தேய்ந்து கொண்டிருந்தது. காலத்தின் கீரல்கள் அவளிடம்

காணப்பட்டன! எனினும் இப்போது அவனது கண்களுக்கு அவள் சிங்கார மயிலாகக் காட்சி தருகிருள். அவளுடைய அன்புப் பார்வைக்காக—இதழோரப் புன்னகைக்காக—மொக்கு உதடுகளின் உரசலுக்காக—அவன் ஏங்குகிருன்.

ஆனல் அவளோ, அவனைச் சந்தித்தபோது பெருமூச்சு விடுகிருள். மென்மையான அந்தப் பெருமூச்சு அவள் சோகத்தை எல்லாம் வெளியில் கொண்டு வந்து போட்டது. "மாளிகை—மந்தகாச வாழ்வு — மனோகரத் தென்றல்—இவைகளை உதறித் தள்ளி விட்டு மண் குடிசைக்கு வந்திருப்பேன், அன்றைய ஆனெகன் அழைத்தால்! ஆனல்... இன்று நீ, என்னை காதல் கீதம் பாட அழைக்கிருய். இன்று நான் ஒருவனின் அலங்காரப் பொருள்! என் உடல் அவனுக்கு உரிமையாக்கப்பட்டது — ஆனல் உள்ளம் அல்ல! என்றும் என்உள்ளம்— உனக்குத்தான் நீ விரும்பினும் விரும்பாவிட்டாலும்!" —வேதனையோடு திரும்புகிருன் ஆனெகன். வாழமுடியாது போன நெஞ்சங்களிலிருந்து சோகக்குரல் எதிரொலிக்கிறது.

இது புஷ்கினின் கவிதைகளில் மிக உயர்ந்த ஓவியம். பத்துப் பாகங்கள் கொண்ட இந்த ஒப்பற்ற ஓவியத்தைத் தீட்ட பத்து ஆண்டுகள் ஆகியதாம்! இதில் வரும் டாட்யானு மறக்கவே முடியாத ஒரு உயிர்த்துடிப்புள்ள பாத்திரம். பெண்ணினத்தையே அவள் பிரதிபலிக்கிருள். பொதுவாக பெண்ணினம் உதிர்க்கும் கண்ணீரே அவள் கண்களிலிருந்து உதிர்கிறது! டாட்யானுவின் காதல் கடிதங்கள் நெஞ்சை அள்ளும் முறையில் தீட்டப்பட்டிருக்கின்றன. டாட்யானுவின் கடைசி பதில் கருத்தைக் கிளரும் வகையில் சிறந்து விளங்குகிறது. ஏறக்குறைய இந்த நூல் பைரனின் பாடல்களின் இயல்பை ஒத்திருந்தது. இக் காவியத்தின் கதையுருப்பினரோவியமும், கருத்தோவியமும், அவனுக்குப் பின்னல் வந்த பலருக்கு நல்ல தூண்டுகோலாக இருந்தன. "ஏழ்மையின் தோழனே, மண் குடிசையில் கிடந்து அவதிப்படுவோரை அணைத்து ஆதரவளிப்பது உலருக்கு அருவருப்பாகத் தோன்றுகிறது. பன்னீர் தெளித்த மஞ்சத்தில், பட்டு மெத்தையில் புரளும் உல்லாசிகளை உயர்த்திவிட மட்டும் உலகம் உவகையுடன் ஓடி வருகிறது" என்ற கருத்தை வேறெவராலும் விளக்க முடியாத வகையில் சித்தரித்து விட்டான். புஷ்கின். இந்தக் காவியத்தைப் படித்தவர்கள் புஷ்கினை எப்படிப் புகழ்வது என்று தெரியாமல் திண்டாடுகிருர்கள்!

ருஸ்லனும் லுட்மிலாவும் (Ruslan and Lutmila)—போரிஸ் கோடுனவ் (Boris GoDunov)—காக்கஸஸ் சிறையாளி (Prisoner of the Cacusus)—இவை மூன்றும் புஷ்கினின் உன்னத சிருஷ்

டிகள்! 'பனியும் புயலும்'—'இஸ்பேட் ராணி' — தளபதியின் மகள்'—'மீன் படவனும் மீனும்' ஆகியவை அவனுடைய சிறந்த சிறு கதைகள்—கட்டாயம் படிக்க வேண்டியவை! நாட்டுப்புறப் பாடல்களும் (Ballads) தெய்வக் கதைப் பாக்களும் (Fairy tales) அவனுக்குத் தனிச் சிறப்பைச் சேர்க்கின்றன. இந்தப் பகுதியில் 'போப்பும் பல்டாவும்' —'இறந்த இளவரசி' —'பொற்சேவல்'—'மாப்பிள்ளை'—ஆகியவை குறிப்பிடத்தகுந்தவை.

ரஷ்ய இலக்கியத்தை அழகாகவும், ஆடம்பரமாகவும் துவக்கி வைத்த பெருமை புஷ்கினுக்கே உரியது. அவன், தன் வாழ்வில் கண்ட கனவை—காதலின் உயர்வை—கவிதையில் காட்டினன். அரண்மனை வாழ்வும், அங்காடி வாழ்வும், இன்பமும், துன்பமும், மனிதர் இயல்பும், விலங்கின் இயல்பும் ஆகிய இயற்கையின் எல்லாத் துறைகளையும் உள்ளது உள்ளபடி காட்டினன் புஷ்கின். உலகின் எவ்வுயிரினும் கலந்து, தன்னிலே மறந்து அதன் உள்ளுணர்வையும், பண்பாட்டையும், வாழ்வையும் சித்திரித்தான் புஷ்கின். அவனுக்குப் பின் வந்த அத்தனை ரஷ்ய எழுத்தாளர்களும் இதே முறையைக் கையாண்டனர். எனவேதான் ரஷ்ய இலக்கியம் வாய்மை, அகலம், நிறைவு ஆகிய சிறப்புகளில் மற்ற இலக்கியங்களைவிட சிறந்து விளங்குகிறது.

—"தம்பி"

அறிஞரின் அறமொழிகள்

(D. E. மாசிலாமணி, விருதம்பட்டு)

8. செல்வத்தை பிறருக்காய் நல்வழியில் வாரி இறைப்பவனைப் போல் வேறு எவர்க்கும் செல்வம் அதிகம் தேவையில்லை.

—ரிக்டர்.

9. தாழ்மை என்பது கனவானுக்கும், சுயமதிப்பு என்பது ஏழை மனிதனுக்கும் ஏற்ற அணிகலனாகும்.

—எட்கார்.

10. என் குற்றங்களை பிறர் உணர்த்தினல் அதைத் திருத்திக் கொள்வேன்; பிறர் கொள்கையில் உண்மை யிருக்குமானல் அதையே பின்பற்றுவேன்.

—லிங்கன்.

11. நீ முயற்சி செய்யத் தயங்கக் கூடாத முறை கடைசியாக முயற்சி செய்யும்போதுதான்.

—சார்லஸ்

காலமும் கருத்தும்

நவம்பர் முதல் நாள்—நல்லதோர் திருநாள்!

1954ம் ஆண்டின் நவம்பர் முதல் நாள்—ஆம்—அந்த நாளை இந்திய வரலாறு மறவாது. தென்னாட்டு மக்கள் மறக்கமாட்டார்கள். பிரஞ்சு ஏகாதிபத்யத்தின் இந் நாள் பாதுகாவலர்களும் மறக்க இயலாது. அந்த நாள், விடுதலை வீரர்களின் உள்ளத்திற்கெல்லாம் உவகையூட்டும் உன்னத நாள். ஏகாதிபத்யங்களின் காலம் முடிந்துவிட்டது—இனி மன்னாதி மன்னர்கள் பலர் தலைகீழாக நின்றாலும் அவற்றின் காலத்தை நீடிக்க இயலாது என்பதை எடுத்துக் காட்டிடும் இன்ப நாள். அறப்போர் வெல்லும்—நீதி நிலைக்கும்—மக்கள் மன்றத்தின் எழுச்சிக் குரலுக்குப் போதுமான பலன் கிடைத்தே தீரும் என்கிற உண்மைகளைச் சிலைமேல் எழுத்தென நிலை நாட்டிவிட்ட எழில் நாள். ஆம்—அன்றைய தினம் தான், பிரஞ்சு ஏகாதிபத்யம், இந்திய மண்ணைவிட்டு வெளியேறுவது என்று முடிவு செய்திருக்கிறது.

நவம்பர் முதல் நாள்—அதற்குப் பின்னால், இந்தியத் துணைக் கண்டத்தில், எந்தப் பகுதியிலும் பிரஞ்சு ஆட்சி இருக்காது. புதுச்சேரி, காரைக்கால், மாஹி, ஏனாம் முதலிய எல்லாப் பகுதிகளிலிருந்தும் பிரஞ்சு ஆதிக்கம் அன்றையதினம் வெளியேறி விடுகிறது.

பதினேழு, பதினெட்டாவது நூற்றாண்டுகளில், இந்திய மண்ணின்மீது, பிரஞ்சு ஏகாதிபத்யம், பிரிட்டிஷ் ஏகாதிபத்யம், போர்த்துகீசிய ஏகாதிபத்யம், டச்சு ஏகாதிபத்யம் ஆகிய நான்கும் தங்கள் கால்களை ஊன்றின. இந்திய மண்ணின் பற்பல பகுதிகளை, அந்தந்தப் பகுதிகளின் மன்னர்களிடமிருந்து, சில சமயம் போரிட்டும், சில சமயம் ஏமாற்றியும், சில சமயம் மிரட்டல் உருட்டல்களின் மூலமும், சில சமயம் மித்திரபேத சூழ்ச்சி முறைகளின் மூலமாகவும், இந்த ஏகாதிபத்யங்கள் பெறலாயின.

அது அது கைப்பற்றிய பகுதிகளை அது அது வைத்துக்கொள்வதோடு திருப்தியடையாமல் இந்த நான்கு ஏகாதிபத்யங்களும் ஒன்றுடன் ஒன்று சீறிப் பாய்ந்து சிறுத்தைகளெனப் போராடத் தொடங்கின.

அத்தகு போராட்டங்களின் விளைவாக, இறுதியில், பிரஞ்சுக்காரர்களுக்கென்று, இந்தியாவில் கிடைத்த பகுதிகள் ஐந்து.

கல்கத்தாவுக்கருகில் இருக்கிற சந்திரநாகூர் என்பது அவற்றில் ஒன்று.

கடலூருக்கு அருகில் உள்ள புதுச்சேரி மற்றொன்று. புதுச்சேரி வட்டாரத்தின் மக்கள் தொகை, 222,000. பரப்பளவு, 105 சதுர மைல்.

தஞ்சை மாவட்டத்தை ஒட்டியவாறு உள்ள காரைக்கால், மூன்றாவது பகுதி. அதன் மக்கள் தொகை 70,000. பரப்பளவு, 53 சதுர மைல்.

மலையாளப் பகுதியில் உள்ள மாஹி என்பது இன்னொரு பகுதி. இதன் மக்கள் தொகை 18,000. பரப்பளவு 23 சதுர மைல்.

ஏனம் என்பது மற்றொரு மிகச் சிறு பகுதி. இதன் மக்கள் தொகை 5000 தான். பரப்பளவு 5 சதுர மைல்.

பிரஞ்சுக்காரர்களின் ஆதிக்கத்தில் இருந்துவந்த இந்தப் பகுதிகள் அத்தனையையும் சேர்த்துப் பார்த்தால், இவற்றின் மக்கள் தொகை, 3,20,000 ஆகும். பரப்பளவு 196 சதுர மைல்களாகும்.

இந்திய மக்களும் மன்னர்களும் ஏமாந்திருந்த காலத்தில் இந்தப் பகுதிகளைப் பிரஞ்சு ஏகாதிபத்ய வாதிகள் கைப்பற்றிக் கொண்டனர் என்பதைத் தவிர, இந்தப் பகுதிகளில் பிரஞ்சுக்காரர்களுக்கு எந்த வித உரிமையும் கிடையாது என்பது தெளிவு.

1947ம் ஆண்டு, ஆகஸ்டு திங்கள், 15ம் நாள், பிரிட்டிஷ் ஏகாதிபத்யம் இந்தியாவைவிட்டு வெளியேறியபோது, இந்தப் பிரஞ்சு ஏகாதிபத்யமும் கூடவே வெளியேறி இருக்க வேண்டியதுதான் நியாயம்.

அம்மியும் குழவியுமே ஆகாயத்தில் பறக்கின்ற நேரத்தில், தும்பும் தூசும் நாங்கள் மட்டும் பறக்க மாட்டோம் என்று கூறினால் அது என்ன நடக்கிற காரியமா?

இரண்டு நூற்றாண்டுக் காலம் அகில உலகத்தையும் ஆட்டிப் படைத்துவந்த மாபெரும் பிரிட்டிஷ் ஏகாதிபத்யமே, புன்னகை பூத்த முகத்துடனே, போய் வருகிறேன் நண்பர்களே என்று சொல்லியாகிவிட்ட பிறகு, சுண்டைக்காய் அளவுள்ள பிரான்சு, நான் மட்டும் வெளியேறமாட்டேன் என்று சொன்னால், கேட்கிறவர்கள் கைகொட்டிச் சிரிக்க மாட்டார்களா?

சிரிக்கத்தான் செய்தார்கள் என்றாலும் பிரான்சு, அப்படித்தான் சொல்லிக் கொண்டிருந்தது இதுநாள் வரையில்.

சொல்லிக் கொண்டிருந்தது பிரான்ஸ்—ஆனால் அதே நேரத்தில், இந்த ஐந்து பகுதி மக்கள், விடுதலை பெறுவதற்கான வீர முயற்சிகளில் ஈடுபடலாயினர்.

முயற்சி பயனளித்தது. சந்திர நாகூர், 1949ம் ஆண்டு ஜூன் 19ம் நாள் விடுதலை பெற்றது.

ஏனைய நான்கு பகுதிகளைப் பொறுத்தமட்டிலும், ஏனோ தெரியவில்லை, பிரஞ்சு ஏகாதிபத்யம், வீண் பிடிவாதம் காட்டி வந்தது. விடுதலை வாழ்வைத் தரமுடியாது என்று வீம்பு பேசி வந்தது.

பார்த்தனர் மக்கள். பொங்கி எழுந்தனர். சுயராஜ்யம் எங்கள் பிறப்புரிமை — பெற்றே தீருவோம் அந்தப் பெரும் பேற்றை என்று இடிமுழக்கம் எழுப்பினர். அலை அலையாகத் திரண்டெழுந்து, அறப்போர் தொடுத்து அஞ்சா நெஞ்சுடன் அடக்குமுறைகள் அத்தனையையும் மகிழ்வுடன் ஏற்கலாயினர். சிறை, சித்திரவதை, தடியடி, கண்ணீர்ப்புகை, எல்லாவகைக் கருவிகளையும் பயன்படுத்திப் பார்த்தது பிரஞ்சு ஆதிக்கம். அடக்க அடக்க ஓங்கி எழும் பந்துபோல, அடக்குமுறை வலுக்க வலுக்க, அறப்போர் முழக்கம் பல மடங்கு வலிவும் பொலிவும் பெற்று ஓங்கி வளரலாயிற்று. விடுதலை இயக்கம் வளர வளர, பிரஞ்சு ஆதிபத்யத்தின் பிடி தளரலாயிற்று. இப்போது, இறுதியில், எல்லாப் பகுதிகளுக்கும் விடுதலை தந்துவிட்டு வெளியேற ஒப்புக்கொண்டுவிட்டது பிரஞ்சு ஆட்சிப் பீடம். நவம்பர் முதல் தேதியன்று வெளியேறுகிறது அந்த ஆட்சி. ஆகவேதான் நாம் கூறுகிறோம் — நவம்பர் முதல் நாள் நல்லதோர் திருநாள் என்று. யார் இதை மறுக்க முடியும்?

கவனம் திரும்புகிறது—
காரியமும் நடக்கட்டும்!

"ஆரம்ப ஆசிரியர்களுக்கு இதுபோது தரப்பட்டுவருகிற ஊதியம் போதுமானதாக இல்லை என்பதையும், அவர்களின் ஊதியத்தை உயர்த்த வேண்டியது மிகவும் அவசியம் என்பதையும், மத்திய அரசாங்கம், மாகாண அரசாங்கங்களுக்குப் பலமுறை எடுத்துக்காட்டியிருக்கிறது.

"மத்திய அரசாங்கம் மட்டுமல்ல, மத்தியக் கல்வி ஆலோசனைக் குழுவினரும் (Central Advisary Board of Education) இதே வகைக் கருத்தை மாகாண அரசாங்கங்களுக்குத் தெரிவித்திருக்கின்றனர்.

"என்றாலும் மாகாண அரசாங்கங்கள் இந்தத் துறையில் திருப்திகரமான நடவடிக்கை எதையும் இதுவரை எடுத்ததாகத் தெரியவில்லை. எனவே ஆரம்ப ஆசிரியர்களின் ஊதிய உயர்வு சம்பந்தமாக, மாகாண அரசாங்கங்களுக்கு எந்தவித உதவியைச் செய்யலாம் என்று மத்திய அரசாங்கம் ஆலோசித்து வருகிறது"

இவ்வாறு பேசியிருப்பவர் டாக்டர் ஸ்ரீமாலி, திருவாளர் ஸ்ரீமாலி, தன்னுடைய சொந்தப் பொறுப்பில் அல்ல இவ்வாறு பேசியிருப்பது.

மத்திய அரசாங்கத்தின் சார்பிலேதான், அதுவும் பாராளுமன்றத்தில்தான், இத்தகு கருத்துரையை அளித்திருக்கிறார்.

டாக்டர் ஸ்ரீமாலி, ஏறத்தாழ, மத்திய அரசாங்கத்தின் துணைக் கல்வி அமைச்சர். கல்வியமைச்சரின் பாராளுமன்றச் செயலாளர் (Parliamentary Secretary to the Education Minister) என்கிற நிலையில் இருந்து வருபவர்.

ஆகவே டாக்டர் ஸ்ரீமாலி இவ்வாறு பேசியிருக்கிறாரென்றால், மத்திய அரசாங்கமே இப்படிப் பேசியிருக்கிறது என்றுதான் பொருள்.

ஆரம்ப ஆசிரியர்கள் இருக்கும் திக்கு நோக்கி மத்திய அரசாங்கத்தின் பார்வை முதன் முதலாகத் திரும்பியிருக்கிறது என்பதைத்தான், டாக்டர் ஸ்ரீமாலியின் கருத்துரை அறிவிக்கிறது.

ஆரம்ப ஆசிரியர்கள் என்று ஒரு கூட்டம் இருக்கிறது— அவர்களின் ஊதியம் மிக மிகக் குறைவாக இருக்கிறது — அந்த ஊதியத்தை உயர்த்த வேண்டியது மிக மிக அவசியம் என்பதையெல்லாம் இதுவரை தெரிந்து கொள்ளாமலேயிருந்த டில்லி அரசாட்சி, இப்போதாவது தெரிந்துகொள்ள முன்வந்திருக்கிறதே, அதற்காக நாம் மகிழ்ச்சி அடைய வேண்டியதுதான்.

ஆரம்ப ஆசிரியர்களின் ஊதியப் பிரச்சினையை, தான் உணர்ந்து கொண்டது மட்டுமல்லாமல், மாகாண அரசாங்கங்களுக்கும் உணர்த்த முன்வந்ததே டில்லி ஆட்சி, அது மிக மிக மகிழ்ச்சியூட்டும் நிகழ்ச்சியாகும்.

ஆமாம் மத்திய அரசாங்கத்தின் கவனம், ஆரம்ப ஆசிரியர்கள் பக்கம் திரும்பத் தொடங்கியிருக்கிறது — மகிழ்கிறோம் இது கண்டு—மகிழ்வதுதானே முறை —ஆனால் கவனம் திரும்பினால் மட்டும் போதுமா? காரியமல்லவா நடக்கவேண்டும்?

இப்போது உள்ள நிலைமைப்படி, ஹையர்கிரேட் பயிற்சி பெற்ற ஆரம்ப ஆசிரிர்கள் மாதம் 30 ரூபாயும், செகண்டரி கிரேட் பயிற்சி பெற்ற ஆரம்ப ஆசிரியர்கள் மாதம் 40 ரூபாயும் அடிப்படை ஊதியமாகப் பெறுகிறார்கள்.

விலைவாசிகளெல்லாம் விஷம் போல ஏறிக் கிடக்கும் இந்த விசித்திர சகாப்தத்தில், முப்பதையும் நாற்பதையும் வைத்துக் கொண்டு ஒரு குடும்பத்தை நடத்துவது இயலாத காரியம் என்பதை, நாம் சொல்லித் தெரிந்து கொள்கிற அவசியம், மத்திய அரசாங்க மந்திரிகளுக்கு இருக்க முடியாது.

எனவே, **உடனடியாக, ஆரம்ப ஆசிரியர்கள் அத்தனைப் பேருக்கும் ஆளுக்குப் பத்து ரூபாய் என்கிற அளவிலா**

உ08971

வது ஊதியத்தை உயர்த்தியாக வேண்டும்.

மாகாண அரசாங்கங்களிடம், இந்த ஊதிய உயர்வைக் கொடுப்பதற்குப் போதுமான பணம் இல்லாத காரணத்தால் இந்த ஊதிய உயர்வை, மத்திய அரசாங்கமே கொடுக்க வேண்டும்

கொடுக்கமுடியும்–மனம் இருந்தால். கொடுத்தே ஆகவேண்டும் —ஆசிரியர்களின் நிலை சீர்திருந்த வேண்டுமானால். கொடுப்பது தான் நியாயம் — நம்முடைய நாடும், நாட்டின் கல்வியும், கல்வியின் தரமும் முன்னேற வேண்டுமானால்.

ஆனால் கொடுப்பார்களா? வெறும் கேள்வி அல்ல இது. வாழ்க்கையின் சுமைகளைத் தாங்க முடியாமல் வேதனைப்படுகின்ற ஆயிரமாயிரம் ஆரம்ப ஆசிரியர்களின் இதயக் குமுறல்.

என்ன விடை தரப்போகிறார்கள் மத்திய அரசாங்கத்தினர்? என்ன விடை?

இந்தத் திட்டம் வேண்டாம்!

ஆம் — இப்படித்தான் நாம் சொல்லவேண்டியிருக்கிறது அமைச்சர் சுப்ரமண்யனார் அறிவித்திருக்கிற திட்டம் ஒன்றைப் பற்றி அறிய வருகிறபோது.

ஆரம்ப ஆசிரியர்களின் பொருளாதார நிலையை உயர்த்துவதற்காகவும், ஆரம்பப் பள்ளி மாணவர்களுக்கு விவசாயத்துறையில் நடைமுறைப் பயிற்சி அளிப்பதற்காகவும், கிராமப் பகுதிகளில் உள்ள ஒவ்வோர் ஆரம்பப் பாடசாலைக்கும் ஐந்து ஏகர் நிலம் அளிக்கலாமா என்பதைப் பற்றி சென்னை ஆட்சியாளர்கள் ஆலோசித்து வருகிறார்களாம்.

அண்மையில் உடுமலைப் பேட்டையில் பேசுகின்றபோது, கல்வி அமைச்சர் சுப்ரமண்யம் இது போலத் தெரிவித்திருக்கிறார்.

சுருக்கமாகச் சொல்லுகிறோம்— இந்தத் திட்டத்தால் எவருக்கும் நன்மை இல்லை—எனவே இது பற்றிய ஆலோசனையை உடனடியாகக் கைவிட்டுவிடுவது மிகவும் நல்லது.

ஒரு பள்ளிக்கூடத்திற்கு ஐந்து ஏகர் நிலத்தைக் கொடுத்து விடுவதன் மூலம், அந்தப் பள்ளியிலுள்ள ஆரம்ப ஆசிரியர்கள் அத்தனை பேரின் பொருளாதார நிலையும் உயர்ந்துவிடும் என்று எதிர்பார்ப்பது வெறும் கனவாகத்தான் முடியுமே தவிர நடைமுறை உண்மையாக ஒரு நாளும் ஆகாது.

விவசாயத் தொழிலில் ஈடுபடுவதற்கான நேரமோ, மனப் பக்குவமோ, பயிற்சியோ ஆரம்ப ஆசிரியர்களுக்கு இருக்க முடியாது. அப்படியே அவர்கள் விவசாயத் துறையில் ஈடுபட்டாலும், அதனால், கல்வித்துறையில் அவர்கள் காட்டவேண்டிய கவனம், நிச்சயமாகக் குறைய்த்தான் செய்

(6–ம் பக்கம் பார்க்க)

Edited, Printed and Published by P. Veeraraghavan at the 'Wenkatesan Press' 94/95, New St. Mannady, Madras-1.

இயற்கைப் பாடமும் தோட்ட வேலையும்

(M. விவேகானந்தா, B. Sc., L.T.)

	புத்தகத்தின் விலை			கெஜட் பக்கம்	அங்கீகாரமான தேதி
மூன்றாம் வகுப்பு	0	5	0	...	...
நான்காம் வகுப்பு	0	7	0	18	19–5–'54
ஐந்தாம் வகுப்பு	0	8	0	18	19–5–'54

புதிய தேச ஆட்சி முறை

(D. சிவசங்கரராவ், B.A ,L.T.)

மூன்றாம் வகுப்பு	0	5	0	11	19–5–'54
நான்காம் வகுப்பு	0	7	0	8	19–5–'54
ஐந்தாம் வகுப்பு	0	8	0	8	19–5–'54

புதுமுறை சங்கக் கணிதம்

K. வீராசாமி, B.A.,L.T ,

மூன்றாம் வகுப்பு	0	8	0	14	19–5–'54
நான்காம் வகுப்பு	0	10	0	14	19–5–'54
ஐந்தாம் வகுப்பு	0	12	0	14	19–5–'54

நம் நாட்டு வரலாறு

M. தக்ஷிணாமூர்த்தி, B. A., B. T.
T. S. உமாபதி, M. A., L. T..

மூன்றாம் வகுப்பு	0	5	0	11	19–5–'54
நான்காம் வகுப்பு	0	7	0	8	19–5–'54
ஐந்தாம் வகுப்பு	0	9	0	10	19–5–'54

பாலர் இந்து தேச சரித்திரம்

M. பாலசுப்பிரமணியம், M. A.

ஐந்தாம் வகுப்பு	0	9	0	7	19–5–'54

சிறுவர் பூகோளம் (Tamil)

T. S. உமாபதி, M. A., L. T.

இரண்டாம் வகுப்பு	0	5	0	13	19–5–'54

V K. சேஷாத்திரி, B, A.,L. T.

மூன்றாம் வகுப்பு	0	7	0	12	19–5–'54
நான்காம் வகுப்பு	0	10	0	12	19–5–'54
ஐந்தாம் வகுப்பு	0	12	0	12	19–5–'54

Mother India English Reader Primer - I 0 5 0

பாலர பூகோளமு (Telugu)

ஐந்தாம் வகுப்பு	0	12	0	12	19–5–'54

Regd No. M 1508

உயர்தர ஆரம்பப் பாடசாலைகளுக்கு

(For Higher Ele Sohools)

வீரபாண்டியன் தமிழ் வாசகங்கள்

(Vidwan - V. Subramaniam)

ஆறாம் வகுப்பு	0	12	0	23	19-5-'5
ஏழாம் வகுப்பு	0	14	9	41	19-5-'5

புதுமுறை சரிதக் கணிதங்கள்

(V. K. Seshadri, B. A., L. T., & V. S. Leela B. A., B. T.)

ஆறாம் வகுப்பு	1	2	0	15	19-5-'5
ஏழாம் வகுப்பு	1	4	0	15	19-5-'5
எட்டாம் வகுப்பு	1	4	0	16	19-5-'5

சமூக நூல்

(T. S. Umapathy, M. A., L. T.)

ஆறாம் வகுப்பு	1	4	0	38	19-5-'54
ஏழாம் வகுப்பு	1	8	0	38	19-5-'54
எட்டாம் வகுப்பு	1	8	0	38	19-5-'54

அருமையான முறை இலக்கணமும் உரை நடை [illegible]க்கமும்

ஆறாம் வகுப்பு	0	12	0	41	19-5-'54
ஏழாம் வகுப்பு	0	12	0	41	19-5-'54
எட்டாம் வகுப்பு	0	12	0	41	19-5-